பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஆகஸ்ட் 2023



## தேயிலை தேசத்து சாமான்யனுடன்...

**சாமான்யமாய்... சில வினாக்கள்...**

பக்கம் 18



MUTUR JMI
PUBLICATION
jmi
MUTUR
Offset Printing & Photocopy Services
MINIMUM QUANTITY
100
40% OFF
Island Wide Delivery Available
FREE DELIVERY
Off-Set Printing
BOOK BINDING
PRINTING
Offset Printing
A4 - 5.50
A3 - 12.50
Book Binding
A4 - 3.40
A3 - 12.20
B5 - 10.00
Color Printing
A4 - 40.00
A3 - 100.00
Mutur JMI
Contact Now
+94 77 1020030
+94 262238593
Our Office
More Information

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

உதயம் 1972 – ஆகஸ்ட் 2023

ஆசிரியர் / வெளியிடுபவர் :

**அமின் மொஹமெட்**

இணையாசிரியர் :

**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**

நிர்வாக ஆசிரியர் :

**சஃபி மொஹமெட்**

ஆசிரியர் குழு :

**ஹிப்ஸீர் ரஹ்மான்**

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

**கவிஞர் நெல்லை உலகம்மாள்**

**பாவலர்மணி இராம வேல்முருகன்**

**பாவலர் தென்றல் கவி**

**வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்**

**கவிஞர் பொன்மணிதாசன்**

**கவிஞர் ஈழபாரதி**

ஆலோசகர்கள் :

**பாட்டரசர் கி. பாரதிதாசன்**

**கவிதாயினி சக்தி ஜோதி**

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண்
+91 9952529619 ( கட்செவி)
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

இலங்கையில் இவ்விதழை தபாலில் பெற்றுக் கொள்ள அணுகவும் ... 07710 20030

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்புத் தமிழ் நெஞ்சங்களுக்கு வணக்கம்!

'நெஞ்சோடு நெஞ்சம்' ஊடாக உங்களை எல்லாம் சந்திப்பதையிட்டு மகிழ்ச்சி! காலம் இறக்கை கட்டிப் பறக்க, இன்னுமொரு சுதந்திர தினத்தைக் கொண்டாட, நமது இந்திய தேசம் தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், நாமெல்லாம் சிந்தித்துப் பார்க்கவும் பல விடயங்கள் உள்ளன. சுதந்திரம் என வருகையில், நம் நாடு வெள்ளைக்காரரிடமிருந்து பெற்ற சுதந்திரத்தை மட்டும் கருத்தில் கொண்டால் போதுமா?

எழுத்தாளர்களாகிய எமது எழுத்துச் சுதந்திரம் போன்றே பெண் சுதந்திரம், கல்விச் சுதந்திரம், பெண் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் சுதந்திரம், பயணச் சுதந்திரம், வாழும் வாழ்க்கையில் சுதந்திரம் என்பவற்றையும் உற்றுநோக்கி ஆழச் சிந்திப்போமாயின், நாம் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளோம் என்பதை பறைசாற்றக்கூடிய எத்தனையோ விடயங்கள் நம்மைச் சுற்றி நிகழ்வதை அவதானிக்கலாம். மனதுக்கு வேதனை அளிக்கக் கூடிய இவைகளால் சமூகத்துக்கே பாரிய விபரீதங்கள் ஏற்படுகின்றன. இம்மாதிரியான துர்ச்சம்பவங்களை ஓரிரு வாரங்களில் மறந்து மறுபடி இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி விடுவதும், காலக்கொடுமையே!

நான் எப்போதும் சொல்வது போல சமூக சீர்திருத்தம் என்பது தனிமனித ஒழுக்கத்தில் இருந்தே ஆரம்பிக்கிறது. எங்கு சென்றாலும், மொபைல் போனிலேயே மூழ்கிவிடாமல், ஒவ்வொருவரும் சுற்றுப்புறம் நடப்பதை விழிப்புணர்வுடன் உற்றுக் கவனித்து அதற்கேற்ற முறையில் சமயோசிதமாகச் செயல்படுவதன் மூலம் பல இடர்களைத் தவிர்க்கலாம். ஆபத்துகள் வருமுன்னரே தடுத்து விடுவதன் மூலம், நான் மேற்குறிப்பிட்ட சுதந்திரத்தை அவரவர் அனுபவிக்கச் செய்யலாம். இதற்கான எளிமையான வழி சக மனிதனுக்கும் உணர்வுகள் நம்மைப் போன்றதே என்பதை உணர்ந்து கொண்டாலே போதும். யாரும் யாரையும் துன்புறுத்தாமல் வாழலாம்.

சுதந்திரம் என்பது எமது வாழ்வியல் முறைகளிலே தங்கியுள்ளது. அதனால் சுயநலம் தவிர்த்து பொதுநலமாக சிந்திக்க ஆரம்பித்தாலேயே இவைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, சுத்தமான சுதந்திரக் காற்றை சகலரும் அனுபவிக்கச் செய்யலாம். மாற்றங்களை எதிர்பார்த்துக் காத்திருக்காமல், எம்மிலிருந்தே மாற்றங்களைத் தொடங்குவோம். அப்போது தான் உண்மையான சுதந்திரக் காற்று இம்மண்ணைத் தொட்டு மனுக்குலமும் புனிதம் காணும்.

உங்களின் கருத்துக்களோடு அடுத்த இதழில் சங்கமிப்போம்.

நன்றி!

என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# கனவுகள் நனவாக..!

Dr.ஃபஜிலா ஆசாத்
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

சிறு வயதில் விபத்து ஒன்றில் ஏற்பட்ட அதிர்ச்சியில் சரியாக பேசும் திறனை இழந்தவன் நான். என் குறையை பெரிது படுத்தாமல் என் பெற்றோர் எத்தனை தான், நம்பிக்கை ஊட்டி எனக்குள் கனவுகளை விதைத்தாலும், எனக்கு ஏற்பட்ட இழப்பை நினைக்கையில் உலகமே இருண்டு விடுகிறது. என் கனவுகளை துரத்தும் நம்பிக்கை வடிந்து விடுகிறது. என் இயாலமை நினைத்து சதா வேதனையில் உலவும் எனக்கு சாதனை என்பது எட்டாக் கனவு தானே?

இயலாமை என்பது ஒரு "மாயை". ஏதேனும் ஒன்றில் நீங்கள் சிறந்தவராக இருந்தாலும் உங்கள் சேவை இந்த சமூகத்திற்கு தேவை என்கிறார் "மார்டினா நவ்ரத்திலொவா"

உங்களிடம் என்ன இல்லை என்று பார்த்தீர்களே... உங்களிடம் என்ன இருக்கிறது என்று பார்த்தீர்களா?!

நம்மிடம் இருக்கும் திறமைகளை விட நம்மிடம் இருக்கும் குறைகளையே நினைத்து தன்னைத்தானே சுருக்கிக் கொள்வதுதான் பொதுவான மனித இயல்பாக இருக்கிறது

'எப்படி இருந்த நான் இப்படி ஆகி விட்டேனே..!' என்று உங்களுக்குள் வருந்து வதால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை மட்டுமே இது. அந்த ஒன்றை மட்டும் நீங்கள் வென்று விட்டால், உங்களால் வெல்ல முடியாதது என்று எதுவுமே இல்லை என்பதை நீங்களே புரிந்து கொள்வீர்கள்.

இயலாமை என்பது வெறும் முயலா மையே...! குறை என்பது உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடுவதே. உங்களிடம் என்ன குறை இருக்கிறது என்று பார்ப்பதை விட்டும் என்ன நிறை இருக்கிறது என்று பாருங்கள் உங்கள் வாழ்க்கையின் அர்த்தம் உங்களுக்கு புரியும் என்கிறது வாழ்வியல்.

1870 இல் நியுயார்க் நகரின் பிரபல



இன்ஜினியர் 'ஜான் ராப்லிங்', நியுயார்க் நகரை அதன் சுற்றி இருக்கும் தீவுகளோடு இணைக்கும் பாலம் ஒன்றை கடலுக்கு மேல் கட்டும் பெரும் கனவு கண்டார்.

"உங்கள் தூக்கத்தில் வருவதல்ல கனவு கள், அவை உங்கள் தூக்கத்தை கலைக்க வேண்டும்" என்ற ஏவுகனை வீரர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் கூற்று போல், நகரை சுற்றி தனித்தனியாக அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும் அழகிய தீவுகள் அவர் தூக்கத்தைக் கலைக்கிறது. இவற்றை நகரோடு இணைப்பதால், மக்களுக்கும் நாட்டுக்கும் விளையக் கூடிய நன்மைகள் அவர் சிந்தனையைத் தூண்டுகிறது.

பாலம் அமைப்பதென்பது பள்ளம் தோண்டு வது போல் இன்று மிக சாதாரண விஷயம். ஆனால் தொழில் நுட்பம் அதிகம் வளார்ச்சி அடையாத அந்த கால கட்டத்தில் அது பகீரத முயற்சி. வெற்றுக் கனவு. ஆனால் அந்த கனவை நனவாக்கத் துடிக்கிறார். 'ஜான் ராப்லிங்'. யாருமே உதவிக்கு முன் வராத அந்த நேரத்திலே, இளம் இன்ஜினியர், தன் மகன் வாஷிடன் உதவியோடு, பாலம் கட்ட முடிவு செய்து, விடாமுயற்சியோடு செயல் படுகிறார்.

பாலம் எழுந்ததோ இல்லையோ, ஒன்று மாற்றி ஒன்றாய், ஓராயிரம் பிரச்னைகள், அந்த கடலலை போல் எழ, ஒரு நாள், கடலை சுற்றிலும் நடந்த கட்டுமானப் பணிகளில் நடந்த விபத்து ஒன்றில், ஜான் இறந்து விடுகிறார், அவர் மகன் வாஷிங்டன் பெரும் இழப்புகளுக்கு ஆளாகிறார். அவர் உடல் நிலை பெரிதும் பாதிக்கப்படுகிறது. கால்கள் செயலற்றுப் போகிறது. வாய் பேச முடியவில்லை. ஒரு விரல் மட்டுமே வேலை செய்ய, கைகளை அசைக்க முடியவில்லை. தடுத்தவர்கள் எள்ளி நகையாடுகிறார்கள்.

அவ்வளவு தானா...! பட்ட சிரமங்களும், எடுத்த செயல்களும், வீண் முயற்சிகளா...?!

உடலும் மனமும் தளர்ந்த அந்த நேரத்தில், இன்ஜினியர் வாஷிங்டன் முன், இப்பொழுது இரண்டே இரண்டு வாய்ப்புகள். இப்படி ஆகி விட்டதே,..' என தனக்குள் புதைந்து, வருந்தி, எஞ்சி இருக்கும் தன் உயிரை கையில் பிடித்துக் கொண்டு, மிஞ்சி இருக்கும் வாழ்க்கையை ஒரு மூலையில் கழிப்பது. அல்லது 'என் கை, கால்கள் வேலை செய்யாவிட்டலும் என் உயிர் எனக்கு மிச்சமிருக்கிறது', நான் வீழ்ந்து போகாமல், என் கனவுகளை நனவாக்குவேன். என் வாழ்க்கையில் நான் வரலாறு படைப்பேன். என் பொழுது என்னோடு மட்டும் முடிந்து போகாமல், இந்த மண்ணுக்கு பலனாய் அமையவேண்டும் என மீண்டு எழுவது,

அவர்..., மீண்டு உறுதியோடு எழுகிறார்.

பிரச்னைகள் பல இருக்கத்தான் செய்கிறது. ஏற்பட்ட இழப்புகள் வலிக்கத் தான் செய்கிறது. ஆனால் இந்த பாலம் மட்டும் கட்டப்பட்டு விட்டால் வர்த்தகம், தொழில், உல்லாசம் எல்லாமே செழித்திடுமே.!. நல்லது கெட்டதை அலசி ஆராய, ஆராய, பாலம் கட்டும் ஆசை, அந்த சூழலிலும் அவருக்கு கூடியதே தவிர, சிறிதும் குறையவில்லை.

அவர் எந்த குழப்பமும் இல்லாமல், பாலம் கட்டுவதை தொடர்ந்து செய்வதா, விட்டுவிட்டு ஒதுங்குவதா, என்ற கேள்விக்கு உடன், முற்றுப் புள்ளி வைத்து விட்டு, தெளிவான சிந்தனையோடு, தொடர்ந்து செய்வது என்று ஒற்றை முடிவெடுக்கிறார். பிரச்னைகளைக் கூறு போட்டு சீறியவர்கள் முன் காதுகளை இறுக மூடிக் கொள்கிறார்.

தன் உடல் நிலை பாதிக்கப்பட்ட இந்த சூழலிலே, தன் கனவுப் ப்ராஜக்டை எப்படி நடைமுறைப் படுத்துவது என்று மட்டும் நேர்மறை எண்ணத்தோடு பிரச்சினைகளை அணுகுகிறார். அவரால் செய்ய முடியாதது எத்தனை இருந்தாலும், அவரால் செய்ய முடிந்தவை, அவரை உந்தித் தள்ளுகிறது.

தன்னிடம் என்ன இல்லை என்று பார்ப்பதை விட்டு, தன்னிடம் என்ன இருக்கிறது என்று பார்க்கிறார். தன்னால் பேச முடியாது. ஆனால், சிந்திக்க முடிகிறது. தன்னால் நடக்க முடியாது. ஆனால் மனைவி உதவியை நாட முடியும். தன் கைகள் வேலை

செய்யவில்லை. ஆனால் ஒரு விரலை அசைக்க முடிகிறது.

முன்பு போல் அவரால் இன்று பாலப் பணிகள் எதையும் நின்று செய்ய முடியாது. ஆனால், அன்று போல் இன்றும் சிந்திக்க இயல்கிறது. ''என்னால், என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க முடிகிறது. அந்த யோசனையை எந்த வழி மூலம் எத்தி வைக்க முடியுமோ அந்த வழி மூலம் எத்தி வைத்து, இதை நல்ல முறையில் செய்து முடிப்பேன்'' என்று உறுதியோடு செயல் படுகிறார்.

முதலில் தன் அன்பு மனைவியின் உதவியை நாடுகிறார். தன்னுடைய ஒற்றை விரலால் தன் கைகளில் ஒரு மொழியை ஏற்படுத்தி, தான் நினைப்பதைதன்மனைவிக்குஎத்திவைக்கிறார். என்ன கற்றுக் கொள்ள வேண்டுமோ அதை மனைவியை கற்றுக் கொள்ள அனுப்புகிறார். மற்ற இன்ஜினியர்களை வரவழைத்து மனைவி மூலமாக அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை எடுத்து சொல்கிறார்.

தன்னால் அந்த பாலம் இருக்கும் இடத்திற்கு போக முடியாதென்று, அந்த பாலத்தின் மாதிரி ஒன்றை வீட்டில் செய்து வைத்து நடைமுறைப் படுத்த வேண்டிய திட்டங்களை அங்கிருந்தே, தீட்டுகிறார். எங்காவது ஒரு பிரச்னை வந்ததென்று சைட் இன்ஜினியர்கள் சொன்னால், வீட்டில் உள்ள அந்த "மாதிரி" கட்டிடத்தை வைத்து, என்ன செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும், என்று ஆராய்ந்து, சைட் இஞ்சினியர்களை வரவழைத்து, அவர்களிடம் மனைவி மூலமாக கலந்துரையாடி, சாத்தியங்களை அலசி, தீர்வு களை எத்தி வைக்கிறார்.

இப்படி தனக்கான ஒரு டீமை உருவாக்கி, அதற்கு தலைமையாக செயல்பட்டு, விருப்ப மும் விடாமுயற்சியும் பொங்கி வழிய பதிமூன்று வருடங்களில் அந்த பாலம் கட்டி முடிக்கப் படுகிறது.

எட்டாவது உலக அதிசயம் எனப் போற்றப்பட்ட, உலகிலேயே நீண்ட தொங்கு பாலம் என்ற சரித்திரம் படைத்த, **"ப்ரூக்லீன் பாலம்"** என்று பெயர் சூட்டப்பட்ட, தனி மனிதனின் விடாமுயற்சியில் வீரியம் பெற்று எழுந்த, அந்த பாலம் இன்றும் நியுயார்க் நகரின் புகழ்மிக்க அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

அந்தப் பாலம் பதிமூன்றே வருடத்தில் முடிந்து விட்டது. ஆனால் அது விட்டு சென்ற பாடம் பல நூறு ஆண்டுகள் கழித்தும் நம் முன்னால் நிற்கிறது.

எந்த பிரச்னையும் பெரிய விஷயம் இல்லை, என் கனவுகள் எனக்கு பெரிதாகத் தோன்றும்போது, என் வெற்றிகள் என் கண் முன்னால் நிற்கும்போது, என்று சாதித்து காட்டி விட்டு போயிருக்கிறார், கை கால்கள் முடங்கிப் போன, வாய் பேச முடியாத ஒருத்தர்.

ஆனால், பெரும்பாலும் நாம் என்ன செய்கிறோம், வரலாறு படைப்பதற்கென்று இல்லை, நம் அன்றாடவாழ்க்கையை வாழ்வ தற்கே, நம்மிடம் என்ன இருக்கிறது என்று பார்ப்பதை விட்டும், நம்மிடம் என்ன இல்லை என்று தான் பார்க்கிறோம். அன்று மட்டும் இது நடக்காமல் இருந்திருந்தால்... என் பெற்றோர் மட்டும் என்னை நன்றாக படிக்க வைத்திருந்தால்... என் நண்பர் மட்டும் எனக்கு அந்த உதவி செய்திருந்தால், இந்த சூழல் மட்டும் இப்படி ஆகாமலிருந்தால், என்று ('if') இஃப், ('But') பட் இரண்டையும் மட்டுமே நம் தோல்விகளுக்கு காரணமாக முன் வைக்கிறோம்.

அதே நேரம்... இந்த பிரச்னை என் கனவுகளுக்கு எந்த விதத்தில் இடையூறாக இருக்கிறது, இதற்கு வேறு வழி, வகை இருக்கிறதா, என்று மாற்றி யோசித்தால், எந்த பிரச்னையும், உங்கள் கனவுகள், 'நனவாக', தடங்களாக நிற்காமல் தவிடு பொடியாகிவிடும். வெற்றி உங்களை சட்டென பற்றிக் கொள்ளும். வேதனைகள் எல்லாம் சாதனையாகி விடும். உங்கள் வலிகள் பலருக்கும் வழி சொல்லும்.

■



# சுந்தரியே முந்திரியே

சுந்தரியே முந்திரியே
சொக்குறேன்டி ஒன்னால...

அரும்பு மீசையில
ஆசையுந்தான் மொளைக்குதடி

ஒதட்டோரச் சிரிப்பினிலே
உள்ளந்தான் மருகுதடி

ஆடும் லோலாக்குதான்
காதலைச் சொல்லுதடி

செவந்த மேனியாளே
சிற்றிடைக் கொடியாளே

பருவச் செழிப்பினிலே
மோகந்தான் கூடுதடி

கண்ணால இழுக்கிறியே
காந்தமாத்தான் ஒட்டுறியே

அத்தமகளே அழகான
தேவதை நீதானே

ஓரக்கண்ணால பார்ப்பவளே
ஒய்யாரமா போவதென்ன

ஒத்தையா நானிருக்கேன்
ஒத்தாசையா வாபுள்ளே

சுந்தரியே முந்திரியே
சொக்குறேன்டி ஒன்னால...

**பெ.வெங்கட லட்சுமி காந்தன்.**

# ஹைக்கூ

குடியிருக்கும் வீடு
விட்டு வெளியேறினேன்
குடியேறின சிலந்திப் பூச்சிகள்

காட்டு யானை
பயமுறுத்தி விடுகிறது
சிறிய தேனீ

ஒழுங்காக பராமரிக்கவில்லை
இருப்பினும் குடியேறி விடுகிறது
வீட்டிற்குள் சிலந்தி

இயற்கையின் தயவில்
ஏமாற்றிப் பிழைக்கிறது
காக்கையின் கூட்டில் குயில்

இணை சேர்ந்ததும்
உயிர் துறக்கும்
ஆண் தேனீ

நிறுத்தி வைத்தேன்
அம்மாவுடன் வாழ்ந்த கணங்களை
புகைப்படத்தில்

அழகிய பூக்கள்
செடியில் விரிந்திருக்கும்
பறவைகளின் சாயலில்

மங்கிய நிலா வெளிச்சம்
மறைந்து விடுகிறது
புதருக்குள் புகுந்த பாம்பு

துடுப்பு வலிக்கும் சத்தம்
கூடிக்கொண்டே வருகிறது
குடிலில் மனைவியின் எதிர்பார்ப்பு

முளைக்கும் விதை
வெடித்துப் பிளவுபடும்
கரும்பாறை



Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை



## ஏனோ வெறுமை என்னுள்ளே...

வானம் தூற நனைகின்றேன்
வசந்தம் வீச மகிழ்கின்றேன்
கானம் பாடும் குயிலோசை
காதல் கொள்ள வைத்தாலும்
ஏனோ வெறுமை என்னுள்ளே
எங்கும் பரவி நிற்கிறதே
தானே உள்ளே அமர்கிறது
தவிக்கத்... தவிர்க்க நினைக்கிறது

வீசும் தென்றல் லயிக்கவில்லை
விடியற் காலம் சுவைக்கவில்லை
காசு பணமும் விரும்பவில்லை
கவிதை எழுதக் காதலில்லை
நேசம் தேடி அலைய வில்லை
நெஞ்சம் மகிழ விழையவில்லை
தூசாய் எதையும் நினைக்கவில்லை
துயரம் ஓடத் துணியவில்லை

பாடல் பாட விரும்புகிறேன்
பாடிப் பார்த்தே மகிழ்கின்றேன்
ஓடிப் போக விரும்பவில்லை
ஒதுங்கிப் போக நினைக்கவில்லை
தேடிச் சென்று பேசுகின்றேன்
தெளிவாய் நானும் நடக்கின்றேன்
நாடி வந்த பெருங்கவலை
நகரும் என்றே நம்புகிறேன்...

வாடைக் காற்றை ரசிக்கவில்லை
வாசப் பூவும் பிடிக்கவில்லை
தேடி வந்த பெருந்துயரம்
தினமும் வருத்தத் துடிக்கின்றேன்
கோடி பொருளும் தேவையில்லை
கொடுத்த இன்னல் தொலையட்டும்
வாடி நிற்க வந்திடுவான்
வடிவேல் துணையாய் நின்றிடுவான்.

தென்றல் கவி - தமிழ்ச்சிட்டு

# எது தோல்வி

விண்மீன் வீழ்ந்தது
இது தோல்வியா?
பூ உதிர்ந்தது
இது தோல்வியா?

வீழ்வதெல்லாம் தோற்பதற்கல்ல
வீழ்ந்தனவெல்லாம் வீணுமல்ல

சிதறிப் போன
மழைத்துளிகளெல்லாம்
மீண்டும் மேகமாய்
பிறப்பெடுக்கவில்லையா?

வெற்றிச் சரித்திரம் புரட்டிப் பார்
தோல்வி - படி ஏறியதை நீ அறிவாய்

ஒற்றை மின்குமிழுக்கு
ஆயிரம் தோல்வியாம்
பகர்ந்தது - எடிசனின் வெற்றிச் சுடர்

உன்னால் முடியாதாம்
ஊர் தூற்றியதாம்
வாய் பேசியதாம்
இது தோல்வியா..?

எது தோல்வி?
நீ கண்ட கனவுகளை
கலைய விட்டது

எது தோல்வி?
உன் நினைவுகளை
அலைய விட்டது

மறந்து போ தோல்விகளை -
அவமானங்களையல்ல
உன் விண்ணின் வர்ணம் நீ தீட்டு
வெற்றி நாளை உன் கையில்

**எப்.ஹகீமா நசீர்**
பேராதனைப் பல்கலைக்கழகம்
இலங்கை

# ஹைக்கூ

பணக்காரக் கடவுள்
படத்தை வரைந்த பின்
கேட்கிறான் யாசகம்

சாலை ஓவியத்தில் கடவுள்
சுற்றிலும் விழுகிறது
வேப்பம் பூ

சாலை ஓவியன்
வரைந்த கடவுள் படத்தில்
யாசகமிட்டவரின் முகச்சாயல்

மழைநீர் சூழ்ந்து
கரைத்துச் சென்றது
வரையப்பட்ட கடவுளை

மசூதியை வரைய
ஒப்பனை பார்க்கிறான்
கோவில் கோபுரத்தை

பட்டாம்பூச்சி வரைய
கை நிறைய
வர்ணங்கள்

கரித்துண்டு ஓவியன்
சட்டை முழுக்க
ஓட்டைகள்

கோடை வெயில்
தண்ணீருக்குத் தட்டுப்பாடு
குறையவில்லை குடுவை

ஒற்றையடிப் பாதை
ஓரமாய் சாய்த்து வைத்திருக்கும்
அப்பாவின் மிதிவண்டி

இளைப்பாற நின்றதும்
ஓய்வு எடுத்துச் சென்றது
பட்டாம்பூச்சி

வேப்பங்குச்சியை ஒடித்துவிட்டு
கம்மாய் நோக்கி பயணிக்க
காத்திருக்கும் மிதிவண்டி

அதிகாலை மிதிவண்டியை
உந்தி விட்டுச் செல்கிறது
பறந்த தும்பி

வானத்தில்
மிதிவண்டியின் சக்கரம்
வரைந்த பாகங்கள்

ஊர் எல்லையில்
மரத்தின் முழுக்க ஆணி
பேய் மரம்

அமைதியாக வேர்
ஆடிக்கொண்டே விழும்
இலைகள்

மரத்தில்
சாய்த்து வைத்த கோடாரி
ஆறுதலாய் இருக்கிறது

துள்ளி குதிக்கும் மான்
எதை கண்டு அஞ்சியதோ
நிற்கிறது கூட்டம்

வேடனின் அம்பு
குறி தவறிட தாவுகிறது
மான்

## ஹைக்கூ

அடர்ந்த காட்டில்
மானை தேடும் சிறுவர்கள்
கையில் பொம்மை

மானை வரைந்த சிறுமி
நிழலை தூரம் வரைகிறாள்
குதிக்கிறது மான்


பாண்டிய ராஜ்
திருப்பூர் - 641 602


நீ எப்போது
சரியாக இருக்கிறாயோ
அப்போதுதான்
இந்த உலகம்
அதிகமாக உன்னைக்
குறை சொல்லும்



# உளி பேசும் மொழி

## 5

பிரபஞ்சத்தின் ஒரு பகுதியான இப்புவியில் வாழும் அனைத்து ஜீவராசிகளும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய இந்தப் பஞ்ச பூதங்களும் இயற்கையின் படைப்புகள் ஆகும். இதில் ஒன்று இல்லையென்றாலும் இப்புவியின் இயக்கமானது நின்றுவிடும். புவியானது தன்னை தானே சுற்றிக் கொண்டும், சூரியனை மையமாகக் கொண்டு நீள் வட்டப்பாதையில் சுற்றி வருவதும் இயற்கையின் நிகழ்வென்றாலும், மனித அறிவினைக் கொண்டு கண்டுபிடிக்கப் பட்டு அதன் இயக்கமானது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

நாம் கவனித்துப்பார்த்தால், நம் அறிவிற்கு அப்பாற்பட்டு கண்டுபிடிக்கப் படும் எவ்வித ஆராய்ச்சியும், ஏற்கனவே இயற்கையால் வரையறுக்கப்பட்டு, அவை அனைத்துமே இயற்கையின் படைப் பிலிருந்தே நம்மால் கண்டறியப் படுவதாகும்.

புவியின் இயக்கம் என்பது என்ன?

**நெல்லை க. சோமசுந்தரி**
(கவிஞர், எழுத்தாளர் & தொல்லியல் ஆர்வலர்),
சென்னை, தமிழ்நாடு

என்றைக்கேனும் இக்கேள்விக்கு பதிலைத் தேடி இருக்கிறோமா? புவியின் இயக்கம் என்பது நீள்வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றி வருவது மட்டுமல்ல. அதில் உயிர்ப்புடன் வாழும் அனைத்து ஜீவராசிகளின் உயிர்ப்புத் தன்மையைப் பற்றியதாகும். இப்புவியின் உயிர்ப்பு தன்மையை தக்க வைத்துக்கொள்ள வேண்டுமெனில் அவ்வுயிர்கள் வாழ்வ தற்கு பஞ்சபூதங்களின் ஆற்றல் மிக இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ் வொரு வகையானதனித்தன்மைஇருப்பதுடன் அதன் பலமானது பல்கி பெருகும் போது, அதன் ஆற்றலை எவ்வகையிலும் கட்டுப்படுத்த இயலாது என்பதை நம்மால் நினைத்து பார்க்க முடிகிறதா?

இப்பெருவெளியில் பரந்து விரிந்த வான்வெளிப்பரப்பானது நமது புவிக்கு மட்டுமன்றி, பிரபஞ்சத்திற்கே ஒரு குடையாக அமைந்துள்ளது. நம் கண்ணால் காணும் ஆகாயமானது பிரபஞ்சத்துடன் ஒப்பிடும்போது புவியிலிருந்து மிகச்சிறிய தொலைவிலேயே அமைந்துள்ளது. அது கிட்டத்தட்ட தொடுவானத்தைப் போன்றது.

உண்மையில், நம்முடைய மிகப்பெரிய அறிவியல் நுண்ணறிவினாலும், கணக்கிட இயலாத அளப்பரிய சக்தி இப்பிரபஞ்சத் தில் விரவிக் காணப்படுகிறது. ஒரு வெட்ட வெளியில் நின்று கொண்டு, எத்திசை நோக்கினாலும், எல்லையற்ற வான் பரப்பினை யும், அதில் அடங்கியுள்ள எண்ணற்ற இயற்கை சக்திகளையும் என்றைக் கேனும் அவதானித்து எண்ணிப் பார்த்தது உண்டா?

இன்றும் நிலவை நோக்கியும், சூரிய குடும்பத்தில் உள்ள மற்ற கோள்களை நோக்கியும், மனித வர்க்கமானது, பல் வேறு முயற்சிகளை மேற்கொண்டு, மிகப் பெரிய பொருட் செலவில் அக்கோள்களை பற்றி அறிந்து கொள்ள எத்தனிக்கிறது.

இதனை வாசிக்கும் போதே, வான்வெளி யின் மகத்துவத்தையும் அதன் அளப்பரிய



சக்தியையும் நம்மால் உணர முடிகிறதல்லவா?

அவ்வகையிலே, இப்புவியின் பரந்த விரிந்த பரப்பானது, நமது பௌதீக சிற்றறிவினால் தோராயமாக கணக்கிடப்பட்டாலும், அதன் அகண்டு விரிந்த நிலப்பரப்பானது, அனைத்து வகையானஜீவராசிகளையும்தாங்குவதுமட்டு மன்றி, அஃறிணை சார்ந்த அனைத்து வகையான பருப்பொருட்களையும் தாங்கி நிற்கிறது.

இந்த பூமியின் நிலப்பரப்பு, ஆகாயப் பரப்பிலிருந்து, வெளிப்படும் இயற்கை சீற்றங் களையும், இங்கு வாழும் உயிரினங்களால் ஏற்படுத்தப்படும் சிதைவுகளையும் தாங்கி அவ்வுயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலை எண்ணில் அடங்கா நூற்றாண்டுகளாக தொடர்ந்து பேணிப்பாதுகாத்து வருகிறது.

‘அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல‘ என்ற வள்ளுவரின் கூற்றுக்கேற்ப, நாம் இப்புவியின் பரப்பினை நம்முடைய அபரித மான சௌகரியங்களுக்காக ஒரு வித சுயநலத்துடன் பலவிதங்களில் தோண்டிக் காயப்படுத்தினாலும், அதனை பொறுத்துக் கொண்டு அந்நிலமானது அனைத்து உயிரினங் களையும் அரவணைத்து வாழ வைக்கிறது என்பதே நிதர்சனமான உண்மை.


‘நீரின்றி அமையாது உலகு‘

இந்த நிலப்பரப்பினிலேயே, நீர்நிலைகளில் மட்டும் வாழக்கூடிய உயிரினங்ககளை கொண்ட மிகப்பரந்து விரிந்த நீர்பரப்புகளும் அடங்கி இருக்கிறது. நமக்குத் தெரிந்த நீர் பரப்புகளான குளம், கால்வாய், ஆறு, சிறுகடல்கள், பெருங்கடல்கள் என்று அனைத்து நிலைகளிலும் நீரின் சக்தியானது வெளிப்படுகிறது. நாம் உற்றுநோக்கி பார்த்தோமானால், நீரின் அபரிதமான சக்தியானது, காட்டாற்று வெள்ளம் போல கரை புரண்டு ஓடும் போது அதனை தடுக்க முற்படும் அனைத்தையுமே உடைத்து சிதலமடையச் செய்கிறது. அவ்வழியே, நீண்ட அகண்ட பெருங்கடலின் ஒரு சிறிய பரப்பில், எழும்பும் ஆழிபேரலையின் சக்தியானது, அப்பகுதியில் உள்ள அனைத்தையும் தன்னகத்தே அணைத்துக் கொள்ளும் அளவிற்கு மிக வலிமையானது.

இப்பிரபஞ்சத்தில் அடுத்ததாக, உருவம் இல்லாமல் உணர மட்டுமே கூடியதும், மிகவும் மென்மையானதுமான காற்றை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு உயிரினங்களையும் உயிர்ப்புடன் வைத்திருக்கக்கூடிய சக்தியை பெற்றது. காற்றானது ஒருவித மென்மையுடன் புல்லாங்குழலினுள் வரும்போது அது சங்கீதமாக இசைக்கப்படுகிறது. அங்ஙனமே, அதே காற்று மிகுந்த பரப்பில் புயலாக உருவெடுக்கும் போது, எந்த பகுதியினை கடந்து செல்லும் போதும், அந்த பகுதி அனைத்தையும் ஒரு போர்க்களம் போல நாசப்படுத்திச் செல்கிறது.

இதனை மாற்றவோ, கட்டுப்படுத்தவோ, மனித குலத்தின் விஞ்ஞான பேரறிவினால் கூட கிஞ்சித்தும் தடுக்க இயலாது. இதிலிருந்து, காற்றின் வீரியத்தையும், அதன் அளப்பரிய சக்தியையும் நம்மால் உணர முடிகிறதல்லவா?

கற்கால மனிதனின் அளப்பரியக் கண்டுபிடிப்பானது நெருப்பு. இன்று நமக்கு சர்வ சாதாரணமாக தெரியும். இந் நெருப்பானது லட்சக்கணக்கான வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த மனிதனுக்கு, அரியவகை கண்டுபிடிப்பாகும். இன்றும் இந்நெருப்பானது மனித குலத்தின் வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்குகிறது. நாம் நெருப்பின் தன்மையைக் கவனித்து பார்த்தோமானால், அதன் மென்மை நிலையில் ஒளி தீபமாகவும், அதன் தீவிர நிலையில் காட்டு தீயாகவும் அதன் அபரித சக்தியை வெளிப்படுத்தும் குணத்தைப்





பெற்றது. தீயானது தன்னுள் அடங்கும் அனைத்தையும் எரித்து சாம்பலாக்கும் சக்தியினைக் கொண்டது.

அங்ஙனமே, பஞ்ச பூதங்களின் சக்தியின் வலிமையானது நாம் நினைத்து பார்க்க முடியாத அபரித பேராற்றலை கொண்டது என்பதனை நம்மால் உள்வாங்க முடிகிறதல்லவா?

இவ்வாற்றல்களின் மெய்ப்பிம்பம் ஆனது இன்றும் நம்முடன் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கிறது. அந்த மெய்ப்பிம்பம் ஆனது இத்தனை நேரம் உங்களுடன் பேசிக் கொண்டிருக்கும் ஒரு சிறு உளியின் மூலமாக நாம் உணர உருவாக்கப்பட்டுள்ளது என்பதை என்னும் போது உங்களுக்கு ஆச்சரியமாக உள்ளதா?

அந்த மெய்ப்பிம்பத்தை காண உங்கள் உளி பேசும் மொழியினை தொடர்ந்து கேளுங்கள்.

தொடர்ந்து உளி பேசும் ...



# தேடலின் ராகமாய்...!

இதயத்தின் மையத்திலிருந்து
எழும்பும் உயிரின் ஓசை
பழக்கப்பட்ட...
சாயலாய் உன்னிடமே
நடந்து வருகிறது!!

மௌனத்தின்
அத்தனை ஓசையிலும்...
தேடலின் ராகமாய்
நீயே நிரம்புகிறாய்?

புரிதலின்றித் திரும்பும்
மென் காற்றாய்ப்
புரியாத புதிராய்
என்னில் புதியதாய்
ஏன் இந்த
ஓர் அசைவு?

வசப்படாத மொழியாகவே
என் மௌனம்
கேள்விக் குறியாய் நிற்கிறது!!

செண்பகப் பூவின் வாசமாய்...
வெளிப்படாத ஒரு சொல்
இதய முடிச்சுகளில்...
தேங்கியே நிற்கிறது!!

நேசிக்கப் படாத இதயத்தின்
எந்த ஆழத்தில்...நீ
நீந்துகிறாய்?
அதிக அடர்த்தியாய்
இருக்கிறது ?!

உன்னைக் கடக்க
எத்தனிக்கும் போதெல்லாம்...
சிறகாய் அசைந்து
உயிர் முள்ளாய்
உள்ளே கரையும்
மழைத்துளியை
எந்தக் கரையில் சேர்ப்பது?

**நெல்லை க.சோமசுந்தரி**
சென்னை - 122

# அஞ்சல

## நௌசாத் கான் லி

பொட்ட புள்ளைக்கு வயசுக்கு வந்ததுக்கு அப்புறம் படிப்பு எதுக்கு வேண்டி கிடக்கு?

வீட்டு வேலைய ஒழுங்கா கத்துக்க சொல்லு முடிஞ்சா உன் கூட தீப்பெட்டி தொழிற்சாலைக்கு வேலைக்கு கூட்டிட்டு போ, உன் குடும்பத்துக்கும் வருமானத்துக்கு ஒரு ஒத்தாசையா இருக்கும்லே, வருங்காலத்துக்கு அது கல்யாணத்துக்கும் ஒரு நாலு காசு சேர்த்த மாதிரி இருக்கும். இந்த காலத்துல ஒண்ணும் இல்லாதவள எல்லாம் யாருடா கட்டிக்கிட்டு போவா அதனால இந்த தாய் மாமன் சொல்லுறதை புத்திமதியா கேட்டு நடந்துக்கோ...

இங்க பாரு மாமோய், எங்கப்பன் செத்த போது எனக்கு பன்னிரண்டு வயசு, என் தங்கச்சிக்கு ஒரு வயசு அண்ணன் ,தம்பின்னு நீங்களெல்லாம் இருந்தும் எங்க ஆத்தாவுக்கு உதவல, அவளும் அவ்வளவு வறுமையிலும் உங்க வீட்டு முன்னாடியெல்லாம் வந்து நிக்கல.

எங்க ஆத்தா தான் நாலு வீட்டுல பத்து, பாத்திரம் தேய்ச்சு எங்களை காப்பாத்துன்னா, கட்டுன புருஷன் குடிச்சு, கூத்தடிச்சு சின்ன சிறு வயசுலேயே சீக்கு வந்து செத்து போனாலும் எங்க ஆத்தா வாழ வேண்டிய வயசுல வாழாம எங்களை வளர்க்கிறதுக்காக ஒழுக்கமா தான் வாழ்ந்தா ஆனா இந்த ஊருல உள்ள சில ஆம்பளைங்க எல்லாம் தப்பான பார்வையில தான் பார்த்தான். சின்ன வயசுல பொண்ணுங்க எல்லாம் சீவி சிங்காரிச்சிட்டு அழகா இருக்கணும்னு நினைக்குற காலத்துல எங்க ஆத்தா எவன் கண்ணும் அவ மேல படக் கூடாதுன்னும், ஊர்ல நாலு பேரு நாலு விதமா நரம்பில்லாத நாக்கால எதுவும் தப்பா பேசிட கூடாதுன்னும் மொட்டை அடிச்சுக்கிட்டு தன்னை தானே அலங்கோல படுத்திக்கிட்டு, வருத்திக்கிட்டு வாழ்ந்தா மாமா.

அவ கஷ்டத்தை பார்த்து வளர்ந்ததால என்னவோ இந்த மண்டைல படிப்பு ஏறலை பதினாறு வயசுல எங்காத்தாவுக்காக நானும் வேலைக்கு போக ஆரம்பிச்சேன் நாங்க ரெண்டு பேருமே சம்பாதிச்சும் கூட செத்து போன அப்பன் கம்னாட்டி அடிக்கடி குடிக்கிறதுக்கு வாங்குன வட்டி கடனெல்லாம் குட்டி போட்டு எங்களை வாட்டி வதைச்சது. வாங்குன சம்பளம் கூட வாய்க்கும், வயித்துக்கும் தான் ஒரு காலத்துல சரியா இருந்தது.

ஒரு ரெண்டு ,மூணு வருஷம் அந்த பாழாய் போன கடனை அடைப்பதற்கு ஈர துணியை வயித்துல சுத்தி, ஒரு வேளை கஞ்சி குடிச்சு,பல

> ‘நீங்கள் விரும்பிய வண்ணம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். உங்கள் உலகம் உங்களிடமிருந்தே தொடங்குகிறது.‘
>
> - சாக்ரடீஸ்

மோசமான சவால்களை எல்லாம் சமாளிச்சு, பல இன்னல்களை கடந்து கடனை அடைச்சு முடிச்சோம் மாமா.

அப்படி பட்ட கஷ்டமான காலத்துல கூட நானும், ஆத்தாவும் எங்க தங்கச்சிய ஒரு வேளை கூட பட்டினி போடலை மாமா. எனக்கும், ஆத்தாவுக்கும் தங்கச்சின்னா உசுரு. இவ்வளவு கஷ்டத்திலும் அவளை பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்க வச்சிருக்கோம். எங்க கஷ்டத்தை புரிஞ்சு என் தங்கச்சி அஞ்சல ஆயிரத்தி நூறுக்கு மேல மார்க் எடுத்து இருக்கா மாமா. அல்சர் முத்தி புத்து நோயா மாறி அவஸ்தப்பட்டு போன மாசம் ஆத்தா சாவுறப்ப கூட "டே மவனே அஞ்சலய அவ ஆசப்பட்ட மாதிரியே டாக்டர் ஆக்கிடுன்னு சொல்லிட்டு தான் செத்தா மாமா"

என் ஆத்தா மட்டும் அந்த காலத்துல படிச்சு இருந்தா இவ்வளவு கஷ்டப்பட்டு இருக்க மாட்டாளே மாமா. உங்களை மாதிரி உதவாக்கரை அண்ணன் தம்பியால தான் அவ வாழ்க்கை நாசமா போச்சு. படிக்க வைக்காம வயசுக்கு வந்ததும் உங்க சாதியில பார்த்து ஒருத்தன கட்டி வச்சீங்க, அவன் நல்லவனா, கெட்டவனான்னு உங்க கண்ணுக்கு தெரியலை. அந்த குடிக்காரன் மனுஷனால எங்க ஆத்தா வாழ்க்கையும் போயி இப்ப நாங்க தான் கஷ்டப்படுறோம்.

என் ஆத்தாவுக்கு ஏற்பட்ட நிலைமை என் தங்கச்சிக்கு வரக்கூடாது. ஒரு பொண்ணுக்கு கல்வி தான் உயிர் மாதிரி, அவ ஆசைப்பட்ட மாதிரி அந்த கல்விய அவளுக்கு கொடுத்திட்டா அவ வாழ்க்கையை சுயமா அவளே பார்த்துப்பா. என் தலய அடமானம் வச்சாவது என் தங்கச்சி ஆசைப்பட்ட மாதிரி டாக்டர் ஆக்காம விட மாட்டேன் மாமா. கோபத்துல என்னையும் அறியாம உங்க மனசு காயப்படுற மாதிரி ஏதாவது தப்பா பேசியிருந்தா என்ன மன்னிச்சிடுங்க மாமா என்றான் ராசாக்கண்ணு.

பதிலேதும் பேசாமல் வந்த வழியே மௌனமாய் திரும்பி சென்றார் அய்யாக்கண்ணு.

இதுவரை வாசலில் மாமனும் ,அண்ணனும் பேசியிருந்ததை வீட்டினுள் இருந்த படியே கேட்டிருந்தாள் அஞ்சல .தன் மீது நம்பிக்கை வைத்திருக்கும் அண்ணனின் உழைப்பையும், தியாகத்தையும் உணர்ந்த அஞ்சல தனக்கு வந்திருந்த காதல் கடிதத்தை உலை கொதித்து கொண்டிருந்த விறகு அடுப்புக்கு கீழே கிழித்து எரித்தாள். முப்பது வயசாகியும் தனக்காக திருமணம் செய்து கொள்ளாத அண்ணனின் தியாகத்திற்கு முன் அவளது டீன் ஏஜ் காதல் சாதாரணமாய் தெரிந்தது. எப்படியாவது இந்த முறையாவது நீட் தேர்வில் பாஸ் செய்து விட வேண்டும் என்ற வைராக்கியத்தில் பயிற்சி மையத்தில் கொடுத்த புத்தகத்தினை இன்னும் அதீத ஈடுபாட்டோடு படிக்க ஆரம்பித்தாள்.

அப்போது வீட்டு சுவற்றில் மாட்டப் பட்டிருந்த அம்பேத்கரின் புகைப்படம் வாசலில் உட்கார்ந்திருந்த ராசாக்கண்ணுவை பார்த்து புன்னகையித்தது. வானில் மாலை சூரியன் கூட மறைவதற்கு பதிலாக இன்னும் பிரகாசமாய் ஒளித்தது.





# தேயிலை தேசத்து சாமான்யனுடன்...

## சாமான்யமாய்... சில வினாக்கள்...

நேர் கண்டவர் வஃபிரா வஃபி

நேர்காணலில் நாம் சந்திக்க விருப்பவர், தமது காத்திரமான படைப்புகளோடு இலக்கிய உலகில் சஞ்சரிப்பவர். 'கோவுஸ்ஸ ராம்ஜி' எனும் புனைபெயரில் எழுதிவரும் இவர் எழுத்துலகில் தனக்கென ஓரிடத்தைத் தக்க வைத்துக் கொண்டு வலம் வரும் காளியப்பன் உலகநாதன் ஆவார்

*வணக்கம்! உங்களைப் பற்றிய சிறிய அறிமுகத்துடன் இந்த நேர்காணலைத் தொடங்குவோமா?*

வணக்கம்! இலங்கை, மலையகத்தின் ஊவா மாகாணத்தின் எல்ல பிரதேச சபை வட்டா ரத்தில் அமைந்துள்ள, கோவுஸ்ஸ என்ற ஊரில் வசிக்கும் நானோர் விவசாயி. வயது 64. எனக்கு மூன்று பிள்ளைகள்.

*தாங்கள் 'கோவுஸ்ஸ ராம்ஜி' என்ற பெயரிலேயே அனேகமாக எழுதி வருகிறீர்கள். இதற்கு விசேட காரணம் ஏதும் உள்ளதா?*

எனது எழுத்துக்களால் என் ஊரின் பெயரும் பிரபலமாக வேண்டும் என்றெண்ணியே என் புனைபெயரோடு என் ஊரின் பெயரையும் இணைத்து எழுதுகின்றேன்.

*இதுவரை பல நூல்கள் எழுதியுள்ளீர்கள். அதுபற்றிய விபரங்களை நம் வாசகர்களுடன் பகிரலாமே!*

1. **தேயிலை புஷ்பங்கள் (2018)**
2. **கொழுந்தம்மா (2020)**
3. **இவன் (2021)**
4. **என் கொல்லைப்புறத்து நதி (2021)**
5. **கொரோனாக் கூட்டில் ஒரு லயத்துக்குருவி (2022)**

ஒரு சிறுகதை தொகுப்பும், மூன்று கவிதை நூல்களும், ஒரு சுயசரிதை நூலுமாக மொத்தம் ஐந்து நூல்கள் வெளியிட்டுள்ளேன்.

*நீங்கள் எழுதிய 'கொழுந்தம்மா' சிறுகதை நூலை இந்தியாவில் வெளியிட்டீர்கள் என்பதை அறிகிறோம். அப்படியான எண்ணம் ஏற்படக்காரணம்?*

தமிழ்நெஞ்சம் ஐயா ஹைக்கூ 2020

நூல் வெளியீட்டிற்காக சென்னை வருவதாக அறிந்து கொண்டேன். அவரை நேரில் சந்திக்க வேண்டும் என்ற ஆவலும், என் எழுத்துக்கள் இந்திய மக்களையும் சென்றடைய வேண்டுமென்ற நோக்கமும் தான், என் நூலை இந்தியாவில் வெளியிடத் தூண்டின.

*மலையக மக்களைப் பற்றிய சமூக அக்கறையை உங்கள் எழுத்துக்களில் காண முடிகிறது. இவர்களின் வாழ்வாதாரப் போராட்டங்கள், சிக்கல்களை எழுத்தாளர்களின் எழுதுகோல்களால் தீர்த்து வைக்க முடியும் எனக் கருதுகிறீர்களா? அப்படியானால், அது எவ்விதமாக அமைந்தால் சாத்தியப்படும்?*

என் உறவுகளான மலையக மக்கள், இலங்கையில் புறக்கணிக்கப்பட்ட இனமாகவே இருக்கின்றனர். எம்மவர்களின் பிரச்சினைகளை சிலர் வியாபாரமாக்கினாலும், தீர்வைப் பெற்றுத்தர அவர்கள் விரும்புவதில்லை. எழுத்தாளர்களால் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவர முடிந்தாலும், அதை தீர்த்து வைக்கும் பொறுப்பை தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்களே ஏற்று, தீர்வுகளைப் பெற்றுத்தர வேண்டும்.



இளமைத்தோற்றம்



பண்டாரவளை இந்து இளைஞர் மன்றம் நடத்திய கவிதைப் பெருவிழாவில்...

*பன்னெடுங்காலமாகத் தொடர்ந்து வரும் மலையக மக்களின் வாழ்வியல் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய ஒரு இலகுவான வழிமுறை எதுவென நினைக்கிறீர்கள்?*

மலையக மக்களின் பிரச்சினைகள் மிகச் சுலபமாக தீர்க்கக்கூடியவையே! முதலில் அவர்களை இலங்கையின் பிரஜைகளாக பெரும்பான்மையினர் மனதார ஏற்றுக் கொள்ள வேண்டும். 200 வருட வரலாற்றைக் கொண்ட இந்த மக்களை வெறுமனே உழைக்கும் இயந்திரமாகவே ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர். இந்த மனநிலை மாற வேண்டும்.

*இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் இலக்கியம் எந்தளவில் வளர்ந்துள்ளது? அதன் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்படும் திட்டங்களில் உண்மைத்தன்மை இருக்கிறதென நம்புகிறீர்களா?*

இந்தியாவைப் பொறுத்தவரை இலக்கியம் இமாலய வளர்ச்சி கண்டுள்ளது. இலங்கையில் வடகிழக்கில் தமிழ் இலக்கியம் நல்ல வளச்சி கண்டுள்ளது, ஆனால் மலையகத்தில் தமிழ் இலக்கியம் பாரிய வளர்ச்சி காணவில்லை. இதற்கு மலையகத்தின் மூத்த இலக்கியவாதிகள் சிலரின் சுயநலப்போக்கும் காரணம்.




பண்டாரவளை இந்து இளைஞர் மன்றம் நடத்திய கவிதைப் பெருவிழாவில்...

*சமூக நலனுக்கான தொலைநோக்கு சிந்தனையோடு எழுதப்படும் விடயங்கள் சில நேரங்களில், மக்களின் வரவேற்பைப் பெறாமல், கண்டுகொள்ளப் படாமலேயே போய்விடுகின்றனவே! உங்கள் பார்வையில், இதற்கான காரணம் என்னவாக இருக்கும்?*

ஒன்று போதிய அளவுக்கு இந்த கருத்துக்கள் மக்களை எட்ட வில்லை, அல்லது மக்களிடையே விவாதிக்கப்பட வில்லை. என்னதான் உயர்வான கருத்துக்கள் என்றாலும், அவை மக்களிடையே விவாதிக்கப் படாத விடத்து மக்களால் கண்டுக்கொள்ளப் படுவதில்லை.

*சமூக விழிப்புணர்வுக்கான முன்னெடுப்புகளில் எழுத்தாளர்களின் பங்களிப்பு போதுமானதாக உள்ளதா?*

எழுத்தாளர்கள் இப்போது சமூக சிந்தனையுடன் எழுதுவது குறைந்துவிட்டதாகவே நான் கருதுகின்றேன். என்றாலும் சமூகப்பற்றுடன் சிந்தித்தெழுதும் இலக்கியவாதிகள் சிலர் இப்போதும் இருக்கவே செய்கின்றனர் என்பதும் உண்மை.

*இலக்கியத்துறையில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வரும் உங்களின் இலக்கு எது? அதை அடைந்து விட்டதாகக் உணர்கிறீர்களா?*

இலக்குகளை அடைந்து விட்டால் ஓட்டம் ஓய்ந்துவிடுமே? எனவே இலக்குகளை அடைய நானும் ஓடிக்கொண்டுதான் இருக்கிறேன். சிங்கள மொழியிலும் என் நூல்களை வெளிக்கொணர ஆவல். இப்போதைய இலக்கு இதுதான். இதற்கு சில சிங்கள நண்பர்கள் ஒத்துழைக்கத் தயாராகவே உள்ளனர்.

*பிள்ளைகளை வளர்ப்பதில் பாரிய சவால்களை எதிர்நோக்கும் இன்றைய சூழலில், இந்த சமூகச் சீர்குலைவிலிருந்து நம் சந்ததிகளை மீட்டெடுக்க, பெற்றோராகிய எமது தார்மீகக் கடமை என்னவாக இருக்கும்?*

இது ஒரு முக்கியமான கேள்வி. இன்றைய பிள்ளைகளை சரியான வழியில் வளர்ப்பது மிகப்பெரிய சவால்தான்.பரந்த உலகில் தொடர்புகள் விரிவாகியுள்ளதால் பல்முனை கலாச்சார கலவையில் மூழ்கியுள்ள நம் சமூகத்தில், பிள்ளைகளை வளர்ப்பது பெரும் சவால்தான் என்றாலும், இந்த சவால் களை வென்று நம் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறையினருக்கு போதிக்க வேண்டிய கடமை நமக்குள்ளதை மறுக்க முடியாது

*இதுவரை செய்த சாதனைகள்,பெற்ற விருதுகள் பற்றி ஒரு சில வார்த்தைகள்...?*

மணவிழாவில் இணையர்களாக...





இதுவரை வெளியீடு கண்ட நூல்கள்

சாதனைகள் செய்துவிட்டதாக சொல்ல முடியவில்லை. 1979 முதல் எழுதி வந்தா லும், விருதுகளை தேடிப் போனதில்லை. என்னைத் தேடி விருதுகள் வரவேண்டும் என்றே நினைக்கிறேன். கலாபூசணம்' அரச விருதினை 2021ல் எங்கள் எல்ல பிரதேச கலாச்சார உத்தியோகஸ்தர் பெற்றுத்தந்தார்.

எண்பதுகளில் பண்டாரவளை இந்து இளைஞர் மன்றம் 'கவிச்சுடர் 'விருது வழங்கி கௌரவித்தது.

1986ல் ஒரு வாசகர் தபால் அட்டை யொன்றில் வடிமைத்து வழங்கிய 'தேயிலை தேசத்தின் கவிக்குரல்' என்ற பட்டத்தையே மிக உயர்வான விருதாக கருதுகின்றேன்.

நம் பாரம்பரிய இலக்கியங்கள், பண் பாடுகள், கலாசாரங்கள் இவற்றை யெல்லாம் சிதைவின்றி நம் எதிர்காலத் தலைமுறை யினருக்குக் கொண்டு சேர்ப்பதற்கான வழி முறைகள் எவை?

இது மின்னணு யுகம். இலக்கியங்களை முடிந்தளவு மின்னிதழ்களில் பதியலாம். என்றாலும் பழைய ஓலைச்சுவடிகளை இன்றும் ஆய்வாளர்கள் வாசிப்பதைப்போல தேடல் மிகுந்த எதிர்கால சந்ததியினர் தேடி வாசிப் பார்கள். ஆனால் கலாச்சாரமும், பண்பாடும் மாற்றமடைவதை முற்றாக தடுக்க முடியாது, என்றாலும் நம் பாரம்பரிய விழாக்கள், திருமண வைபவங்கள், ஏன் மரணச்சடங்குககளில் கூட பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் கட்டாயமாக கடைபிடித்தால் எதிர்கால சந்ததியினரும் அதை ஓரளவுக்காவது பின்பற்று வார்கள்.

வாழ்க்கையில் பல கரடுமுரடான பாதைகளில் பயணப்பட்டு வந்தவர் நீங்கள். உங்களது இன்றைய உயர்விற்கான காரண கர்த்தா யார்?

நான் தமிழில் நான்காம் வகுப்பும், சிங்கள மொழியில் ஏழாம் வகுப்பும் கற்றவன். என் இலக்கியப்பயணத்திற்கு காரணம் வாசிப்பு பழக்கமே! இலக்கியத் துறையில் நான் வளர காரணமானவர்கள், பிரபல பல்துறை கலைஞர் கலைக்கமல், மஹ்தூம் ஜமால்தீன் ஐயா, திரு மாணா மக்கீன் ஐயா, திருமதி லீலா இராமையா அம்மையார், திரு தமிழ்நெஞ்சம் அமின் ஐயா ஆகியோர் என் நன்றிக்குரியவர்கள்.

தற்கால எழுத்தாளர்களில் பெரும் பான்மையானவர்கள் எழுத்துச் சுதந்திரம் எனும் பேரில் கண்டதையும் எழுதுகிறார்களே! ஒரு எழுத்தாளனின் எழுத்துச் சுதந்திரம் என்பது எந்தவகையில் பேணப்பட வேண்டும்?

அதுதானே எழுத்துச்சுதந்திரம்? எழுதும் எல்லாமே காலத்தை வென்று வாழாது. எல்லா காலங்களிலும் இத்தகு இலக்கியங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன, காலம் நல்லதை வைத்துக்கொண்டு அல்லாததை 'குப்பை'க் கூடையில் போட்டுவிடும்.

அதனால் கவலை வேண்டாமே!

உங்கள் எதிர்காலத் திட்டங்கள்,




தமிழ்கத்தில் கொழுந்தம்மா நூல் வெளியீட்டின்போது கவிஞர்கள் சினிமா பாடலாசிரியர் அறிஞர் பெருமக்களுடன்...

*வெளியீடு காணவிருக்கும் நூல்கள் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

பெரிய திட்டங்கள் எதுவுமில்லை. இறைவன் வழி நடத்துவான் என்ற நம்பிக் கையில் பயணிக்கும் நான், அடுத்து ஆறாவது நூலாக 'ஒரு பிடி கொழுந்து'என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட முயன்று வருகின்றேன்.

*கடைசியாக, நமது தமிழ்நெஞ்சம் இதழைப் பற்றிய உங்கள் கருத்து?*

மின்னிதழாக மின்னும் 'தமிழ் நெஞ்சம்' மாத இதழ் அச்சிலும் வருகின்றது.

உலகம் முழுதுமுள்ள தமிழ் நெஞ்சங் களைக் கவர்ந்து வெற்றிநடை போடும் 'தமிழ்நெஞ்சம்' எப்போதும் புதியவர்களை வாழ்த்தி வரவேற்கத் தயங்குவதில்லை. ஆசிரியர் தமிழ்நெஞ்சம் ஐயா பிரான்சி லிருந்தாலும் தமிழை வளர்ப்பதில் ஒரு சாதனையாளரே! சாமானியனான என் 'கொழுந்தம்மா' நூலை சென்னையில் வெளி யிட்டு என்னை இந்திய வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தியதை மறக்கவே முடியாது.

இறுதியாக தமிழ்நெஞ்சம் ஆசிரியர் தமிழ்நெஞ்சம் அமின் ஐயா, வாசகர்கள், மேலும் இந்த நேர்காணலை நடத்திய சகோதரி வஃபீரா ஆகியோருக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்!

எழுத்தாளரும் கவிஞருமான கோவுஸ்ஸ ராம்ஜி உலகநாதன் வெற்றிப் பாதையில் பயணித்து இலக்குகளை எய்த தமிழ்நெஞ்சம் சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.

## தமிழ்நெஞ்சம்

# இதழில் எழுதுபவர்கள் கவனத்திற்கு...

பிரதிமாதமும் மாதத்தின் முதல் வாரத்தில் இதழ் வெளிவரும். அதற்கேற்றார் போல 20 தேதிக்கு முன்பாக ஆக்கங்களை அனுப்புதல் நல்லது. அதற்குமேல் வரும் ஆக்கங்கள் அடுத்த இதழில் சேர்க்கப்படும். முந்திக்கொள்வது நல்லதல்லவா?

தவிர, ஆக்கங்களை எழுதிவிட்டு அவசர, அவசரமாக ஆக்கத்திற்கான தலைப்பு, மற்றும் எழுதியவர் பெயர்கூட எழுதாமல் அனுப்பிவிடுகிறீர்கள். அப்படி யானவைகள் நிச்சயமாக இதழில் இடம் பெறச்செய்ய முடியாது.

இயன்றவரை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்கிறோம். முகநூல் உள்பெட்டி, வாட்ஸ் அப் போன்ற தொடர்பில் ஆக்கங்களை அனுப்புவதைத் தவிர்க்கவும்.

**மின்னஞ்சல் : editor@tamilnenjam.com**

# வெண்பா போட்டி (பயணம்) - 20

## போட்டியின் கால அளவு : 04 - 14 ஆகஸ்ட் 2023

வணக்கம் பாவலர்களே...

இம்மாத போட்டியின் விதிகள்

நீங்கள் உங்கள் நண்பரை நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திக்க நேர்கிறது. அப்படி சந்திக்கும் போது பொதுவாகவே விசாரிப்புகள் தான் அவ்விடத்தில் இருக்கும். ஆனால்...

இப்போது நீங்கள் விசாரிக்க வேண்டாம். அதற்கு பதிலாக. அவரைக் கடைசியாகப் பார்த்த இடத்தையும், சந்திக்கும் வரை ஆன கால இடைவெளியைச் சொல்லியும்... இத்தனை நாட்கள் எங்கே சொன்றாய் என கேட்கும் படியும் வெண்பா அமைய வேண்டும்... சந்திக்கும் இடம், மற்றும் கால இடைவெளி இவைகளை தங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளலாம்...

**இதோ எ- கா வெண்பா**

.

**சென்னையிலோர் நூலகத்தில் செய்யுள் படித்தபடி**
**உன்னைநான் சந்தித்(து) உடன்பிரிந்தேன் - இன்றோடு**
**திங்களாறு சென்று திரும்பவுனைப் பார்க்கின்றேன்**
**எங்குதான் சென்றாய் இயம்பு...?**

பொதுவான விதிகள் : -

நேரிசை வெண்பா மட்டுமே எழுதவேண்டும், பல வெண்பாக்கள் எழுதினாலும் அதில் ஒன்று மட்டுமே தேர்வு செய்யப் படும், முடிந்த அளவு ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம். **வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.**

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்...

தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....
ஆசிரியர் தமிழ்நெஞ்சம் , மற்றும் ஆசிரியர் குழு.

# மலைக்க வைக்கும் மலேசியா

**பகுதி – 3**



**மருத்துவர்.க.கலைவேந்தன்**

விமானநிலையத்தில் நடந்த அந்த பரவச அனுபவம் இப்போது நினைத்தாலும் இனிக்கிறது... இரவு உணவுக்காக அங்கு ஒரு விமானநிலைய உணவகத்திற்கு சென்றபோது என்னுடைய பால்ய சிநேகிதர் புன்னகையோடு வரவேற்றார்... பல ஆண்டுகள் கழித்து விமான நிலையத்தில் கண்டபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை... பள்ளி இறுதி வகுப்பு படித்தபோது நாங்கள் பேசிக்கொள்வோம்... வெளிநாடு சென்று விருதுகள் வாங்க வேண்டும் சுற்றிப்பார்க்க வேண்டும் என்று... அன்று கண்ட கனவு நனவாகும் வேளையில் அவனைச்சந்தித்தது பரவசத்தை கூட்டியது...

கத்தார் நாட்டில் வேலை செய்வதாக சொன்னார்... அவரிடம் எனது மலேசிய பயணத்தை பற்றி பேசிவிட்டு அருகில் காபி சாப்பிட சென்றோம்... மலரும் நினைவுகளில் மூழ்கினோம்... விமான நிலையத்தில் ஒரு காபியின் விலை 250... விமான நிலையத்தின் வெளியே இந்திய ரூபாய் 20 க்கு கிடைக்கும் காபி உள்ளே ஏன் இவ்வளவு என்று நண்பரிடம் கேட்ட போது அவர் சொன்னார்...

நீங்கள் ஷாப்பிங் என்று பொருள் கொண்டால், விமான நிலையத்திற்கு வெளியே உள்ள சில்லறை விலையை விட, வரி இலவசம் என்பதால், அது பொதுவாக மலிவானது.

ஒரு விமானப் பயணி காத்திருப்பு மண்டபத்தில் இருக்கும்போது, அது அவரது விமானத்தில் இல்லாவிட்டால், அவர் அதை விட்டு வெளியேறுவதற்கான ஒரு சிறிய வாய்ப்பு உள்ளது. மேலும் பெரும்பாலான பயணிகள் தங்கள் விமானங்களுக்காக சுமார் 1.5-2 மணி நேரம் காத்திருக்கிறார்கள். இவர்களில் மிகச் சிலரே ஓய்வறையைப் பயன்படுத்தும் பாக்கியத்தைப் பெற்றுள்ளனர். குறைந்த கட்டண கேரியர்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால், பயணிகளுக்கு கப்பலில் உணவு கிடைக்காது என்பது தெரியும். அவர்கள் அவ்வாறு செய்தால், அது விமான நிலையத்தை விட விலை உயர்ந்ததாக இருக்கும், ஏனெனில் மீண்டும், சிறைபிடிக்கப்பட்ட பார்வையாளர்கள். விற்பனையாளர்களுக்கு இது தெரியும், எனவே அவர்கள் தங்கள் தயாரிப்புகளை வெளியில் விற்கப்பட்டதை விட அதிக விலைக்கு விற்கிறார்கள்.

இதற்கு ஒரு காரணம் விமான நிலையத்தில் தங்கள் கடையை நடத்துவதற்கு அவர்கள் செலுத்தும் அதிகப்படியான வாடகையும், இது தொடர்ச்சியான வணிகத்தின் காரணமாக மிக அதிகமாக உள்ளது.

திரையரங்குகளில் எப்படி இடைவேளை யில் உணவு விற்கப்படுகிறதோ அதே போலத்தான் இதுவும் என்று வணிக ரீதியான காரணங்களை அனுபவத்தோடு சேர்த்து சொன்னார்... எனவே முடிந்தவரை உணவு உண்ணும் வேலையை விமான நிலையத்தின் வெளியிலேயே முடித்துவிட்டு வருவது நமது பர்ஸ் இளைக்காமல் இருக்க உதவும் என்ற உண்மையை இங்கு பகிர்கிறேன்... சென்னை விமான நிலையத்தை சுற்றிப் பார்த்துக்கொண்டே அதன் சிறப்பு களை பற்றி சிந்தித்தேன்...

நமது சென்னை விமான நிலையம்

பழம்பெருமை வாய்ந்தது... சென்னை பன்னாட்டு வானூர்தி நிலையம் இந்தியாவின் தொடக்க காலத்தில் உருவாக்கப்பட்ட வானூர்தி நிலையங்களில் ஒன்றாகும். இது மீனம்பாக்கத்தில் அமைந்துள்ளதால் மீனம்பாக்கம் வானூர்தி நிலையம் என்றும் அழைக்கப்படுகின்றது. முதல் வானூர்தி (புஷ்மோத்) 1932 ஆம் ஆண்டு தரை இறங்கியது. இரண்டாம் உலகப் போரின்போது இராணுவப் பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. 1952 ஆம் ஆண்டு உள்நாட்டு வானூர்தி வாரியம் கட்டுப்பாட்டை ஏற்றுக்கொண்டது. இது தற்போது சரக்கு போக்குவரத்து வானூர்திகள் வந்து செல்லுமிடமாக உள்ளது. 1984 ஆம் ஆண்டு நிகழ்ந்த குண்டு வெடிப்பினால் 1985 ஆம் ஆண்டு மீனம்பாக்கம் அருகில் திரிசூலத்தில் புதிய நிலையம் கட்டப்பட்டது. 1989 ஆம் ஆண்டு புதிய பன்னாட்டு முனையகம் தொடங்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு புதிய பன்னாட்டு புறப்பாடு முனையகம் செயல்படுத்தப்பட்டது. இங்கு இரண்டு முனையங்கள் உள்ளன. ஒன்று அண்ணா பன்னாட்டு முனையமாகும். இரண்டாவது காமராசர் உள்நாட்டு முனையமாகும்.

இந்நிலையம் உலகத் தரத்திற்கான அனைத்து இலவச மற்றும் கட்டண வசதிகளை கொண்டது. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு முனையகம் அருகருகில் அமையப்பெற்று இரண்டும் இணைக்கப்பட்டது. எதிரில் அமையப்பெற்ற திரிசூலம் புறநகர் ரயில் நிலையத்துடன் சுரங்கப்பாதை மூலம் இணைக்கப்பட்டது. இது முதல் இடத்தை பல விசயங்களில் பிடித்துள்ளது அவை:

ISO-9001-2000 சான்றிதழை பெற்ற முதல் பன்னாட்டு முனையகம். உள்நாட்டு முனையகத்தில் aerobridges எனப்படும் வானூர்தியுடன் இணைக்கும் பாலத்தை முதலில் பெற்ற நிலையம் இதுவே.

சுற்றுச்சுழலை கருத்தில் கொண்டு வானூர்தி நிலையத்தில் காகிதக் கிண்ணத்தை (cup) அறிமுகப்படுத்திய முதல் வானூர்தி நிலையம்.

சிறந்த வானூர்தி நிலையம் - உள்நாட்டு முனையகம் என்ற விருது குடியரசுத் தலைவரால் வழங்கப்பெற்றது.

சுகாதாரமான இலவசக் குடிநீரை இரு முனையங்களிலும் வழங்கிய முதல் நிலையம்.

இந்நிலையம் தேசிய நெடுஞ்சாலை NHயை ஒட்டியே அமைந்துள்ளது. இதன் எதிரில் திரிசூலம் புறநகர் ரயில் நிலையம் அமைந்துள்ளது. புதிதாக அமைய உள்ள சென்னை மெட்ரோ ரயில் இந்நிலையத்திற்குள் வந்து செல்லுமாறு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. ஆதலால் நகரத்தின் அனைத்து பகுதிகளுடன் போக்குவரத்து ரீதியில் நன்றாக இணைக்கப்பட்டுள்ளது...

நண்பருடன் காபி அருந்தி விட்டு விமான நிலையத்தின் செய்ய வேண்டிய அனைத்து செயல் பாடுகளையும் முடித்து விட்டு அனைத்து அனுமதியும் பெற்று நண்பருக்கு விடை கொடுத்து விட்டு காத்திருப்பு அறையில் விமானத்திற்கு காத்திருந்தேன்... வானிலை



காரண மாக ஒரு அரைமணி நேரம் தாமதமாகக் கிளம்பும் என்று அறிவிக்கப்பட்டது...

பொதுவாக ஏர்லைன் கோளாறுகள்., விமானப் போக்குவரத்தில் நெரிசல், பூகம்பங்கள் மற்றும் சுனாமிகள், இடியுடன் கூடிய மழை, சூறாவளி அல்லது பனிப்புயல் போன்ற மோசமான வானிலை, முந்தைய விமானத்தில் இருந்து விமானத்திற்கு பயன்படுத்த விமானம் தாமதமாக வந்தது, விமானத்தின் பராமரிப்பு பிரச்சனைகள், பாதுகாப்பு சிக்கல்கள், பயங்கரவாத தாக்குதல்கள் என்று பல காரணங்களால் விமானம் தாமதமாக இருக்கலாம்.. நான் செல்ல வேண்டிய விமானம் பணியாளர் வருகைக்காக காத்திருந்து சற்று காலதாமதமாக புறப்பட்டது... வங்காள விரிகுடா கடலில் மேலே விளக்குகள் சிறியதாக தெரிய இரவுப்பயணம் கண்கொள்ளா காட்சி... அதிகாலை 3 மணி அளவில் விமானம் மலேசியா வந்தடைந்தது... மலேசியா விமானநிலையம் மிக அழகாக அற்புதமாக வடிவமைக்கப்பட்டது...

மலேசியா விமானநிலையம் கோலாலம்பூர் பன்னாட்டு வானூர்தி நிலையம் அல்லது கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையம் என்பது மலேசியாவின் பிரதான வானூர்தி நிலையம் ஆகும். தென்கிழக்காசியாவின் முக்கிய வானூர்தி நிலையங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. கே.எல்.ஐ.ஏ. (KLIA) விமான நிலையம் என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்றது.

விமானநிலையத்தில் பெற வேண்டிய அரசாங்க ரீதியான அனுமதிக்கான அலுவல் கள் முடிந்து விமான நிலையத்தின் வெளியே காத்திருந்தேன்... விழாக்குழுவினரின் வாகனம் வந்தது... நண்பர்கள் வாஞ்சையோடு வரவேற்ற னர்.. மலேசிய மண்ணில் தரைவழிப்பயணம் ஆரம்பித்தது... வழியெங்கும் கண்ட காட்சிகள் நம் இந்திய தேசத்திற்கு மாற்றாக இருந்தது அயல்தேசத்திற்கு வந்திருக்கிறோம் என்பதை நன்றாக உணர்த்தியது... மலேசியாவில் சாலைப் பயணமே பரவசமான அனுபவம்தான்... அடுத்த பகுதியில் விரிவாக சொல்கிறேன்...

தொடரும்...



# வஞ்சியரை வாழ்த்துவமே!

கருவறை வரமதைக் கொண்டவள் தன்னுடைக்
குருதியை அமுதமாய்க் குழந்தைக் களிப்பவள்
தருவெனத் தன்மகன் தளிர்த்திட நினைப்பவள்
திருநிறைப் பண்புகள் தினமுமே ஊட்டுவாள்
கன்னலா யினிக்கக் கனிமொழி பேசுவாள்
மன்னனுக் கன்பினை மாரியாய்ப் பொழிவாள்
இன்முகம் காட்டியே ஏழைக்கும் உதவுவாள்.
பன்முகப் பரிமளம் பாவையின் பசுமையே!
கங்கையை யமுனையை காவேரி பொன்னியை
நங்கையாய் நதிகளும் நானிலம் நனைத்திட,
மங்கலம் பொங்கிடும். மான்மியம் பெருகிட
மங்கையர் பெற்றிடும் மாண்புகள் ஆயிரம்!
உயர்வுகள் உறைந்திட உழைத்திடும் எறும்பவள்,
தயங்கிடா தாட்சியின் தலைவியாய்த் திகழ்பவள்
வியத்தகு விஞ்ஞான விந்தையும் புரிவாள்.
பயமின்றிச் செய்மதி பறக்கிறா ளின்றவள்
தாயெனத் தாதியாய்த் தவமுடன் சேவையில்
ஓயா அலையென உழைத்துமே களிப்பவள்.
நோய்கொண்டு படுக்கையில் நொடிந்திடு பொழுதிலும்,
தேயாத இனிமையைத் தென்றலாய்த் தடவுவாள்!
கொஞ்சிடும் மகவினைக் குலமது செழித்திட,
அஞ்சுகப் பெண்ணவள் அவனியின் வரமதே
நெஞ்சினில் நிம்மதி நிறைத்திட நினைத்திடும்,
வஞ்சியை வளமுடன் வாழ்த்துவோம் வாழ்கவே

கிண்ணியா சபீனா



**பூமாக்கிழவி எனும் ராக்காச்சி**
– ரிஸ்வான் தொடர் நாவல்

– ரிஸ்வான்



# பூமாக்கிழவி..13

## ரிஸ்வான்
## தேநீர் நேரக்கதை

பூமாக்கிழவி எப்போ தின்னனூருக்கு போனாலும் பாண்டு செட்டிக் கடையில பிள்ளைகைமருந்து(வசம்பு), கஸ்தூரி, கோரோஜனம், சுக்கு, திப்பிலி, தேன் புட்டி எல்லாம் வாங்கி கிட்டு, சீமை எண்ணெய் புட்டியில ராவுக்கு விளக்கு எரிக்க சீமை எண்ணெய் வாங்கிகிட்டு அப்படியே நேராப்போயி செகதீசன் வெத்தலை பாக்கு கடையில.. நல்ல மொரட்டு கம்மாரு வெத்தலையும் கொட்டைபாக்கும் பாலக்காட்டு புகையிலை சருகும் வாங்கும், வெத்தலை பாக்கு கடைக்கு பக்கத்துல காளியோட பட்டாணிக்கடையில சூடா பட்டாணியும், உப்புக்கடலையும் வாங்கிகிட்டு குடிசைக்கு திரும்பும் வழியில மீன்கொத்தி கிட்ட பட்டாணி, உப்புக்கடலையை கொடுத்துட்டு போவும்.. பதிலுக்கு பழங்களும் மீனும் மீன்கொத்திகிழவன் கொடுக்கும்.. பூமாக்கிழவி வேணான்னுடும்.. வாங்கி கிடாது..

ஒட்டுறவே இல்லாம தனியா வாழுற சீவனுக்குதான் தெரியும் இன்னொரு சீவனோட துன்பம்.. என்ன என்னன்னு.

பூமாக்கிழவி மேல மீன் கொத்தி கிழவனுக்கு மருவாதை சாஸ்தி..பயமும் கூட. பூமாக்கிழவி எப்போ நல்லா பேசும், எப்போ கடுப்புல நெருப்பை அள்ளி கொட்டும்னு தெரியாது. ஊரு உள்ள இருக்குற சனங்களுக்கும் அதே பயம்தான்..

மாணிக்கம் குரலை ஒசத்தி பாட்டு பாடி கிட்டு தகர டப்பாவுல ஏரி தண்ணீயை முகந்து வந்து முலாம் பழம் கொடிகளுக்கு ஊத்தி கிட்டு இருந்துச்சு.

ஏலா.. மீன்கொத்தி.... நல்லா இருக்கியா..ல பார்த்து எம்புட்டு நாளாச்சு...

ஆத்தா.. நீ எங்கே இந்த பக்கம்... நல்லா இருக்கியா... தின்னன்னூரு போய்ட்டு வாரியா..

பூமாக்கிழவி கொஞ்ச நேரம் மீன் கொத்தி கிட்ட பேசிவிட்டு கௌம்புச்சு..

என்ன ஆத்தா மடியில.. அயிரப் பொடி சேந்துனியா..

ம்ம்.. ராவு கஞ்சிக்கு.. தொட்டுக்க..

இரு ஆத்தா சுருக்கா வாரேன்..

மீன்கொத்தி எந்திரிச்சி போச்சு..

மீன் கொத்தி.. நீரோட்டாத்துல மீன் பிடிக்க கட்டி வச்சிருந்த கூடை பரியில கையை விட்டு உசுரோடு துள்ளிக்கிட்டு கிடந்த விறால் உளுவை மீனுங்களை அள்ளி பனை ஓலை யில நாறு கிழிச்சி செதில்ல மாலை போல கோர்த்து மணல்ல பொறட்டி எடுத்து வந்து பூமாகிழவி கிட்ட குடுத்தது .. மீனுங்க பனை ஓலை நாருல உசுரோட துள்ளி கிட்டு இருந்துச்சிங்க.

நல்லா பழுத்து வெடிச்சி இருந்த முலாம் பழங்களை பறிச்சி பனை ஓலையை வெட்டி அதுல வச்சி கட்டி கொண்ணாந்து பூமாகிழவி கிட்ட கொடுத்தது.. வெடிச்ச முலாம்பழம் வாசனை குப்புன்னு ஏறுச்சு.. மூக்குல குடிசைக்கு கொண்டு போ ஆத்தா..

ஏன் மாணிக்கம்.. செரமம்.. உன் வயத்து பொழப்பை வீணாக்காதே..

ஆத்தா.. வாங்கிக்கிட மனசு இல்லாம வாங்கி கிடுச்சி.. இடுப்புல இருந்த சுருக்குப் பையை உருவி பத்து ரூவா நோட்டை எடுத்து கொடுத்துச்சி..

ஏலா இந்தா மூலரோட்டுக்குப் போயி சாமிநாதான் சோத்துக் கடையில வாய்க்கு ஒனக்கமா புரோட்டாவும் சால்னாவும் வாங்கி தின்னு..

வேணாம் ஆத்தா.. உன்கிட்ட காசு வாங்க தோணல.. சங்கடமாயிருக்கு..

வச்சிக்க மாணிக்கம்.. சந்தோசமா தாரேன்..

உன்னை பாத்து எம்பூட்டு நாளாச்சி.. ஒன்னை பார்த்தது சாமிய பார்த்தப் போல.. வா ஆத்தா நானும் கரைக்கு தொணைக்கு வாரேன்..

மீன்கொத்தியும் பூமாக்கிழவியும் வாழ்க்கையில வந்தது போனதை பத்தி பேசிக்கிட்டே ஏரிக்கரை மேலே காத்தோட்டமா நடந்து போச்சுங்க மீன்கொத்தி பத்திரமா பூமாக் கிழவியை ஏரிக்கரை சரிவுல இறங்கி ஊருக் குள்ளாற போவுற செம்மண் சாலையில இறக்கி விட்டு கிழவியோட சொமையை அதுகிட்ட ஒப்படைச்சிட்டு கிளம்பி போயிடுச்சு. மேற் கால சூரியன் சாய்ஞ்சி கெடந்தது.. மேல் வானத்துல மருதாணி பூசி இருந்துச்சி.

நேரமாச்சு ஏரி மதகு அடைப்பு கல்லை புரட்டிப் போடனும்..ஆத்தா நான் வாரேன்..

பூமாக்கிழவி முந்தானையில் தலையில சும்மாடு கட்டி பழங்கள் சுமையை தலையில வச்சிக்கிட்டு மீன் கொத்தி சரடு போல கோர்த்து கொடுத்த மீன் சரடை சுட்டு விரல்ல சீமை என்னை புட்டியோட கயத்தோட கோர்த்து கிட்டு குடிசையை பார்த்து நடந்துச்சு.. கிழவி மனசுல என்னிக்கும் இல்லாத சந்தோஷம் பொங்கி கிட்டு வந்துச்சி இன்னிக்குப் பூராவும் நல்ல நாளு நல்லத செஞ்ச கொண்டாட்டம் மனசோட வேருல ஈரம் தட்டி இருந்துச்சி.

கொலவை பாட்டு ஒன்னை எடுத்து பாட ஆரம்பிச்சது. நடு நடுவே கொலவை வச்சிக்கிட்டே சத்தமா பாடிக்கிட்டே நடந்துச்சி.. எப்பவாச்சும் பூமாக்கிழவிமனசு இதுபோல சந்தோஷம் கொண்டாடும்..

வேர்ல தண்ணி ஓதம் கட்டுனதும் வயக் காட்டுல இருந்து பச்சை நெல் கதிர்களோட வாசம்.. தூரத்துல கத்திரி நாத்துல இருந்து பூவு பிஞ்சியின் வாசமும் கும்முன்னு கௌம்பி வந்துச்சி பூமாக் கிழவி வயக்காட்டு காத்தை நல்லா இழுத்து அடக்கி வச்சு அனுபவிச்சது என்னா சொகம் பூமிஆத்தாவோட தாய்ப்பால் வாசனை..

பயிறு பச்சைங்கள் ஆணிவேர் நனைஞ்சி ஈரமாச்சுன்னா செடி கொடியில உள்ள மறைஞ்சி கெடக்குற அதோட நெசமான வாசனை எல்லாம் வெளிக் கிளம்பிரும்..

ரொம்ப நாளைக்குப் பொறவு.. பூமாக் கிழவியோட உள்ள இருக்குற உசுரு வேரு

சந்தோசத்துல நனைஞ்சி இருந்துச்சி இன்னிக்கு..

ரொம்ப காலத்துக்கு பொறவு பூமாக் கிழவிக்கு தன்னோட விடலைப் பருவக் காலம் ஞாபகத்துல வந்துச்சி..

காமாட்சி... மனசுக்குள்ளாற இருந்து யாரோ குரல் கொடுத்தாங்க காத்துல சன்னமா கேட்டுச்சு.. காமாட்சி என்னும் பூமாக் கிழவிக்கு..

# பூமாக்கிழவி..14

ரிஸ்வான்

தேநீர் நேரக்கதை

பூமாக்கிழவி குடிசைக்கு வந்து சேந்துச்சு நரிமது கால்வாயில் மடியில சேந்தி பிடிச்ச அயிரப்பொடி மீனையும் கைப்பண்டங்களையும் யசோதா கிட்ட கொடுத்துட்டு அந்த பக்கி மட்டை மூஞ்சில சந்தோச வெளிச்சத்தை பாக்கோணும் யசோதா குடிசை வாசல்ல நின்னு குரலு கொடுத்துச்சு பூமாக்கெழவி..

குடிசைக்குள்ளாற இருந்து பதில் வரலை..

கெழவி ஒசாரா குடிசைக்குள்ள என்ன நடக்குன்னு உத்து கவனிச்சிது..

மறுவாட்டி கெழவி சத்தம் போட்டு கூவுச்சு..

யசோதா.. சிறுக்கி மவளே எங்கேடிப் போனே..

கொஞ்ச நேரங்கழிச்சு யசோதா மாராப்பை சரி பண்ணிக்கிட்டு வெளியே வந்துச்சி.. யசோதா மூஞ்சியில பதட்டம் தெரிஞ்சிச்சு.. கெழவியோட மோப்பம் பிடிக்கும் மூக்குக்கு.. புரிஞ்சிடிச்சி..கெழவிக்கு சுர்ருன்னு உச்சிமுடி பத்தி கிட்டு எரிஞ்சிது..

குழந்தைக்கு பால் கொடுத்துகிட்டே கண்ணு அசந்துட்டேன்... இன்னா ஏன் இப்படி உசுரு போறாப்பல கத்துற.. காலு கையில பாம்பா பொறண்டியிடுச்சு..

அராப்பாக்கோ... பொழுது வைக்கிற நேரத்துல ஒறக்கமா.. தரித்திரம் அண்டுமடி பொட்ட நாயே.. நானும் உன் வயசை தாண்டி வந்த பொம்பளதானடி உள்ளே என்ன நடக்குன்னு தெரியும்...

ஏன்டி நாயே.. ஒடம்புல புள்ளபெத்த ஈரம் காயல அதுக்குள்ள புருஷன் எசவு கேக்குதா.. உனக்கு யசோதாவுக்கு சிவுக்குன்னுச்சி மானக் கேடாயிடுச்சி.. கேவலத்துல உசுருல ஊசி குத்துனாப்போல விதுக்குன்னுச்சி..

ஏ.. கெழவி வாய பொத்து.. சும்மா சிலுப்பாதே பொம்மனாட்டியா நீ... என் புருஷன் கூடத்தான படுத்து கிடந்தேன் இன்னா இப்போ உனக்கு எங்க நோவுது புருஷன் இல்லாத அப்போ எவனோ தெருவுல போறவன் கூட புரண்டுக்கிட்டு கெடக்கலை.

அடி நீ தீப்பிடிச்சி திண்ணையில சாய... மூணு மாசத்துக்குள்ளாற புருஷன் சொகம் பாத்தா பச்ச புள்ளைக்கு முலைப்பால் இல்லாம போவுமுடி... முண்டை... புள்ளை பட்டினியால கெடந்தாலும் பரவாயில்லை ஒனக்கு புருஷன் சொகம் வேணும்..இல்ல

ச்சீ வாய பொத்து மருவாத போயிரும்... பாத்துக்க கெழவி.. ஒரு நாளைக்கு பாரு... நீ தூங்கும் போது அம்மி க் குழவியை தலையில போட்டு நயிஞ்சி புட்டு குடிசையோடு தீய வச்சி கொளுத்திப் புடுவேன்... ஆமாம்...நீயும் பொம்பளதானே ஒடம்புல நீச்ச நாச்சம் இல்லை..

கொளுத்துவ டீ.. எச்சக்கலை நாயீ...

தொடப்ப கட்ட பிஞ்சிரும்...

ரெண்டு பேருக்கும் நடுவே அக்கினி குண்டம்

பத்திகிட்டு சூடு பிடிக்க ஆரம்பிச்சிடுச்சி.. இனி ஊரே நாறி போயிரும்..

யசோதா.. அண்டை குடிசைக்காரி.. வெளி யூர் காரி.. கொளுத்துக்காரன் சுப்ரமணியோட பொஞ்சாதி.. விட்டு கொடுக்காம நாக்கை சொழட்டி சொழட்டி சோழியை உருட்டுனாப் போல கெழவி முகத்துக்கு நேரா கைவிரலை ஆட்டி ஆட்டி கிழவிக்கு சமமாக பேசும்.

என்ன எதுத்துப் பேசினாலும் யசோதா மனசுல கிழவி மேல பாசம் இல்லனு சொல்ல முடியாது...

ஆனால் வீம்புக்காரி இந்தக் கிழவிக்கு நாம ஏன் அடங்கிப் போவனும்னு யசோதா வுக்கு கெழவியோட வாயை அடைக்க எதுத்து பேசும். ஊரு உலகமெல்லாம் என்னப் பாத்து ஜன்னி கண்டு நடுங்குது இந்த சீறு கெட்ட சிறுக்கி மட்டும் சாரையாட்டம் எதுக்க எம்பிகிட்டு நிக்குதேன்னு கிழவிக்கு யசோதா மேல காண்டு..

யசோதா கெழவியோட வாயி அடங்கிடுச் சுன்னா உலுவை மீனாட்டும் வழ வழன்னு நழுவி போயிரும். கெழவி தலையில ஏறுன உக்கிரமும் கொஞ்ச கொஞ்சமா தரையில இறங்கிடும்..

அந்த ஊருல பூமாக்கிழவிக்கிட்ட சரிக்கு சமமா எதுத்து பேசற தெகிரியம் யஸோதாவுக்கு மட்டும்தான் இருந்துச்சி அப்புறம் கொஞ்சம் நேரத்துல..ரெண்டு பேரும் சகஜ சம்மந்தி ஆயிடுவாங்க..

எப்பவும் போல கொடுக்கல் வாங்கல் பண்ட மாற்று முறையெல்லாம் ஆரம்ப மாயிடும்.. வட்டில்ல சோத்தைப் போட்டுக்கிட்டு வாச வெளியில உக்காந்து ஊரு கதை பேசிக்கிட்டே ரெண்டுப் பேரும் நிலா சோறு தின்பாங்க..அப்புறம் ஆத்தா மடியில் இருக்குற பண்டம் யசோதா கைக்கும் யசோதா ஊட்டு குழம்பு சட்டி கிழவி ஊட்டுக்கும் பண்ட மாற்று முறையில பரிமாறிக்குவாங்க..

இந்தா ஏரிக்கரை நரி மதுவு காவாயில ஆத்தா முந்தானைய விரிச்சி சேந்துனேன்..

அயிரப்பொடி.. நம்ம மீன்கொத்தி கிழவன் கொடுத்த வெறால், உளுவை மீனு, முலாம் பழம்.. புள்ளைங்க கிட்ட கொடு.. ராத்திரி சோத்துக்கு மீன் ஆணம் கொழம்பு வச்சி சுடுசோறு பொங்கி ஒணக்கமாத் தின்னு கைபுள்ளைக்கு தாய்ப்பால் சொரக்கும் ஓம்புருஷனுக்கும் ஊத்து ராத்திரி மம்முத கூத்துக்கு அவனுக்கு தெம்பு வோனும்.. இந்த மாதிரி பொடி மீனுலத்தான் ஆம்பள சக்தி அதிகமா இருக்குன்னுவாக.. குதிரை மாதிரி எந்திரிச்சு ஓடியாருவான்.. நடு ராத்திரியில..

சொல்லிட்டு கிழவி யசோதாவை பார்த்து நமுட்டு சிரிப்பு சிரிச்சிது..

மாமன் தெம்பாதான் இருக்காரு.. எனக்கு வேணாம்... நீ போ.. உன் தலையில போட்டு தீயை வச்சுக்க..

நாயே.. உனக்கு இல்லடி.. உன் புள்ளைக்கு தாய் பாலுக்காக ஆத்தா ஏரி மது தண்ணியில உழுந்து வாரி சேந்திகிட்டு வந்திருக்கேன்.. வேணாங்கிற பக்கி மட்ட.. நீ நாசமத்து நாயா அலைய.. இந்தா புடி...

யசோதா பார்வை பூமாக்கிழவிக்கு பின்னாடி தாவுச்சி.. கெழவி பிடியிலிருந்து தப்பிச்சி ஓட நல்ல சந்தர்ப்பம் ஒன்னு வாசல் தேடி வந்துச்சு.. கெழவிக்கு பின்னாடி யாரோ வெள்ளையும் சொள்ளையுமா.. வந்து கிட்டு இருந்தாங்க..

தொடரும்

கல்வி அறிவும்
கரத்தே புரள்கின்ற
செல்வ நிறைவும்
சிதைந்துவிட்டால் – தொல்லுலகில்
செம்மாத்த ஆற்றல்
செழித்தாலும் அஃதிங்கே
சும்மா எனச்சொல்வார்
சூழ்ந்து.

.

ஏடி வரதராசன்

# அரியணை ஏற்றும் உறவே நட்பு!

(விளம் மா விளம் மா)

பாரினி லுண்டாம் ஆயிர முறவு
பார்த்தவர் சொல்ல அறிந்துதான் வந்தேன்
காரிகை போலே நல்லதைச் செய்யும்
கண்கவர் வண்ணம் நட்பென வாகும்!
தூரிகை யாலே வடித்திடும் போதும்
தூசிகள் படியா துறவது நட்பாம்!
தேரினி லேற்று முயர்ந்திடும் உறவே
தேனென இனித்தே தொடர்ந்திடும் என்றும்!!

பிரிவென ஒன்று நெருங்கிடும் வேளை
பரிவுடன் பேசும் பலத்தினைத் தந்தே
அறிவென அருகி லாறுத லளித்தே
அன்பினை நல்கி அணைப்பினைக் காட்டி
வறிநிலை யுடைத்தே உயர்நிலை யடைய
வலக்கரம் நீட்டி வாழ்வினை மாற்றி
சிறப்புடன் வாழ வழியினைக் காட்டும்
சிந்தையே நட்பாம் சிந்தையே நட்பாம்!!

உயரிய செயலைத் தந்திட உதவும்
உன்னத நிலையை அடைந்திட முயலும்
பயத்தினைத் துறக்கப் பலமிடும் குணமும்
பகலிர வைப்போல் பளிச்சிட வைத்தே
நயம்பட நல்கும்! நகைப்பினை வழங்கும்
நாடது போற்றத் துணையென நிற்கும்
அயர்ந்திடு மென்னை ஆக்கமாய் மாற்றி
அரியணை யேற்றும் உறவது வாழ்க!

நா.பாண்டியராசா



# காகம்

வடகம் கொத்த வந்தால்
விரட்டும் நீங்கள்,
மாதத்தில் ஒருநாள்
அழைத்து விருந்திடுவதேனோ?

பழம் தின்று
எச்சமாக விதைத்து
மரத்தை வளர்க்க,
அதை வெட்டுவதேனோ?

ஆக்கிரமித்த வீட்டை
இடித்தால் கொதிக்கிறீர்கள்.
என்னுடைய கூட்டை
கலைத்து சிதைப்பதேனோ?

பங்கிட்டு பசியாற
தெரியாத நீங்கள்,
பங்கிட்டு பசியாறும்
எங்களை கேவலப்படுத்துவதேனோ?

எங்களைப் போல
மற்றப் பறவைகளும்
இருக்கும் வரையே,
உங்களுக்கான வாழ்வு!

பறவை இனமழிந்தால்
பூகோளம் பற்றி எரியும்.
புரிதல் உங்களுக்கிருந்தால்
மரம் வெட்டுவதை நிறுத்துங்கள்!

காகத்தின் ஆதங்கம்
உணர்ந்திடுவீர் மானிடரே...
மரத்தை விதைத்து
மழைநீர் சேமிப்பீர்.

செ. இலட்சுமணக்குமார்
ஈரோடு

# புதுக்கவிதையும் மரபுக்கவிதையும்

## உடுவிலூர் கலா



தமிழ்மொழி பல காரணங்களால் எழிலுற்ற போதும், கவிதையால் மென்மேலும் சுவைபட அழகுறுகிறது.

விதை, கதை, கவி என்கிற மூன்றையும் உள்ளடக்கி கவிதையாக இலக்கிய வெளியில் நின்று நீடித்து வாழ்கிறது. அதாவது, கவிஞனின் மனத்தில் விதையாக விழுந்து, கதையாக உருக்கொண்டு, ஓசையோடு கவிதை யாகின்றது.

கவிதைகள் மரபு, தன்முனை, ஹைக்கூ, புதுக்கவிதை, அந்தாதி கஷல், நவீனகவிதை என இன்னொரன்ன பல வடிவங்கள் இருந்த போதும், மரபுக் கவிதை மட்டும் பலமான ஆணி வேரைக் கொண்டு விழுதெறிந்து வாழ்கிறது என்றால் மறுக்க முடியாது. காரணம், மரபானது தனக்கே உரித்தான தனித்துவத்தோடும் கட்டுப் பாடுகளோடும் விதிகளோடும் தன்நிலை பிறழாது செழிப்போடு உலாவருகிறது.

20ம் நூற்றாண்டு வரை மரபுக் கவிதை தனித்துவ முகவரியோடு மகுடம் சூடிக் கோலோச்சியது. பின்னர் இதன் கட்டுப் பாடுகள் விதிகளை உடைத்து வெளியே வந்தது புதுக்கவிதை. புதிதில் எல்லாமே பொலிவில் திளைக்கும். அதேபோல், புதுக் கவிதையும் வீச்சுக் கொண்டு, தன்னைத் தக்க வைக்கப் பாடுபட்டது. பாடுபாடுகிறது.

எல்லாமே கவிதைதான். ஆனால், மரபு எம்மொழியின் அடையாளம். நமக்கான அடையாளம். என்னைப் பொறுத்த வரையில் எந்த மொழியினராக இருந்தாலும், அந்த மொழியின் மரபைத் தெளிவுறக் கற்க வேண்டும். அந்த வகையில், நாமும் எங்களுக்கே உரித்தான மரபிலக்கண விதிப்படி மரபுக் கவிதைகளை எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும். கவிஞன் என்கிற அங்கீகாரம் மரபுக் கவிதையால் மட்டுமே கிடைக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அதற்காக ஏனையவை கவிதை இல்லை என்று சொல்லவில்லை. இன்று ஹைக்கூ என்கிற யப்பானிய வடிவம், நானிலு என்கிற தெலுங்கு வடிவம் போன்றவை தமிழ் வெளியில் முகிழ்த்து நிற்கின்றன.இதைத் தப்பு என்று சொல்லவில்லை. எல்லாவற்றையும் கற்றுப் கவித்துவம் கொள்வது சிறப்பு. ஆனால், எங்களுக்குச் சொந்தமான மரபைத் தெளிவாகக் கற்க வேண்டும். மரபு கடினமானது. விதிகளுக்குள் கட்டுப்பட்டு சுதந்திரத்தை இழந்து எழுத முடியாது என்பது தான் இயலாமையின் வெளிப்பாடாய் உள்ளது என்பதை வெளிப்படையாக சொல்ல வேண்டியுள்ளது.

புதுக்கவிதை, மரபுக்கவிதை இரண்டையும் ஒப்பீடு செய்தால், புதுக்கவிதையானது மிக வேகமாக ஒருகவிதையில் ஒன்றுக்கு மேற் பட்ட பாடுபொருட்களோடு எழுதிவிட முடியும். இன்றைய இளைஞர்களின் கைக ளுக்கு சிறந்த ஆபரணமாக புதுக்கவிதை விளங்குகிறது.

ஆனால், மரபுக்கவிதை எதுகை மோனை உரசிக் கொள்ள, அடிகள் சீர்கள் அணிவகுக்க, சந்தம் பாடிநிற்கும். புதுக்கவிதை பெண். மரபுக்கவிதை மணப்பெண். தன்னை எதுகை மோனையால் அழகுபடுத்தி மணவறைக்குத் தயாராகி நிற்கிறது மரபு. அதனால், எப்போதும் அழகாகவே ஒளிர்கிறதுமரபுக் கவிதை..

இங்கு மரபோடு புதுக்கவிதையை.

முழுமை யாக நோக்கின், சொற் புணர்ச்சி, எதுகை மோனைப் பொருத்தம் தட்டாத தளைகள் சீரான சீர்கள், ஒற்று, எல்லாமே முக்கியமானவை. ஆனால், சொற் புணர்ச்சி, ஒற்று எழுத்துப்பிழை என்பன எல்லாக் கவிதைகளுக்கும் பொதுவானது. இந்த விதிகளை புதுக்கவிதையாளர் கடைப்பிடிப்ப தில்லை என்பதே புதுக்கவிதைக் கான இழுக்கு.

மரபுக் கவிதை புதுக்கவிதையைத் தடுக்க வில்லை. அதேவேளை, புதுக்கவிதையின் வளர்ச்சி மரபுக்கவிதையை ஒருபோதும் சிதைத்துவிடப் போவதில்லை. காரணம், பழமையின் பண்பாட்டின் வேர் மரபுக் கவிதை.

புதுக்கவிதை தோன்றிய வேகத்தில் இன்று பல சீரற்ற விமர்சனங்களைக் கொண்டுள்ளது. கவிஞர்கள் என்போர் தமது கவித்துவத்தை புதுக்கவிதை குழந்தை மூலம் திணிக்கிறார்கள். குழந்தை அல்லவா! தாங்குமா என்பது வினாவே. காப்பாற்ற வேண்டும் என்பது எனது ஆதங்கம்.

சீர்கள் அடிகள் ஒழுங்கின்றிப் புதுக்கவிதை கள் அரங்கேறுகின்றன. இதனால், இப்படிப் பட்ட புதுக்கவிதைகள் காலத்துக்கு நிலைக் குமா? என்பதற்கு புதுக்கவிதையாளர்களே பதில் சொல்ல வேண்டும்.

எந்தக் கவிதையானாலும் கவிதையே. அவை கவிதைக்கே உரிய அடையாளங்களைக் கொண்டிருக்க வேண்டும். மரபா? புதுமையா? என்று பார்ப்பதை விட, கவிதையா? என்று நோக்க வேண்டும்.

கவிதையின் சில வரிகளாவது படிப்போரின் மனத்தில் ஏதோ ஒரு தாக்கத்தையோ ஈர்ப்பையோ ஏற்படுத்தவேண்டும்.

இன்று புதுக்கவிதை இளையோரை ஈர்த்துக் கொண்டுள்ளது. அதன் விளைவே அடிகள் சீர்கள் பற்றிச் சிந்திக்காமல் சிலர் தங்கள் பாடுபொருளை கவிதை என்னும் பெயரில் எழுதுகிறார்கள். அது உரைநடையாகவும், சிலவேளை கவிதையா? என்கிற கேள்வியையும் எழுப்பி விடுகிறது.

உண்மையில், கவிஞன் என்பவன் பாடு பொருளை ரசித்து ருசித்து எழுத வேண்டும். பாடுபொருளுக்குள் தன்னை ஈடுபடுத்தி எழுதும்போது தான் கவிஞனின் நிசமும் கவிதையில் கலக்கும் என்பது எனது கருத்து.


சிந்திப்பது யாவையும் ஒழுங்கின்றி எழுதி கவிதை என்று சொல்லிவிட முடியாது. அதற்காகவே புதுக்கவிதைக்கும் விதிகளைச் சேருங்கள் என்கிறோம்.

மரபுக்கவிதை எழுதிய வரலாற்றுக் கவிஞர்களும் புதுக்கவிதை எழுதினார்கள். ஆனால், அங்கே ஓசைநயம், ஒழுங்கமைப்பு இருந்தது. பாரதியும் பாரதிதாசனும் மேத்தா வும் கூட எழுதினார்கள்.

இன்று இளையோர் காதலைச் சொல்லவும் முகநூல் வெளியை நிரப்பவும் புதுக்கவிதை கைகொடுக்கிறது. எட்டாக்கனியாக இருந்த கவிதை இன்று, உள்ளங்கையில் கோல மிடுகிறது. இது வரவேற்கத்தக்க விடயம். ஆனாலும், கல்லாகவே படைக்காது வெட்டி வீசி சிற்பமாகப் படைக்க வேண்டும்.

இவற்றை எல்லாம் ஒப்பு நோக்கும் போது மரபுக்கவிதை சிரஞ்சீவி என்ற முடிவுக்கு வர முடிகிறது.

ஆக, புதுக்கவிதையையும் விதிகளை உருவாக்கி அதன் வழிநின்று, எழுதவேண்டும். அப்படி எழுதும் போது சிறப்பான இடத்தில் மெருகேறும் என்பதில் ஐயமில்லை. ஆனாலும், மரபுக்கவிதை எந்தக் காலமும் இயல்பாகவே கவிதை உலகில் செருக்கொடு நடைபோடும். மரபுக்கவிஞர்களும் புதுமையானவர்களாகவே எப்போதும் இருப்பார்கள்.



# சிறுவர்கள் சங்கமம்

*கவிஞர் தமிழ்ஒளி ஐயா குறித்துத்*

## தன்முனைக் கவிதைகள்



1
மக்கள் வாழ்வு உயர
இலக்கியங்களைப் படைத்தார்
கொள்கைத் தூண்களில் ஒளிர்கிறது
தமிழ்ஒளி வெளிச்சம்

2
கருத்துச் சாட்டையை
சுழற்றி வீசினார்
தொழிலாளர்களின் வாழ்வில்
புதுவாழ்வு மலர்ந்தது

3
புதுவை விஜயரங்கம்
இழிநிலை அகற்றும் தமிழ்ஒளியானது
மேடை நாடகங்களில்
புதுயுகம் பிறந்தது

4
அமிழ்தான கவிதை பல
சமைத்து அளித்தார்
சுவைத்த நாங்கள்
படைத்து மகிழ்கிறோம்

5
விழிகளை அகலமாக்கினோம்
சிந்தனை விரிந்தது
புரட்சியின் பாதையில்
புதிய தலைமுறை


**சு.பிரவந்திகா**
*சென்னை*





பா.சபரி வேல்,
*ஏழாம் வகுப்பு,*
*ஊ.ஒ. நடுநிலைப்பள்ளி,*
*தொட்டணம்பட்டி,*
*வேடசந்தூர் வட்டாரம்,*
*திண்டுக்கல் மாவட்டம்.*

◁





△

**மு.அ.நந்திகா பத்மினி**
வயது : 8
பள்ளி – எம்.ஏ.வித்யாஷ்ரம்



# தலைவன் யார்???

அடடே !!! என்ன சத்தம் அமைதியாக இருங்கள் என கூறிக்கொண்டே வந்தார் 'தற்போதைய பழங்களின் தலைவர் கிவி.'

'தர்பூசணி, மாம்பழம், திராட்சை' இவற்றுக்குள் யார் தலைவர் என்ற போட்டி நடைபெற்றது. அப்பொழுதுதான் அவரவர் பற்றி சொல்லுங்கள் எனக் கூறியது ஆரஞ்சு பழம்.

உடனே தர்பூசணி பேச தொடங்கியது.

தர்பூசணி பழத்தை பிடிக்காதவர்கள் யாரும் இல்லை. அதன் நிறத்தைப் பார்க்கும்போது அனைவரின் கண்ணையும் கவரும் வகையில் இருக்கும்.

மேற்புறம் பச்சை நிறமாகவும் உள்ளே சிவப்பும், கருப்பு விதைகளுடன் நாவில் எச்சில் ஊறும் வண்ணம் தோற்றமளிக்கும்.

தர்பூசணி தாவர வகையைச் சார்ந்தது. தர்பூசணி பழம் கோசாப்பழம் எனவும் அழைக்கப்படும்.

இதனில் அனைத்து விட்டமின்கள் நிறைந்து காணப்படும். கோடைகால அமிர்தம் அனைத்து மக்களும் விரும்பி உட்கொள்ளும் பழம் ஆகும். மலிவான விலையிலும் கிடைக்கும்.

எண்ணற்ற கோடை கால நோய்களுக்கு அருமருந்தாக பயன்படுகிறது. தர்பூசணி பழமாகவும், ஜூஸ் ஆகவும், இனிப்பு செய்தும் சாப்பிடலாம். அதன் தோல் பகுதியை முகத்தில் பூசிக் கொண்டால் கரும்புள்ளிகள் வராமல் இருக்கும். தண்ணீர் தாகத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கும்.

பிறகு மாம்பழம் பேச தொடங்கியது.

மா முக்கனிகளில் ஒன்று. காயாகவும் உண்ணலாம். இதன் நிறம் பச்சை, மஞ்சள், இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்படுகிறது.

17க்கும் மேற்பட்ட மாம்பழ வகைகள் உண்டு. அதில் பழச்சாறு, அல்வா, பழமாக காயாகவும் பயன்படுத்தலாம். மாம்பழத்தில் விட்டமின் ஏ, பி, சி ஆகியவைகள் உள்ளன.

பிறகு திராட்சைப் பழம் பேசத் தொடங்கியது.

கடவுளின் செல்லக் குழந்தை எனத் திராட்சையை அழைக்கலாம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள்.

இதில் விட்டமின் பி, பி1, பி2, பி6, பி12 மற்றும் விட்டமின் சி, இரும்புச்சத்து அதிகமாக நிறைந்திருக்கும்.

இவ்வாறாக மூன்று பழங்களும் அதன் பயன்களைக் கூறின. கோடை காலத்திற்கு ஏற்ற பழம் நமது தர்பூசணி ஆகையால் 'கோடைகால தலைவர் நம்ம தர்பூசணி......' என அனைத்துப் பழங்களும் ஏற்றுக் கொண்டன.

**ஜீ.மைத்ரேயி**
வந்தவாசி



# முயல் தேவதை


ஒரு ஊரில் ஆனந்தி என்ற குழந்தை இருந்தாள். ஒருநாள் அவள் பெற்றவர்களுடன் பயணம் செய்யும்போது வழி தவறி ஒரு காட்டிற்குள் சென்றாள். அங்கே ஒரு புதர் அசைந்து கொண்டிருந்ததை ஆனந்தி பார்த்தாள். அந்த புதரின் அருகே அவள் சென்ற போது ஒரு குட்டி முயல் ரொம்ப அழுக்காய் இருந்தது. அதை அவள் எடுத்து தன் அம்மா, அப்பாவிடம் வளர்க்கலாமா? என்று கேட்டாள். அவர்களும் சரி என்று சொன்னார்கள். முதலில் நாம் அதை குளிக்க வைக்க வேண்டும் என்றார்கள்.

ஆனந்தி அந்த முயலுடன் தினமும் விளையாடி மகிழ்ந்தாள். ஒருநாள் ராத்திரி 12.00 மணிக்கு ஒரு திருடன் அவள் வீட்டிற்குள் நுழைந்து விட்டான். அப்போது அங்கிருந்த முயல் குட்டியைப் பார்த்து இதை நாம் பிடித்து சமைத்து சாப்பிட்டுவிடலாம் என்று நினைத்தான். அதை பிடிக்கும்போது அங்கிருந்த ஒரு பெரிய கட்டை தடுக்கி அவன் கீழே விழுந்து விட்டான்.

அப்போது அங்கே வந்த ஆனந்தியை அந்தத் திருடன் பார்த்து விட்டான். அவளை அவன் தாக்க முயற்சி செய்யும்போது அந்த முயல் குட்டி ஒரு தேவதையாக மாறி அந்தத் திருடனை போலீஸிடம் ஒப்படைத்து விட்டது.

பிறகு அந்த தேவதை ஒரு மந்திர முயல் பொம்மையை ஆனந்தியிடம் கொடுத்து ‘நீ உனக்கு என்ன வேண்டுமோ கேள், அது உனக்கு உடனே தரும்‘ என்று கூறி மறைந்தது.

நீதி:
**நல்லதை செய்தால் நல்லதே நடக்கும்**



ஆ.இந்துமித்ரா

# பெற்றோரின் பெருமை

ஒரு ஊரில் ஒரு குடும்பம் இருந்தது.

அதில் அம்மா, அப்பா அண்ணன் தம்பி இருந்தார்கள். அதில் அண்ணன் ஒரு வசதியான பெண்ணைத் திருமணம் செய்தான். தம்பி ஏழைக் குடும்பத்தில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்தான்.

அண்ணன் பணத்தின் மீது நாட்டம் கொண்டு, பேராசை எண்ணத்தில் வாழ்ந்தான். தம்பி அம்மா அப்பாவிற்கு சம்பாதித்துக் கொடுத்துத் தன் குடும்பத்தையும், அம்மா, அப்பாவையும் கவனித்துக் கொண்டான்.

அண்ணன் தன் பெற்றோர் எல்லாச் சொத்துக்களையும் தம்பிக்கே தந்து விடுவார்கள் என்று நினைத்தான். அதனால் அண்ணன் அம்மா, அப்பாவை வீட்டை விட்டு வெளியே அனுப்பினான்.

ஆனால் அம்மாவும், அப்பாவும்... அண்ணன், தம்பி இருவருக்கும் சமமாக சொத்துக்களைப் பிரித்துக் கொடுத்தனர். எவ்விதசண்டையும்உங்களுக்குள் வரக்கூடாது என்று அறிவுரை கூறினார்கள். இறுதியாக அண்ணன் மனம் திருந்தி அண்ணன், தம்பி இருவருமாக அவருடைய அப்பா, அம்மாவை நன்கு கவனித்துக் கொண்டனர்.

நீதி :
**‘பெற்றோரின் பாசமே உலகில் பெரியது‘.**

மு.சஞ்சய்,
ஏழாம் வகுப்பு,
ஊ.ஒ. நடுநிலைப்பள்ளி,
தொட்டணம்பட்டி,
வேடசந்தூர் வட்டாரம்,
திண்டுக்கல் மாவட்டம்.



# மிதிவண்டி



மிதிவண்டி மிதிவண்டி
மிதிக்கிற மிதிவண்டி
மிதிக்க மிதிக்க
வேகமாக போகும் மிதிவண்டி
இரண்டு சக்கர மிதிவண்டி
எனக்கு மிகவும்
பிடித்த மஞ்சள் நிற மிதிவண்டி!



**ஜெ.சி.நேகா**
*7 வயது*
*மூன்றாம் வகுப்பு*
*தோஹா மாடர்ன் இந்தியன் பள்ளி, கத்தார்*



# வாத்து



வாத்து வாத்து
குளத்தில் வாத்து
வெள்ளை நிற வாத்து
பக் பக் பக் வாத்து
குட்டி குட்டி வாத்து
அழகான வாத்து12



**சி.ரா.வெண்பா**
*4 வயது*
*ஓுறா1*
*தோஹா மாடர்ன் இந்தியன் பள்ளி, கத்தார்*

# அண்ணன் உறவு

என் தாயின் கருவறையில் வளரும் போதே
உன் விளையாட்டை நான் ரசித்தேன்.

உன்னோடு விளையாடும் நாள்
எப்போது வரும் என்று எதிர்பார்த்தேன்.

நான் பிறந்த நாள் முதல்
என்னை அரவணைக்கும்
தாயாய், ,தந்தையாய், தோழனாய்,
என்னை வழிகாட்டுகிறாய்.

உரிமையாய் உறவாடும்
என் உயிரின் உருவம் நீயே அண்ணா.

என் உடன்பிறவா
உன்னத உறவு நீயே அண்ணா.

கள்ளமில்லா உள்ளம்தனில்
கற்கண்டாய் நான் கரைந்தேன்.

அன்புக்கு மறு உருவம் நீயே அண்ணா.

மறு ஜென்மம் ஒன்று இருந்தால்
உன் உடன்பிறப்பாய் நான் பிறக்க
வேண்டும்.

உலக சாதனையாளர்.

**முனைவர். ம மோனிஷ்.**
மேட்டூர் அணை.
சேலம் மாவட்டம்.



குழந்தைகள் எழுதிய

## தன்முனைக் கவிதைகள்

நாள்தோறும் உணவுடன்
தவறாது இடம் பெறும்
கீரையுடன் பயன்களையும்
சேர்த்தே பரிமாறுகிறார் அம்மா

சு.பிரவந்திகா, சென்னை

உலகை பார்த்து
சிரிக்க மறந்து விட்டு
திறன் பேசியை பார்த்து
தன்னையே மறக்கிறான்..


ஸ்ரீ விகாஷ்

யானையே வந்தாலும்
யார் வந்து போனாலும்
பயமே வராது
அப்பாவின் கைவிரல் பிடித்திருந்தால்...

ம.தரணிபிரியா, மலேசியா

அழகான இயற்கையை
யாரும் பாதுகாப்பதில்லை
இயற்கை இல்லை எனில்
மனிதனும் இல்லை

பா. நித்யா, சென்னை



சா. சபரி பெருமாள்
ஏழாம் வகுப்பு,
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
தொட்டணம்பட்டி,
வேடசந்தூர் வட்டாரம்,
திண்டுக்கல் மாவட்டம்.



# முயற்சியே வெற்றி

அன்பின் சங்கமம் சிறுவர் உலகம் குழந்தைகள் எழுதிய தொடர்கதை

விமலாபடிக்கும் பள்ளியில் இன்று குடியரசு தின விழா. அன்று குழந்தைகள் கலந்து கொள்வதற்கான நிறைய போட்டிகள் அறிவிக்கப்பட்டு இருந்தன. பேச்சுப் போட்டி ஒன்றில் கலந்து கொள்ள விமலா பெயர் கொடுத்து இருந்தாள்.

இரண்டு நாளாக அவள் அம்மா கமலாவை நச்சரித்து பேச்சு போட்டிக்கு எழுதி வாங்கியும் இருந்தாள்.

குடியரசு நாளன்று காலையில் எழுந்து குளித்து முடித்து பள்ளிக்கு தயாராகிக் கொண்டு இருந்தாள் விமலா.

“ஏய்! விமலா இன்னிக்கு தானா உங்கள் பள்ளியின் குடியரசு தின விழா போட்டி” என்றார் விமலாவின் அம்மா.

“ஆமாங்க அம்மா... என்று ஒருவித பயத்துடன் நான் இந்த முறை கண்டிப்பா நல்லா பேசுவேன்மா” என்றாள் விமலா.

“ம் பார்க்கலாம்! பார்க்கலாம்! இப்படிதான் ஒவ்வொரு முறையும் சொல்லுற கடைசியில மேடையில் போய் எல்லாத்தையும் மறந்துட்டு என் மானத்தை வாங்குற...”

“எல்லாரும் என்ன பார்த்து கேலி பண்ணி சிரிச்சுக்கிட்டு கேள்வியா வேற கேட்குறாங்க? உன் பொண்ணுக்கு நீ ஒன்னுமே சொல்லி தர மாட்டியானு? நான் அவங்க கிட்ட என்னத்த சொல்ல??” இந்த முறையும் அப்படி நடந்தால் அவ்வளவுதான் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது பார்த்துக்கோ...”

“இல்லைங்க மா! இந்தத் தடவை நான் கண்டிப்பா நல்லா பேசுவேன்மா... என்ன நம்புங்கமா! நான் வேணும்னா உங்கிட்ட சொல்லிக் காண்பிக்கவா?”

“அது சரி! உன்னைப் பத்தி எனக்கு தெரியாதா... நீ தரையில் இருந்து பேசும் போது எல்லாம் நல்லாதான் பேசுவே... மேடையேறினால் எல்லாம் மறந்து விடும் என்ன பண்றது உன்ன வச்சு?” என்று திட்டித் தீர்த்தார் விமலாஅம்மா...

அம்மா மற்றும் விமலாவின் உரையாடலைக் கேட்டுக்கொண்டே உள்ளே வந்த அப்பா “இங்க பாரு விமலா, மேடைல ஏறி பேச உனக்கு பயமா

இருக்கு அவ்வளவுதான். அதனாலதான் ஒவ்வொரு முறையும் நீ பேச்சு போட்டியில் கலந்துக்க ஆர்வமா தயாராகியும் மேடையில் உன்னால பேச முடியாமல் போகுது."

"முதல்ல நீ அந்த பயத்தை விட வேண்டும். ஒரு முறை நீ மேடை ஏறி தைரியமாக பேசினால் அதுக்கப்புறம் உனக்கு பயம் மறைந்து மேடைப்பேச்சு பழகிடும்" என்று அறிவுரை வழங்கினார்...

அப்பாவின் பேச்சைக் கேட்டதும் விமலா விற்கு பயம் கொஞ்சம் குறைந்ததைப் போல இருந்தது.

"சரிங்க அப்பா, நான் நல்லா தைரியமாக பேசுவேன் அப்பா" விமலா சொன்னதோடு நில்லாமல் பள்ளிக்கூடத்திற்குத் தயாராகிக் கொண்டே மீண்டும் ஒருமுறை பேச்சுப் போட்டிக்கு உரியனவற்றைப் பேசிப் பார்த்தாள்.

விமலாவுடைய அப்பா இடையிடையே சில திருத்தங்கள் சொல்ல அதையும் கவன மாகக் கேட்டுக் கொண்டாள்.

அறிவுரை கூறியதோடு நில்லாமல் விமலாவின் அப்பா விமலாவை அழைத்துக் கொண்டு அருகே உள்ள கோவிலுக்குச் சென்றார்.

அங்கே இருந்த விழா மேடை ஒன்றில் விமலாவை ஏற்றி நிறுத்தினார். விமலாவை பார்த்து இப்பொழுது பேசும்படி கூறினார். விமலாவும் முதலில் தயங்கினாலும் பயம் இருந்தாலும் போகப் போக தைரியமாக பேசினாள்.

கோவிலுக்கு வந்திருந்த மக்கள் விமலாவின் பேச்சைக் கேட்டு அவளை பாராட்டினர். விமலாவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

அப்பா விமலாவுக்கு தேவையான அறிவுரை கள் கூறி "போட்டியில் உன்னால் நன்றாக பேச முடியும்" என்று தைரியம் கொடுத்தார்.

"சரி அப்பா, நான் கண்டிப்பாக இந்த முறை போட்டியில் வெற்றி பெற்றுவிடுவேன்" என்று கூறி விட்டு நம்பிக்கையுடனும் உற்சா கத்துடனும் பள்ளிக்கு சைக்கிளில் புறப்படத் தயாரானாள்...

"இங்க பாரும்மா, நானும், அப்பாவும் மாலை நிகழ்வு தொடங்கும் பொழுது வருவோம்.... நீ எப்படி சொல்லுறனு பார்ப்போம் சரியா..." என்றார் அம்மா.

"நீ சும்மா அவளை எதாவது சொல்லாத அவ கண்டிப்பா நல்லா பேசுவா" என்றார் அப்பா....

சிரித்த முகத்துடன் அப்பா, அம்மாவிடம் விடைபெற்று பள்ளிக்கு வேகமாக சைக்கிளில் சென்றாள்.

அவள் போன வழியில் கீழே இருந்த பள்ளத்தைக் கவனிக்காமல் சென்று அதில் விழுந்து அவள் காலில்நல்ல அடி. அதனுடன் அழுதபடி பள்ளிக்குச் சென்றாள்.

பள்ளியில் விமலா அழுவதைப் பார்த்து ஆசிரியர் அங்கே வந்தார். விமலா விடம் "எதற்காக அழுதுகொண்டே இருக்கிறாய்" என்று விசாரித்தார்.

விமலா நடந்ததைக் கூறினாள். பிறகு தான் பேச்சு போட்டியில் கலந்து கொண் டுள்ளதையும் பயத்துடன் கூறினாள். உடனே ஆசிரியர் விமலாவிற்கு ஆறுதல் கூறிவிட்டு அவள் காயத்திற்கு மருந்து போட்டு விட்டார்.

பிறகு விமலாவை பேச்சு போட்டியில் கலந்துகொண்டு பேசுவதற்கு சில அறிவுரை களைக் கூறினார். மீண்டும் அவள் பயத்தைப் போக்கி நம்பிக்கையையும், தைரியத்தையும், வரவழைத்து பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு நன்றாக பேசுமாறு ஆசிரியர் அறிவுரை கூறினார்.

உடனே, விமலா தான் அப்பா கூறியதை யும், ஆசிரியர் கூறியதையும் நினைவுப்படுத்தி உற்சாகமாக பேச்சு போட்டியில் பேச தயா ரானாள். நிகழ்ச்சிகள் ஆரம்பித்து விட்டது.

தனது பெற்றோருக்காக காத்திருந்த விமலாவிடம், விமலாவின் தோழிகள் வந்து உனது அப்பா, அம்மா வந்து விட்டார்கள் என்று கூறினார்கள். விமலா தனது பெற்றோரைப் பார்த்ததும் இன்னும் உற்சாகமாக இருந்தாள். ஆனால், விமலாவின் அம்மாவிற்கு சிறிது கலக்கம் எப்படி பேச போகிறாள் என்று...

தனது அம்மாவின் கண்களை பார்த்து விமலா புரிந்து கொண்டாள். விமலா தன் கண்களால் அவள் அம்மாவிற்கு நம்பிக்கை கொடுத்தாள். மேடையில் இருந்து விமலாவின் பெயரை அழைத்தார்கள்.

“அவளுக்கு சிறிது பயம் வந்தாலும் கூட உன்னால் முடியும்” என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு பேசுவதற்காக மேடை ஏறினாள்.

பரிசுக்காகப் பேசினால்தானே பயம். என்னால் பேசமுடியும் என்பதற்காக மட்டுமே பேசுகிறேன் என்று நினைத்துக் கொண்டாள். ஒரு நிமிடம் கண் மூடி ஆழ மூச்சு இழுத்து விட்டாள். பயம் அகன்றது. மடை திறந்த வெள்ளமாய் பேசினாள். விமலா பேசி முடித்ததும் பலத்தக் கைதட்டல் எழுந்தது.

பேச்சுப் போட்டியின் இறுதியில் வெற்றி பெற்றவர்கள் பெயர் அறிவிக்கப்பட்டது. விமலாவுக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது...

அதை எடுத்துக் கொண்டு தன் அம்மாவிடம் சென்றாள். அம்மா அடுத்த முறை கண்டிப்பாக முதல் பரிசு வாங்கி விடுவேன் என்றாள்.

அதற்கு அவள் அம்மா கூறிய பதில் அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. “பரிசு என்னம்மா பெரிய பரிசு... நீ உன் காலில் அடிப்பட்டு வலியில் இருந்தாலும் மனம் தளராமல் நம்பிக்கையோடு பேசி அசத்திட்ட... அது போதும் எனக்கு” என்றார்.

இப்படி சொன்னதும் விமலா தன் அம்மாவைக் கட்டியணைத்துக் கொண்டு “அம்மா, நீங்கள் நான் போட்டிக்கு கிளம்பும் பொழுது எல்லாம் மற்றவர்களுக்காக என்னை இப்படி திட்டிக்கிட்டே இருக்கிறீர்களே என்று எத்தனையோ முறை நினைத்து கொண்டு இருந்தேன். இன்று தான் உங்கள் மனம் எனக்குப் புரிந்தது” என்று அவள் அம்மாவிடம் மன்னிப்பு கேட்டாள்.

அதைப் புரிந்தது போல அவள் அப்பா அவளைப் பார்த்து சிரித்துக் கொண்டு இருந்தார். அன்று முதல் அவள் அடுத்தடுத்துக் கலந்து கொண்ட அனைத்துப் பேச்சுப் போட்டிகளிலும் வெற்றி பெற்று ஒரு மேடைப் பேச்சாளராக மாறி விட்டாள்.

**செ.ப. கமல் சங்கர்**
**பா. அனிஸ்குமார்**
**சு.பிரவந்திகா**
**ச.ரித்திகா**
**செ.கரோலின் பெல்சியா**
**செ.ப. தர்ஷன்**

**தொகுப்பாளர் : லக்ஷ்மி செந்தில்**





**செ.பெரிய பாண்டி.**
ஏழாம் வகுப்பு,
ஊ.ஒ. நடுநிலைப்பள்ளி,
தொட்டணம்பட்டி,
வேடசந்தூர் வட்டாரம்,
திண்டுக்கல் மாவட்டம்

# விதியை மதியால் வெல்லலாம்

ஒரு நாட்டில் ஒரு அரசர் இருந்தார். அவர் மிகவும் நல்லாட்சி புரிந்தார். அவர் ஆட்சியில் நாடு மிகவும் மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. எனினும் அரச ருக்கு தனக்குபின் தன் நாட்டை ஆள வாரிசு இல்லை என மிக வருத்தம் அடைந்தார்.

அதனால் அவர் அரசவையை கூட்டினார். அதில் முடிவு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அது என்னவவன்றால் எவராயினும் முன் வந்து அரசராகலாம். ஆனால் அவரின் ஆட்சி காலம் ஐந்து ஆண்டு மட்டுமல்லாமல் அதற்குப்பின் ஆயுள் காலம் முழுவதும் வனவாசம் செல்ல வேண்டும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதைக்கேட்டு சிலர் வியந்தனர் பலர் பயந்தனர். இந்நிலையில் வாலிபன் ஒருவன் முன்வந்து தன்னை அரசனாக்குமாறு வேண்டி னான்.

அதற்கு சிலர் நீ சிறியவன் ஏன் நீ உன் வாழ்க்கையை வீணடித்துக் கொள்கிறாய். எனக் கேட்டனர்.

அதற்கு அந்த வாலிபன் புன்னகைத்த முகத்தோடு அரசனாக்குமாறு கூறினான். அரசர் அவன் முகத்தைப் பார்த்து கேள்வி எழுப்பாமல் ராஜபட்டாபிஷேகம் நடத்தினார்.

அவனும் ஐந்தாண்டு நல்லாட்சி புரிந்தான். மக்கள் வாலிபனை நிரந்தர அரசனாக்குமாறு வேண்டினார்கள். ஆனால் அவன் மறுத்து விட்டான். புன்னகைத்த முகத்தோடு வனவாசம் கிளம்பினான்.

அவையோர் அனைவரும் ஆச்சரியப்பட்ட னர். உடனே அமைச்சர் நாடாளும் அரசர் பதவியை விட்டு வனவாசத்திற்கு எவ்வாறு உன்னால் இவ்வளவு சந்தோஷமாக செல்ல முடிகிறது என்று வினவினர்.

அதற்கு அவன் என்னுடன் வந்து வனவாசம் செல்லும் காட்டை வந்து பாருங்கள் என்றான். அங்கு சென்ற அனைவரும் வியந்தனர்.

ஏனெனில், அந்த காட்டின் நடுவில் ஒரு மாளிகை இருந்தது. இது எவ்வாறு நிகழ்ந்தது என அனைவரும் கேட்டனர்.


அதற்கு அவன் என் ஆட்சி காலத்தில் முதலாம் ஆண்டில் இங்கு உள்ள கொடிய விலங்குகள் அனைத்தையும் பாதுகாப்பான வேறு இடத்திற்கு மாற்றினேன். அதற்குப்பின் என் வாழ்நாள் முழுவதும் நான் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்காக ஒரு அரண்மனையை உருவாக்கினேன்.

என் ஐந்தாண்டு அரசாட்சியில் நாட்டையும் சிறப்பாக ஆண்டு வந்தேன். அதே சமயம் என் மீதி வாழ்க்கையையும் அழகாக மாற்றி அமைத்துக் கொண்டேன்.

நீதி : வாய்ப்புகள் அனைவருக்கும் அமையும். அந்த வாய்ப்பை மதியை கொண்டு விதியை வெல்பவனே சிறந்த புத்திசாலி.

**B.பாரதிக்குமார்**
XI A3C
JEEVANANDAM SCHOOL





## புத்தகம்

எங்கள் ஊரில் நடந்தது
புத்தகக் கண்காட்சி
படித்த எங்கள் மனத்தில்
அது கண்கொள்ளாக் காட்சி

சிந்தனையைத் தூண்டுவது - புத்தகம்
நல்லறிவை வளர்ப்பதும் - புத்தகம்
மேதைகளை உருவாக்கும் - புத்தகம்
உயர்கல்வி தரத்துடனே
உயர்பதவி அளிப்பதுவும் - புத்தகம்
நல்ல கருத்துகளை
நமக்கெல்லாம் புகட்டுவதும் - புத்தகம்

புத்தகங்கள் படிப்போம்
மெத்தபுகழ் பெறுவோம்
வித்தகனாய் உயர்வோம்



ப. தட்சணாமூர்த்தி
XI - AICI
ஜீவானந்தம்
அரசினர் மேல்நிலைப் பள்ளி









**எழுதியவர்கள் :**

**அத்தியாயம் 1 : கி. இரகுநாதன்**

**அத்தியாயம் 2 : ருக்மணி வெங்கட்ராமன்**

**அத்தியாயம் 3 : வனஜா முத்துக்கிருஷ்ணன்**

**அத்தியாயம் 4 : விஜி சீவா**

**கதை நெறியாளுமை : விஜி சீவா**

**ஓவியம் : கௌதம்**


# ஓடிப் போகலாமா...?



**அத்தியாயம் 1**

**எழுதியவர் : கி. இரகுநாதன்**

*'நாம இப்பவே ஓடிப் போகலாமா..?' என்றாள் ஆனந்தி.*

*'ஓ..! ஓடிப் போகலாமே...' என்றான் வசந்த்.*

*'எங்கேயாவது கண் காணாத இடத்துக்கு ஓடிப் போகணும் வசந்த்... யாரும் இல்லாத ஒரு தீவு.. அங்க நீ, நான்....'*

*'யூ மீன்.... லைக்... நித்தியானந்தா..???'*

*கலகலவென சிரித்தாள் ஆனந்தி. 'யா... யா.. எக்ஸாக்ட்லி. ஒரு சின்ன மாற்றம். அங்க நான் தான் சீஃப்.. நீ என் பக்கத்துல நிக்கணும்.. நான் எப்பவும் பேசிகிட்டே இருக்கணும். ஆங்... ஆனா என் பேரு இன்னமும் கொஞ்சம் அட்ராக்ஷனா இருக்கணுமே..??..ம்... என்ன வைக்கலாம்...?'*

*'இப்பல்லாம் ஆனந்தான்னு பேரு வெச்சிக்கறது தான் பேஷன். இப்படி வெச்சுக்கலாமா..?? ஆனந்தானந்தி..?????'*

*'உவ்வே... என்ன ரசனை வசந்த்... பேரு நல்லாவே இல்ல.. நானே சொல்றேன்.. வசந்த் ப்ளஸ் ஆனந்தி.. வசந்தானந்தி.. எப்படியிருக்கு என் பேரு..?'*

*வசந்த் கைகளை ஜோராகத் தட்டினான். 'பேஷ்... பேஷ்... ரொம்ப நன்னாயிருக்கு..'*

*'ம்... அங்க நீ.. நான்.. அப்புறம் நம்ம குழந்தைங்க... நூறு...! நான் வதவதன்னு பெத்து போட்டுகிட்டே இருக்கணும்.. நம்ம குழந்தைங்களை சுதந்திரமா விட்டுடணும். கட்டுப்பாடே வேணாம்.. அதுங்களுக்கு எப்ப தோணுதோ அப்ப படிக்கட்டும். ஒருத்தரோட இன்னொருத்தர் சண்டை போடட்டும். மறுபடியும் ஒண்ணா சேரட்டும். நாம தள்ளி நின்னு அதுங்க பண்ற ஒவ்வொண்ணையும் ரசிக்கணும்..'*

'

ஆனா.... பிள்ளைங்க பெரிசானப்புறம் யாரோட கல்யாணம் பண்ணி வைக்கப் போற...?'

ஆனந்தி நாக்கை கடித்துக் கொண்டாள்.. 'அட.. ஆமால.. நான் இதை யோசிக்கலை பாரு..' என்றாள். இலக்கில்லாமல் எங்கேயோ வெறித்துப் பார்த்தபடி சொன்னாள்.

'எனக்கு இந்த ப்ரோக்ராமிங், கோடிங், டீ-பக்கிங், டேட்டா சயின்ஸ் எதுவுமே பிடிக்கலை. எவ்வளவு பணம் இருந்து என்ன..?? எதுவுமே சமயத்துக்கு உதவாது. சந்தோஷமா வாழ பணம் ஒரு பொருட்டே இல்லைனு தெரிஞ்சிக்க எனக்கு இருபத்தெட்டு வருஷம் தேவையா இருந்திருக்கு.. இது என்ன லைஃப் வசந்த்....' அதற்கு மேல் பேச முடியாமல் குலுங்கி குலுங்கி அழுதாள். வசந்த் அவள் தலையை மெல்ல கோதினான். சட்டென நிமிர்ந்தவள் அவனை தன்னருகே இழுத்தாள். அவன் கண்களையே உற்று நோக்கியபடி கேட்டாள்.

'எனக்கு முத்தம் தரியா..?'

வசந்த் குனிந்து அவள் கன்னத்தில் முத்த மிட்டான்.

மீண்டும் அவன் முகத்தைத் திருப்பி, கழுத்தைக் கட்டிக் கொண்டு, கண்களைப் பார்த்தபடி சொன்னாள்.

'

சைவம் வேண்டாம்... அசைவம் தான் வேண்டும்...'

அடுத்த சில நிமிடங்கள் அவன் செய்கையை அணு அணுவாக ரசித்தாள். திடீரென்று அவனை விலக்கினாள்.

'வசந்த்... நான் சொல்றதை கண்டிப்பா செய்யறேன்னு எனக்கு சத்தியம் பண்ணித் தருவியா..?'

'சொல்லு..'

'முதலில் சத்தியம் பண்ணு..'

'ஓகே பண்றேன்..'

ஆனந்தி உள்ளங்கையை காட்டினாள்.

'ப்ராமிஸ்...????'

'ப்ராமிஸ்...!'

'நீ வேற எவளையாவது கல்யாணம் பண்ணிக்க...' என்றாள் ஆனந்தி.

வசந்த் உறுதியுடன் சொன்னான். 'முடியாது..'

ஆனந்தி அவன் மடிமீது படுத்து கொண்டாள். 'எனக்கு ப்ராமிஸ் பண்ணியிருக்க வசந்த்.. எனக்காக கொஞ்சம் சிரியேன்' என்றாள்.

வசந்த் முதல் முறையாக... லேசாகப் புன்னகைத்தான்.

'இது தான் என் வசந்த்... என்னை மயக்கிய இந்தப் புன்னகை தான் எனக்கு வேணும்... வசந்த்... இந்தப் புன்னகை பூத்த முகத்தோட உன்னை அப்படியே பார்த்துகிட்டே இருக்கலாம் போல இருக்கு...' என்றாள்.

பார்த்தாள்...
பார்த்தாள்....
பார்த்து கொண்டே இருந்தாள்...
பார்த்து கொண்டே....

Power Point Stories – 9

## பவர் பாயின்ட் கதைகள் – 9

தன் மடி மீது படுத்திருந்தவளிடம் மாற்றத்தை உணர்ந்தான் வசந்த்... அதுவரை அடக்கி வைத்திருந்த சோகம் அனைத்தும் வெடித்துக் கிளம்ப... அந்த மருத்துவமனையே அதிரும் வண்ணம் அலறினான்.

'ஆ.........னந்............ தீ'

... ... ...



## அத்தியாயம் 2

**எழுதியவர் : ருக்மணி வெங்கட்ராமன்**

"ஆனந்தீ.....' என்று வசந்த் அலறியது அருகிலிருந்த அனைவரையும் உலுக்கி விட்டது. அந்த ஒற்றை வார்த்தையில் வெளிப்பட்ட வசந்தின் காதல்... அந்த அரை மணி நேரம் மீண்டும் வருடிய வசந்தின் வசந்தம்... ஒரு சகாப்தம் விரைவில் முடிந்து விட்டதை மருத்துவர் உறுதி செய்ய, அவனின் நடுங்கிய கண்ணீர்த்திவலைகள், அவன் வாழ்வில் நடந்ததையும் இனி நடக்கப் போவதையும் உணர்த்த முயற்சித்தின!

... ... ...

ஆனந்தியின் புகைப்படத்தை நீண்ட நேரம் உற்று நோக்கிய வசந்த், 'கல்யாணம் ஆன புதிதில் என்னிடம் எத்தனை அன்புடன் இருந்தாய் நீ...? என் அணைப்பின்றி உறங்க மாட்டேயே ஆனந்தி.! உன்னை மாற்றியது எது?' வசந்த்... வசந்த்...' என நொடிக்கொரு முறை காதலுடன் என் தோள் சாய்வாயே ஆனந்தி.... உன் வாழ்க்கை ஏன் தடம் மாறியது...? என் மேல் காதல் குறைய யார் காரணம்....?' மனதிற்குள் புலப்பினான் வசந்த்.

ஆனந்தியின் செயல்களும் வார்த்தைகளும் தீவிரம் அடைந்த அந்த நாள் ஞாபகம் வந்தது..!

'வசந்த்....! என் வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவேறும் நாள் வந்து விட்டது' எங்கோ பார்த்தபடி சொன்னாள் ஆனந்தி.

புன்னகையுடன் அருகில் வந்த வசந்த், 'ஆனந்தி...! என்ன சொல்ற? ஏதாவது விசேஷமா...?' ஆர்வமாய் அவள் கையைப் பிடித்தபடி கேட்டவனை ஏளனமாகப் பார்த்தபடி அவன் கையை உதறினாள். 'ச்சீ.... அதெல்லாமில்லை... உலகத்தில் சாதிக்க எத்தனையோ விஷயங்கள் இருக்கு. எனக்கு இப்ப தான் புரிய ஆரம்பிச்சிருக்கு. என் மேல ரொம்ப அன்பு காட்டுற மாதிரி வீட்டுக்குள்ளேயே என்னை அடைச்சு வைக்கலாம்னு நினைக்காதே வசந்த்...என்னோட திறமையைப் பத்தி எனக்கு முன்னாடியே தெரிஞ்சிருந்தா கல்யாணமே செய்து கொண்டிருக்க மாட்டேன்.' எடுத்தெறிந்தார் போல் பேசும் ஆனந்தியைக் கண்டு அதிர்ச்சியுற்றான் வசந்த்!

'சரி... ஆனந்தி..! டென்சன் ஆகாதடா... பாரு உனக்கு எப்படி வேர்க்குது.... மூச்சு வாங்குதுனு.... கொஞ்சம் உட்காருமா... டாக்டர் கிட்ட போவமா....' பரிவுடன் கேட்டவனை நெருப்பாய் பார்த்தாள்!

'பேச்சை மாற்றாதே' என்று வெறுப்பாய்க் கூறினாள்.



முகைன் கௌதம்

‘சரி... உனக்கு எப்படி வாழ விருப்பமோ அப்படி இரு. எனக்கு உன் மேல் உள்ள காதல் என்றும் மாறாது..... நீ எப்படியிருந்தாலும் எனக்கு உன்னை ரொம்ப பிடிக்கும்டா குட்டிமா‘ செல்லமாய் அவள் கன்னம் கிள்ளி, கவலையுடன் விலகினான் வசந்த்.

... ... ...

கேரியர் குரோத், பணம், புகழ் என்று வாழ்க்கையின் இளமையை அடகு வைத்த ஆனந்தியா இன்று ’ஒரு முத்தம் தா’ என்று கேட்டாள்...!?!

அவளை மறக்க முடியாமல் நான் தவித்து கடந்த நாட்களைப் பற்றி அவளுக்குத் தெரியுமா ?

ஆனந்திக்கு ஏன் இந்த நிலை? கடந்த காலத்தில் அவளுக்கு என்னதான் நேர்ந்தது? இப்பொழுது ஏன் இந்த மாற்றம்? எதற்காக என்னைத்தேடி வந்தாள்...? வசந்த் ஆனந்தியின் நினைவுகளுடன் போராடினான்.

’கடைசி வரை எதையும் சொல்லாமல் சென்று விட்டாயே..... ஆனந்தி..! ஏன்டா இப்படி செஞ்சுகிட்ட....? உன் இறப்பின் உண்மையான காரணம் என்ன...? பணமா, புகழா...? ஏன் இப்படி உருக்குலைந்து போயிட்ட...? இறக்கும் தருவாயில் ஏன் இந்த சத்தியம்...? நீ இருந்த இதயத்தில் வேறு ஒரு பெண்ணா..! என் காதல் பற்றி உனக்கு தெரிந்தும்... ஏன் இப்படிச் சொன்னாய் குட்டிமா...?’ சத்தமாய் அழுதான்....திக்கற்ற காட்டில் அலைவது போல் உணர்ந்தான்!.

சற்று நேரத்தில் வசந்தின் செல்போன் அலற.... ‘ஹலோ...‘

மறுமுனையில் அழைத்த குரலைக் கேட்டு திகைத்து நின்றான்!!?

... ... ...



**அத்தியாயம் 3**

**எழுதியவர் : வனஜா முத்துக்கிருஷ்ணன்**

யாழினும் இனிய அந்தக் குரல்..... எங்கேயோ கேட்ட அந்தக் குரல்.... வசந்த் சுதாரித்த அந்த நொடி, அந்தக் குரல் மீண்டும்...

‘ஹலோ வசந்த்...‘ என்று கூப்பிட.. திடுக்கிட்டான் வசந்த்.

... ... ...

’ஐ வாண்ட் டு லிவ் அலோன்.’

ப்ளீஸ்...என்னை விட்டுடு.. நீ என் பக்கத்தில் வந்தாலே வாந்தி வருது..’ என்று சொன்ன நீ, இன்று என் ஒரு அணைப்பிற்காகவும், ஒரு முத்தத்திற்காகவும் ஏன் ஆசைப்பட்டாய்...?’ ’ஐ அம்.. லீவிங் யூ.’. என்று என் மனதை உடைத்த நீ, இத்தனை நாள் கழிச்சு ஏன் வந்தே...?! என்னவாயிற்று உன் உடம்புக்கு....? ஏன் இப்படி மெலிந்து பொலிவிழந்து போனாய்? கடைசி வரை என்னிடம் எதையும் சொல்லாமல் அவசரமாய் ஏன் சென்றாய் குட்டிமா...?’ கலங்கிய வசந்தின் நினைவுகளை திசை மாற்ற, தோளில் சாய்ந்து அவனை

ஓவியர் கௌதம்



அணைத்தது இரு கைகள்...!

கண்களைத் துடைத்துக் கொண்டு திரும்பிய வசந்த், அதிர்ச்சியுடன்....

'வீணாதானே. நீ... நீங்கள்!... ஹவ் டிட் யூ கம் ஹியர்,.? நீங்க... நீங்க இப்ப டாக்டர் தானே...?'

'எஸ் வசந்த்.. வீணாவே தான்... உன் தோழி.... அதே வீணாதான்!. சாரி வசந்த் .... ஆனந்தியின் இழப்புக்கு. எப்படி நான் உனக்கு ஆறுதல் சொல்ல...?'

மௌனமாய்ச் சில நொடிகள் கடக்க...

'வசந்த்...'

'ம்...'

"உன் கிட்ட பேச நிறைய விஷயங்கள் இருக்கு..'

'............'

'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டவர் வரப் போவதில்லை என்பது நிஜம்... அது உனக்குத் தெரியும் வசந்த். ஆனந்தி ஆழ்ந்த சுகமான நித்திரைக்குப் போயாச்சு...'

'....... '

'அவ வாழ்க்கையை அவ வாழ்ந்துட்டா.... நீ உன் வாழ்க்கையைப் பாரு வசந்த்....'

'வீணா.. நீ சொல்றது புரியல.' புருவம் சுருக்கினான்.

வீணா எங்கோ பார்த்தபடி பேசினாள்..

'உன் கூட அவ வாழலையே தவிர, உன்னை நினைக்காத நாளில்லை வசந்த்.. என் கூடத்தான் அவ இருந்தா.. கடைசியாக உன்னை பார்க்கணும்னு ஆசைப்பட்டா.. உன் அன்பான முத்தத்திற்காக அவ ஏங்கினா... அது எனக்கு தெரியும்.... உன்னை விட்டு அவ விலகறதுக்கு முன்... நீ ஒரு ப்ராஜெட்க்காக மூன்று மாதம் அமெரிக்காவிலிருந்த போது ஆனந்திக்கு இங்கு என்ன நடந்ததனு உனக்குத் தெரியாது வசந்த்.... உனக்கு தெரியவும் வேண்டாம் ... '

'சொல்லு வீணா... ஆனந்திக்கு என்ன ஆச்சு..?' மெதுவாய் வீணாவின் தோளை தொட்டான்.

'வசந்த்...வ..சந்த்.. ' விக்கி விக்கி அழ ஆரம்பித்த வீணா, சட்டென வசந்தின் தோள் சாய்ந்தாள்.!

தென்றலின் வருடலில் பன்னீர் புஷ்பங்களின் நறுமணம் எப்படி சிலருக்கு தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் தருகிறதோ.... அதே உணர்வை தன் அன்பாலும் கண்ணீராலும், ஆனந்தியின் பிரிவால் சோர்வுற்ற வசந்தின் உள்ளத்திற்கு உணர்த்த முயற்சித்தாள் வீணா..!

... ... ...



**அத்தியாயம் 4:**

**எழுதியவர் : விஜி சிவா**

அந்த அதிகாலையில் வீணாவுக்கு விழிப்பு ஏற்பட 'வசந்த்...' என சிணுங்கியபடி கரங்கள் அவளருகிலிருந்தவனைக் கட்டிலில் தேடின. கண்ணைக் கசக்கியபடி உற்று நோக்க அவன் பால்கனியில் நின்றபடி தேநீர் அருந்துவது அவளுக்குத் தெளிவாகப் புலப்பட்டது.

ஆனந்தி எப்போதோ வெட்கத்துடன் அவளிடம் சொன்னது ஞாபகம் வந்தது... 'சில்லென்ற அதிகாலையும், சூடான தேநீரும்

வசந்தை மிகவும் உற்சாகப்படுத்தும். ஒரு போர்வை கொண்டு என்னை அணைத்து, தன் மடியில் உட்கார வைத்துக் கொஞ்சுவான்... வசந்த் பயங்கர ரொமான்டிக் தெரியுமா?'

வீணா எதிர்பார்ப்புடன் விரைவாய் எழுந்திருக்கையில் தலை சுத்திற்று. 'மாத்திரை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்...' முணுமுணுத்தபடி அடுக்களையில் தயாராய் இருந்த தேநீரை எடுத்துக்கொண்டு அவனிடம் சென்றாள்!

'குட்மார்னிங் வசந்த்...' அவன் கன்னத்தில் ஒரு முத்தம் தர, பதிலுக்கு ஒரு புன்னகை மட்டுமே அளித்தான் வசந்த்.

வீணாவுக்குச் சற்றே ஏமாற்றம்.! சேர்ந்து வாழ ஆரம்பித்த இந்த இரண்டு மாதங்களில் அவனிடம் எந்த மாற்றமும் தென்படவில்லை...!? ஒரு கிளுகிளுப்பான பார்வையோ, பேச்சோ இல்லை! 'ஆனந்தியின் நினைவிலேயே உலாவுகிறான்..ம்... செத்தும் என்னை வாழ விடமாட்டேன்கிறாள் கிராதகி.!'

'குளிருதுல வசந்த்... ஒரு போர்வை எடுத்துட்டு வரட்டா...? போத்திக்கிட்டு உட்கார்ந்துக்கலாம்; அந்தச் சேர்ல...' ஆர்வமாய் அவனை நோக்க,

'கொஞ்சம் வேலை இருக்கு ஆபிஸ்ல; சீக்கிரம் போகணும்..' என்றபடி குளியலறை நோக்கிச் சென்றான்.

வீணாவுக்குச் சற்றே கோபம் எட்டிப் பார்த்தது! 'எத்தனை நாட்கள்தான் இவன் காதலுக்காக காத்திருப்பது...? இல்லை இல்லை... எத்தனை வருடங்கள்தான் காத்திருப்பது? இவனை முதலில் உயிருக்கு உயிராய் நேசித்தவள் நான்தானே? இடையில் வந்த ஆனந்தி இவனைப் பறித்துக் கொண்டு சென்று விட்டாள்...' கோபத்தில் பற்களை நறநறவென்று கடித்தாள்! 'என் காதல் ஏன் உனக்குப் புரியவே மாட்டேங்கிறது வசந்த்? முனிவரைப் போல எத்தனை வருடங்கள் தவமிருந்தேன் உனக்காக...? அவளை நினைத்து நீ இன்னும் ஏங்குகிறாயா..? அவள் எனக்குத் துரோகம் செய்தவள்..' உடைந்த அந்த தேனீர்க்கோப்பை அவளுடைய பொறாமையின் தீவிரத்தைக் காட்டியது!

... ... ...

நாட்கள் செல்லச் செல்ல... வீணாவின் வேலைப்பளுவும், வசந்தின் புறக்கணிப்பும்... அவளை மீண்டும் மாத்திரைகளை அதிகமாய் நாடச் செய்தன.!

ஒரு நாள் வீணா புன்னகையுடன் கேட்டாள்..

'வசந்த்.. நாம கல்யாணம் பண்ணிக்கலாமா...?' ஆசையுடன் அவன் கழுத்தைச் சுற்றி மாலையாய் தன் கைகளைப் படரவிட்டாள்!

வெறுப்பாய் அவள் கைகளை விலக்கியவன்..

'எதுக்கு....?' என்று கேட்டான். பார்வை அவளையே ஊடுருவியது.

'என்ன வசந்த்.... இப்படிக் கேக்குற? நாம சந்தோஷமா வாழ்றதுக்குத்தான்...'.

புகைப்படத்தில் ஒளிரும் ஆனந்தியின் முகத்தை உற்று நோக்கினான்.... ரோஜாப்பூ மாலையில் அழகாய்ச் சிரித்தபடி இருந்த ஆனந்தியின் கன்னம் வருட, வசந்தின் காதல் கண்ணீராய் வழிந்தது.

'சாரி வசந்த்... ஆனந்தியை முழுசா மறந்துடுனு நான் சொல்லல! கொஞ்சமாவது அவளை மறக்க முயற்சிக்கலாம் இல்லையா..? நம்ம வாழ்க்கையை நாம சந்தோசமா ஆரம்பிக்கலாம் இல்லையா!?' மூச்சு திணறியது வீணாவுக்கு.

சிலையாய் நின்றான் வசந்த்!

'ஆனந்தி எனக்கும் தோழிதான் வசந்த்.. அதை நீ மறந்துடாத..!'

'அப்படியா...' அவனின் பார்வை இறுகியது.

'என்னாச்சு வசந்த் உனக்கு ...? நீ என் காதலைப் புரிஞ்சுக்கவே மாட்டியா...?' சோர்வாய்க் கெஞ்சினாள்!

'காதல்...ம்...காதல்....' உரக்கச் சிரித்தான் வசந்த்..!

வீணாவுக்கு வார்த்தைகள் தடுமாறின! 'ஆ.....ஆன..ந்தி மீதான உன் காதலை நான் மதிக்கிறேன் வசந்த் ...! ஆனா, நீ..நான்..'

மிகச் சத்தமாய்ச் சிரித்தான் வசந்த்...! ஆனந்தியின் புகைப்படத்தின் அருகிலிருந்த அஸ்தி குவளையை பவ்யமாய்க் கையில் ஏந்தினான். 'வீணா நம்ம காதலை மதிக்கிறா ளாம் ஆனந்தி.. கேட்குதா குட்டிமா..?'

என்றபடி அடிபட்ட புலியாய் திரும்பியவன் வீணாவை உக்கிரமாய்ப் பார்த்தான்..!

'உண்மையான காதல்னா என்ன தெரியுமா...? நாம காதலிச்சவங்க சந்தோசமா இருக்குறதைப் பார்த்து சந்தோசப்படுவது; எந்த சூழ்நிலையிலும்!.' ஏகத்தாளமாய்ப் புன்னகைத்தான். 'காதலைப் பற்றி பேசுற நீயெல்லாம்...ச்சீ..!'

வீணா நடுங்கினாள்... தலை சுத்திற்று!

'வசந்த்... நீயா இப்படி பேசுற..? உன் மேலிருக்குற என் காதலைப் பற்றி உனக்கு என்ன தெரியும்...?!' உறுமினாள்.

'என் கூட படுக்குறதுக்காக, நீ எது வேணும்னாலும் செய்வேன்னு இப்ப.... இப்பத் தெரியும்...!' சுவற்றில் ஓங்கி குத்தினான்.

வீணா அதிர்ந்தாள்.

'அசிங்கமா பேசாத வசந்த்..' என்றாள். மூச்சிறைத்தது. 'என் காதலை கொச்சைப் படுத்தாதே. உடம்பெல்லாம் எரியுது..'

'உடம்பு எரியுதா.... எப்படி..?ஆனந்திக்கு நீ போதை ஊசி போடும் போதெல்லாம் அவள் உள்ளம் எரிந்திருக்குமே...? அப்படியா...?!'

வீணா அதிர்ச்சியுற்றாள்..

'அய்யோ... இவனுக்கு எப்படி தெரிந்தது..?'

'அவளை போதைக்கு பழக்கப்படுத்தி, அவளின் முன்னேற்றத்திற்கு பாடுபடுவதாய் அவளை நம்ப வைத்து, என்னிடமிருந்து அவளைப் பிரிக்க நீ தீட்டிய திட்டங்கள்... ச்சீ நீயெல்லாம் ஒரு டாக்டர்...!' அவளை அறைய முற்பட்டு .. 'உன்னைத் தொடுவதே பாவம்' என்றான்.

'ஆனந்திதான் போதை ஊசி போடச் சொல்லி என்னைக் கெஞ்சினாள் வசந்த்...'

'எனக்கு எல்லாம் தெரியும் வீணா... நீ எந்த விளக்கமும் சொல்ல வேண்டாம். உனக்கு ஒண்ணு தெரியுமா...? நான்தான் ஆனந்தியை துரத்தித் துரத்திக் காதலிச்சேன்.. அவள் எவ்வளவு நல்லவள்னு உனக்குத் தெரியாது..'

'வசந்த் ... நான் எப்பவுமே ....'

இடைமறித்து நிதானமாக கேட்டான்,

'ஆனந்தியை ஏன் கொன்ன..?'



'வசந்த்...' பதறினாள், 'இப்படியெல்லாம் சந்தேகப்பட்டு என்னக் கொல்லாத..!'

வீணாவின் கண்களை ஊடுருவியபடி நிதானமாக.. இன்னும் அழுத்தமாகக் கேட்டான்... 'தாலியம்னா என்ன ...?'

அதிர்ச்சியில் நாக்கு வறள உறைந்து நின்றாள் வீணா...!?

'..ம்... புரியல வசந்த்! எனக்கு உடம்புக்கு வேற முடியல...' சமாளிக்க முயற்சித்தாள்!

'உன்னுடைய ரகசிய அலமாரியில் மருத்துவப் புத்தகங்களுடன் தாலியம் சம்பந்த மான புத்தகங்களும் நிறைய இருக்கே..! படிச்சதில்லையா நீ..? அடடா...' நக்கலாய்ச் சிரித்தான்.

'நான்....ஒரு புக் லவ்வர் வசந்த்; நிறைய புத்தகங்கள் வாங்குவேன். படிக்க நேரம் கிடைப்பதில்லை..!'

'ஓ... அப்படியா.. அதுசரி, ஆனந்தியை போதை மருந்துக்கு கொஞ்சம் கொஞ்சமா அடிமையாக்கி, அவளுடைய வலிய, ஏக்கத்த, கதறல எல்லாத்தையும் ரசிச்சி ரசிச்சி... இதுக்கே உனக்கு நேரம் இருந்திருக்காதுல.....' எகத்தாளமாய்த் தலையாட்டினான்.

'என்னை பிரிந்து அவள்படும் வேதனையை அணு அணுவா நீ ரசித்திருக்க.... தோழிக்கே தாலியம் விஷமேற்றிக் கொன்ற சாடிஸ்ட் நீ..! போதை மருந்து பிளஸ் தாலியம்..... செம காம்பினேஷன்! சந்தேகம் தராத மரணம்'. கை



தட்டினான். ''அதிக போதை மருந்தால், மன அழுதத்தால் மரணம்' போஸ்ட் மார்ட்டம் ரிப்போட் ரெடி பண்ணிய டாக்டர் அல்லவா நீ.... சீ..! கொலைகார டாக்டர் ...!'

'வசந்த்....' அழுதபடி அவனருகில் வர முயற்சித்தாள்.

அவன் விலகி நின்றான்.!

'ஆக்சுவலி.... நான்தான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும்... ஏன்னா மொதமொத நீ ஆனந்தி போட்டோ மேல கோபமாய்த் துப்பி, போட்டாவை தொடச்சல..!?. அன்னைக்குத் தான் எனக்கு முதல் சந்தேகம் வந்துச்சு. அப்புறம் உன் புத்தகங்கள்.! இறுதியில்.... ஆனந்தியின் அஸ்தியை லேப்ல பரிசோதிச்சேன்... அதில் தான் தெரிஞ்சது.. தாலியத்தின் அதிக அளவு.... நீ கொலைகாரி என்பதை உறுதிப்படுத்துச்சு.'

'வசந்...த்....' தலையிலடித்து அழுதாள்! வசந்த் தொடர்ந்தான்.

'ஆனா வீணா.... நான் போலீசுக்குப் போகல... ஏன் தெரியுமா ? நீ ஜெயில்ல போய் தண்டன அனுபவிக்கக் கூடாது! அவள் பட்ட வேதனை, அவள் பட்ட கஷ்டம், உடலாலும் உள்ளத்தாலும் அவள் என்னைப் பிரிந்து வாழ்ந்து அனுபவித்த கொடுமையை.... நீயும் அனுபவிக்கணும்!

'என்ன சொல்ற வசந்த்...?? என்னை என்ன பண்ணப்போற...?'

'நீ ஒரு மோசமான டாக்டரா யோசிச்சு திட்டம் தீட்டுன! என் காதல் எனக்கொரு திட்டம் கொடுத்துச்சு!' சிரித்தான்.... கை தட்டி சிரித்தான்.! 'எலிகளே இல்லாத இந்த வீட்ல, இப்ப இத்தனை எலிகள் எப்படி வந்துச்சுனு என்னைக்காவது யோசிச்சயா...? எலிகள் வந்துச்சு... எலிப்பொறி வந்துச்சு... எலி மருந்தும் வந்துச்சு...!!' அவன் சிரிப்பு அடங்க வெகு நேரமானது.

'வசந்த்.... என் காதல நீ புரிஞ்சுக்கவேயில்ல.... தல சுத்துது! மூச்சு திணறுது! என்ன

பண்ணுன...??' அவளின் கைகள் நடுங்கின.

'ஒரு மாசமா பண்ணிக்கிட்டு இருக்கேன் டாக்டர்! உனக்குத்தான் தெரியுமே.... எலி மருந்துல தாலியம் இருக்குனு!' விகாரமாய்க் கண்ணடித்தான்.! 'உன் உடம்புல தாலியத்தோட அளவு அதிகமாகுது போல ... நீ இப்ப சாகமாட்ட, கவலைப்படாத! இன்னும் கொஞ்ச நாள் ஆகும். ஆனந்தி மாதிரி உனக்கும் லங்ஸ், கிட்னி அட்டாக் ஆகும்... முடி உதிரும், லிவர் டேமேஜ் ஆகும்.! கொஞ்சம் கொஞ்சமா சாவு வரும்! நீ டாக்டர் தானே... பொழச்சுக்க ட்ரை பண்ணு. ஆனா பாவம் நீ, இந்நேரம் நிறைய ஆர்கன்ஸ் டேமேஜ் ஆகியிருக்கும்ல...!?!

தரையில் விழுந்து முகம் பொத்தி அழுதாள் வீணா...

ஆனந்தியின் புகைப்படத்தையும், அஸ்தியையும் காதலுடன் கைகளில் ஏந்தி நெஞ்சோடு அணைத்தான்! 'வா ஆனந்தி.. நாம போகலாம் என்றபடி வாசல் நோக்கி சென்றவனின் காலைப் பற்றினாள் வீணா.... 'என்னை விட்டுட்டு போயிடாத வசந்த்.... காதலுக் காகத்தான் இதெல்லாம் செஞ்சேன்! என்னை மன்னிச்சுடு... நீ இல்லைனா நான் செத்துப் போயிடுவேன்....' குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

'மூச்சு திணறுது வசந்த்...'

வசந்த் மெதுவாய்ச் சொன்னான் 'ஆனந்திக்கும் இப்படித்தான் இருந்திருக்கும்... உன்னால எங்க காதலை என்றைக்கும் கொல்ல முடியாது....' நிதானமாய்த் திரும்பி நடந்தான்.!

வீணா மயங்கி விழுந்தாள்! ”வச... ந்...; ஆன...தி...' என உளறினாள்! கதவு சாத்தப்பட்டது!?

கார் உயிர்பெற, ஆனந்தி புன்னகைக்க.. வசந்த் அஸ்தி குவளையைப் பார்த்து கண்ணடித்தபடி கேட்டான்.

”ஓடிப் போகலாமா...?'

முற்றும்



## கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி!!

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி
கோலமயில் நிகர்ப்பெண்டுகளே!
தட்டுங்கடி கை தட்டுங்கடி
தக்கத் தக திமி தாளமிட்டு!
(கொட்டுங்கடி கும்மி.....)

செல்வச் செழிப்புடன் இந்த மண்ணில்
சிறப்புடன் வாழ்ந்தது எங்கள் இனம்!
சொந்தமும் பந்தமும் சூழ்ந்திருக்க
சொர்க்கங்கள் ஆனது எங்கள் இல்லம்!!
(கொட்டுங்கடி கும்மி.....)

திங்களும் தென்றலும் வீசுகையில்
செங்களம் ஆடியது எங்களினம்
வந்தனம் தந்திங்கு வாழ்த்திடுவோம்
வாசலில் வந்துடும் வசந்தமுமே!
(கொட்டுங்கடி கும்மி.....)

செந்தமிழ் காத்திடும் இந்தமண்ணில்
செந்தமிழ் ஈழமும் மலர்ந்திடுமே!
களத்தினில் வாகையும் சூடிடுவோம்
கண்களில் ஈரமும் காய்ந்திடுமே!!
(கொட்டுங்கடி கும்மி.....)



சிறீ சிறீஸ்கந்தராஜா
யாழ்ப்பாணம்

# சிந்தனை செய் மனமே - 1

## லீலா லோகநாதன்

தினமும் இயந்திர வாழ்க்கையில் சிக்கித் தவிக்கும் மனிதவாழ்வு.

இலக்கை நோக்கி, இலக்கில்லாப்பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொரு மனிதனும், வாழ்வின் வெற்றிப்பாதையைக் காண தனது வழியில், தனது இயல்பில் முயற்சித்துக் கொண்டிருக்கும் அதிவேகமான வாழ்வியல் சூழலில்...

இதயம் ஒரு கண்ணாடி, சின்ன சின்ன வலிகளும், சங்கடங்களும் மனதை சில்லு சில்லாய் உடைத்து விடும்.

நாம் சிறு விசயம் என நினைப்பது, மற்றவர் களுக்கு பெரிய விசயமாகத் தோன்றலாம். அது அவரவர் சூழல் பொறுத்து, மனநிலை பொறுத்து.

நான் ஒருநாள் பேருந்தில் பயணம் செய்தேன். ஒன்றரை மணிநேரப்பயணம் அது. அந்த பேருந்தில், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளும், பெரியவர்களும் பெண்களும் என பேருந்து முழுக்க அடைத்துக்கொண்டு வந்தது.

அதில் பயணம் செய்யும் ஒவ்வொரு வருக்கும் ஒரு மனநிலையாக இருக்கலாம்.

சிலர் திருமணத்திற்கு சென்று திரும்புபவர் களாகவும், சிலர் மணவாழ்வை முறித்து திரும்புபவர்களாகவும் இருக்கலாம்.

சிலர் மருத்துவமனையில் இருக்கும் யாரோ ஒருவரை பதட்டத்துடன் காணச் செல்பவராக இருக்கலாம். மற்றும் சிலர் நெருங்கிய ஓர் உறவின் இறப்பு நிகழ்விற்கு சென்று திரும்பிக் கொண்டிருப்பவராக இருக்கலாம். அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளாத்துயரில் மூழ்கி இருக்கலாம்.

பேருந்தில் இப்படியான பல சூழல்களில் பயணம் செய்பவர்களை...

கல்லூரி மாணவிகள் (அ) மாணவர்கள், சத்தமாக தங்கள் அலைபேசியில் பாடல்களை அலறவிட்டு, மற்றும் காணொளி காட்சிகள் என கேட்டும், பார்த்தும் ரசித்துக்கொண்டும் வருவது... அதில் பயணம் செய்து வரும் இப்படியான மனநிலை கொண்டவர்களுக்கு, மன உளைச்சலையும், சங்கடத்தையும் தரும் என்பதை ஏன் உணரமாட்டேன் என்கிறீர்கள்?...

அது மட்டுமா... சத்தமாக ஒருவருடன் ஒருவர் சிரித்து பேசி பேருந்தில் இருப்பவர்கள் அனைவரும் முகம் சுழிக்குமாறு நடந்து கொள்வது எவ்வகை நாகரீகம்?...

மாணவர்கள் மட்டுமல்ல...

சிலபெரியவர்களுமே அலைபேசியில் சத்த மாகப்பேசி, கூச்சலிடுவதும், கோபப் படுவதுமாக தன் வீராவேசத்தை காட்டி, சொம்பில்லாத நாட்டாமையாக ஒரு பஞ்சாயத்தையே அலை பேசியில் பேசி முடித்து விட்டாரென்றால் ஒரு மணிநேர பயணத்தில்?.. பாருங்க...

அதுமட்டுமா... ஒரு கல்லூரி மாணவி ஒரு மணிநேர பேருந்து பயணம் முழுவதும் அலைபேசியில் பேசியவாறே வந்தார். என் பக்கத்து இருக்கை தான் காதில் இயர்போன் மாட்டியபடி பேசினார். அந்த பெண்ணின் உதடு அசைந்தது என்ன பேசுகிறாள் அவள்

என ஒரு வார்த்தை கூட தவறியும் என் காதில் விழவில்லை...

இது எந்த வகையில் சேர்த்தி?...

ஒரு பெண்ணும் ஆணும் சிரித்து பேசுவதும் கொஞ்சுவதும், ஒருவரை ஒருவர் செல்லமாக அடித்துக்கொள்வதும் பேருந்தில் அனைவர் பார்வையிலும் படாமல் போகவில்லை.

நட்பாக இருக்கட்டும், உறவாக இருக்கட்டும் எதுவானாலும் இது பொதுவெளி... மற்றவர் பார்வை நம்மீது என்ற எண்ணம் ஏன் ஏற்படவில்லை இவர்களுக்கு...

இதை நான் தவறாக கூறவில்லை... அவர்களுக்குள் உண்மையான நட்பாகவும் இருக்கலாம். ஆனால் மற்றவர்களின் பார்வை வேறு, கோணம் வேறு என்கிறேன்.

ஒரு பயணம் மனமகிழ்வைத்தரா விட்டாலும்... சங்கடம் தருவதாகவும் மன உளைச்சலைத் தருவதாகவும் இருந்துவிடக் கூடாதென்கிறேன்.

அலைபேசி பயன்படுத்துங்கள் தவறில்லை. உங்களுக்கு மட்டும் கேட்கும்படியும், மற்றவர்களின் மன அமைதி குலையா வண்ணம் பயன்படுத்துங்கள் என்கிறேன்.

ஒவ்வொருவரின் பெற்றோரும் எத்தனை சூழல்களுக்கு இடையில் பள்ளி, கல்லூரி கட்டணம் கட்டி (கொட்டி) தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்கிறார்கள். அவர்கள் கண்களில் இது போன்ற செயல்கள் பட்டால்... எவ்வாறு வருந்துவார்கள் என நினையுங்கள்.

இளமைப்பருவம் பயமறியாது தான். ஆனால் மனமறியப்பழகுங்கள் என்கிறேன்.

வெற்றிபெற முயற்சி தேவை.

தோற்காமலிருக்க சிந்தனை தேவை.

சீரற்ற சிந்தனை வேரற்ற மரங்களாகும்.

## தன்முனைக் கவிதைகள்

☼

எங்கும் நிறைந்திருக்கும்
உயிர்மையின் சுழற்சி
ஆறறிவு விலங்கிடம் மட்டும்
சாதியமும்... மதமும்...

☼

சிலையின் நிர்வாணம் மறைத்த
காட்டுக்கொடி வாடி வதங்கியது
மணிப்பூர் சகோதரிகளின்
கதறல் ஒலி கேட்டு...

☼

கறுப்புக் கொடியேந்தி
கண்டனக் கூட்டங்கள்
ஆங்காங்கே தலைநீட்டும்
விளம்பர வெளிச்சங்கள்

☼

விருப்பும், வெறுப்புமற்று
எதனோடும் பொருந்தாது
மௌனத்திடம் மௌனமாய்க் கதைக்கிறது
அந்த ஒற்றைச் சருகு

☼

தெற்கும், வடக்குமாய்
பலத்தக் காற்று வீச
மூங்கில் வனத்தில்
நிரந்தரமான சலசலப்பு

அன்புச்செல்வி சுப்புராஜு






**மதிப்புரை தமிழ்நெஞ்சம் அமின்**

# கிராமப் பேருந்தில் புளியம்பூக்கள்

இந்தியாவின் சென்னையில் வசிக்கும் கவிஞர் ஸ்ரீவி முத்துவேல் அவர்களுடைய கிராமப் பேருந்தில் புளியம்பூக்கள் என்கிற ஹைக்கூ கவிதை நூலுக்கு மதிப்புரை எழுதுவதில் தமிழ்நெஞ்சம் மகிழ்வடைகிறது.

100 ஹைக்கூ கவிதைகள் உள்ளடங்கிய 64 பக்கங்களுடன் அழகாக அகனி வெளியீடாக வெளிவந்துள்ளது. ஹைக்கூக்கள் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பினை கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி செய்திருக்கிறார்.

நூலில் சிறப்பான பல கவிதைகளைக் காணமுடிகிறது.

கருவேல முள்ளின் வளர்ச்சியில் தொடங்கி நாவற் பழங்களில் முடித்துள்ளார். இயற்கையையும் சிற்றுயிர்களையும் முன்னிருத்தி ஹைக்கூக்களை சிறப்பாகப் படைத்துள்ளார்.

**மருத்துவமனை வளாகம்**
**கவலையைச் சிறிது குறைத்தது**
**இணைப்புறாக்கள் விளையாட்டு.**

மருத்துவமனை என்றாலே, மனக்குழப்பம் அதிகம். நோயாளிகளுக்கோ பார்வையாளருக்கோ பல கேள்விகளும், துயர்களும் ஏற்படுவது வழக்கம். அத்தகைய தன்மையை மீறி இணைப்புறாக்களின் விளையாட்டு மனதுக்கு மகிழ்வைத் தருகிறது என்று புறாக்களின் விளையாட்டினை நமக்கு கண்முன் காட்சிபடுத்தியிருக்கிறார்.

**ஹைக்கூ கவிஞருடன்**
**அலைபேசியில் பேசுகையில்**
**கேட்கும் குயில் சத்தம்**

இருவரின் அலைபேசி உரையாடலில் எதிர் முனையில் இருந்து கேட்கும் குயிலினிசையை சிற்றுயிரின் பண்பாகப் படைத்துள்ளார்.

நான் அலைபேசியில் பேசிடும்போது என் முனையிலிருந்து குயில்களின் ஓசையை ரசித்தவர்களுண்டு. எனது இல்லதைச் சுற்றிலும் பூச்செடிகளும், மரங்களும் நிறைந்துள்ளதால் பறவைகளின் சரணாலயமாக நான் வசிக்கும் பகுதி அமைந்துள்ளது.

**நன்றி மீண்டும் வருக..**
**வாசகம் படிக்கையில்**
**கிளையசைக்கும் மரம்**

இந்த வாசகம் படிக்கையில் மரக்கிளைகளும் மனித வருகைக்குத் தம்மை அசைத்து மகிழ்வைத் தெரிவிப்பதாக காட்சிப் படுத்துகிறார்.

**புகைபிடிக்கும் மரம்வெட்டி**
**கோடாரியை மரத்தில் அறைந்ததும்**
**விழும் கனி**

கோடரியால் வெட்டும் மரஅதிர்வில் நன்கு கனிந்திருந்த கனிகள் உதிர்ந்துவிழுவது நமக்கு புலனாகிறது.

இவ்வாறு இவரது கவிதைகள் சிறந்த உத்திகளோடு தொடர்கின்றன. ஹைக்கூவில் வேண்டப்படாத விடயங்கள் விலக்கப்பட்டு புரிதலோடு இயற்கையின் சிறப்புகளையும், சிற்றுயிர்களின் நேசத்தையும் சிந்திக்கும் வகையில் படைத்துள்ளார்.

**கிடைக்கும் வாய்ப்பு**
**சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும்**
**படரும் கொடி**

இக்கவிதை இன்றைய சமூகத்திற்கு ஓர் இடித்துரைப்பாகக் கூட இருக்கலாம். கொடி படர்வதே பண்பாகக் கொண்டது. படர்வதற்கான இடம் சரியாகக் கிடைக்கும் போது தடையின்றிப் படர்கிறது. மனிதன் சந்தர்ப்பங்களைச் சாதகமாக்க வேண்டும் என்பது இங்கு தொக்கி நிற்கிறது.

**பூட்டிய வீடு**
**திறந்து பார்த்தால்**
**மூலையில் சிறுகுச்சிகள்**

மனிதர்கள் வசிக்காத பூட்டிய வீட்டுக்குள் பறவைகள் நுழைந்து குச்சிகளை கொண்டு சேர்த்துள்ளன புதுக்கூடு கட்டுவதற்கு...

**நகரத்தில் நுழையும்**
**கிராமப் பேருந்தின் மேற்கூரையில்**
**புளியம்பூக்கள்**

பொதுவாகவே கிராமப்புறங்களில் பாதை யெங்கும் மரங்கள் மூடியும், மூடாமலும் செழித்து வளர்ந்திருக்கும்.

இந்த இடங்களில் பேருந்து போனால் பேருந்தின் மேலே பூக்கள் உராய்வினால் கொட்டும். அவ்வாறே, இக்கவிதையில் புளியம் பூக்கள் சிறியனவாக இருப்பதால் உதிர்ந்து கிடக்கின்றன. இங்கே இயற்கையின் செயலை ரசிக்கும் உள்ளத்தோடு பார்க்கிறார் கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்.

எனது சிறிய வயதில் உறவினர்கள் வீட்டுக்கு நீண்டதூரம் கால்நடையாகப் பயணிப்பதுண்டு. அப்பொழுதெல்லாம் வாகன வசதி கிடையாது. பயணப்பாதைகளின் இருமருங்கிலும் புளிய மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கும். இதமான காற்றும் அதனால் மரமசைந்து அதிலிருந்து பூக்கள் உதிர்ந்து வரவேற்கும்.

நடந்து களைத்து வீடடைந்ததும் மழையில் நனைந்து வந்திருப்பதுபோல் துணியால் துவட்டி தலையில் நிறைந்துள்ள புளியம் பூக்களை அகற்றுவார்கள் உறவுகள்.

இக்கவிதையை படித்ததும் இந்தப் பழைய நிகழ்வே காட்சியாக என் கண்முன்னேப் படர்ந்தது.

**கூவியது போதும்**
**கற்றுக்கொள்ளேன் குயிலே**
**கூடு கட்டும் காக்கையிடம்**

காதுக்கு இனிமையாக குயிலுக்கு கூடு கட்டத் தெரியாது. அவைகள் காக்கையில் கூட்டிலேயே அடங்கி முட்டையிடும் எனும் காட்சி விரிந்தாலும் எனது நண்பரின் வீட்டில் நடந்த நிகழ்ச்சியொன்றூ கண்முன் நிழலாடுகிறது.

எனது நண்பர் நல்ல பேச்சாளர். அவருடைய பேச்சைக் கேட்டவர்கள் ஆஹா, ஓஹோவெனப் பாராட்டுவார்கள். வீட்டிலோ வறுமை. ஓர்நாள் பேச்சாளரின் மனைவி என்னிடம், அவருக்கு உழைக்கக் கற்றுக்கொடுங்கள். கூட்டங்களில் பேசிவிட்டு அதனால் கிடைக்கும் சிறுதொகைகள் குடும்பத்தை நடத்திட போதுமானதாக இல்லை. அரைவயிற்றை நிறைக்கவே முடியவில்லையெனச் சொல்லி முறையிட்டழுதாள்...

கவிஞரிடமிருந்துநிறையஎதிர்பார்க்கிறேன்.

அழகிய, சிறப்பான இந்நூலினைப் பெற தொடர்பு கொள்ளவும் +91 98426 37637

# துருப்புச்சீட்டு

பறப்பதைக் கண்டு பேராசை கொள்ளாமல் இருப்பதை வைத்து மகிழ்வுடன் வாழுங்கள்.

## புல்லாங்குழலன்

கிழக்குக் கடற்கரைச் சாலையிலுள்ள ஒரு காவல் நிலையத்திற்கு காலை நேரத்தில் ஒரு போன் கால் வந்தது. போனை எடுத்த போலீஸ் ஒருவர் அதைக் காதுக்குக் கொடுக்கவும் அதில் பதட்டத்துடன் ஒரு குரல் கேட்டது. ஐயா, நான் காலையில் எனது வயலைப் பார்க்கப் போய்க் கொண்டிருந்தேன். அப்போது சாலையின் ஓரத்தில் ஒரு பெரிய சூட்கேஸ் கிடப்பதைப் பார்த்தேன். ஆர்வமாய் அதைத் திறந்து பார்த்த போது அதில் பிணம் சார். பதறினார் அவர்.

ஆமாம் யார் நீங்கள்?

ஐயா, கானாத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவன்.

இப்போது அங்கே தானே இருக்கிறீர்கள். அங்கேயே இருங்கள் நாங்கள் வருகிறோம் என்று போனை வைத்த காவலர் சப் இன்ஸ்பெக்டருக்கு போன் செய்து இதைத் தெரிவித்தார்.

ஜீப்பை ரெடியாக டிரைவருடன் ஏற்பாடு பண்ணுங்கள். நான் உடனே அங்கே வருகிறேன் என்றார். ராஜாராம் என்கிற சப் இன்ஸ்பெக்டரும்.

சற்று நேரத்தில் அங்கே வந்த அவர் ஜீப்பில் காவலருடன் ஈசிஆர் சாலையில் பயணித்தார்.

சங்கரன் பிணத்தைப் பற்றி விசாரித்தீர்களா?

ஆமாம் சார் அது ஆண் பிணமாம். மற்றவை இனி தான் விசாரிக்கணும்.

5 கிலோ மீட்டர் தூரம் ஜீப் சென்றதும். தூரத்தில் ஒரு முதியவர் பரபரப்பாக சாலையையே பார்த்துக் கொண்டு நிற்பதும் அவரருகில் சூட்கேஸ் ஒன்றிருப்பதும் கண்ணுக்குக் கிடைத்தது.

ஜீப்பைப் பார்த்ததும் அவர் அதனருகே ஓடி வந்தார்.

வந்தவரிடம் ராஜாராம் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

எப்போது பார்த்திர்கள்? எங்கே கிடந்தது சூட்கேஸ்?

6 மணி இருக்கும் சார். சூட்கேஸ் பெரிதாய் இருப்பதால் அதில் ஏதாவது விலை உயர்ந்த பொருள் இருக்குமோ என்ற ஆவலில் தான் அதைத் திறந்தேன்.

சூட்கேஸ் மூடாமல் இருந்ததா?

இல்லை சார். சிறிய பூட்டால் பூட்டப் பட்டிருந்தது. அதைக் கருங்கல்லால் தட்டி உடைத்தேன்.

ராஜாராம் சூட்கேசின் உள்ளே பார்த்தார். அந்தப் பெரியவர் சொன்னது போல் அது ஆண் பிணம் தான். இந்த ஆளுக்கு என்ன வயதிருக்கும்

சார் 25 அல்லது 26 வயதிருக்கலாம் சார் என்றார் அனுபவ சங்கரன்.

சரி. சங்கரன் தடய ஆட்களை வரச் சொல்லுங்கள். மோப்ப நாய்க்கும் ஏற்பாடுகள் செய்யுங்கள்.

சங்கரன் அவர் சொன்னவற்றிற்கு ஏற்பாடு செய்ய போன் செய்தார். இன்னும் அரைமணி நேரத்தில் அங்கிருப்போம் என்றனர் அவர்கள்.

சங்கரன் காணாமல் போனவர்கள் பற்றி ஏதாவது கடிதங்கள் நம் மேலிடத்தில் அல்லது காவல் நிலையங்களில் இருந்து வந்திருக்கிறதா?

2 நாட்களுக்கு முன்பு ஒரு கடிதம் வந்திருந்தது. அதில் வண்டலூர் அருகிலுள்ள ஒரு கிராமத்தில் ஒருவர் காணாமல் போயிருக்கிறார். அவர் கொலை செய்யப் பட்டிருப்பாரோ என்ற சந்தேகத்தில் அவருடைய விவரங்கள் அதில் இருந்தது. அந்த நபருக்கு 26 வயதாம்.

பிணம் நம் எல்லையில் கிடைத்திருப்பதால் நாமே அதை விசாரிப்போம். நாம் இப்போது அந்தக் கிராமத்திற்குச் செல்கிறோம். போகும் வழியில் டிபன் சாப்பிட்டுக் கொள்ளலாம்

முன்பே வருவதைச் சொல்லியிருந்ததால் அந்தக் காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டரும் இரு காவலர்கள் அங்கே ரெடியாக இருந்தனர்.

விவரங்களைப் பெற்றுக் கொண்ட ராஜாராம் அதில் ஒரு காவலரை மட்டும் அழைத்துக் கொண்டு சங்கரனோடு ஜீப்பில் புறப்பட்டார்.

அங்கே அவர்கள் செல்லப்போகிற வீட்டை அடையாளம் காட்டினார் காவலர்.

காவல் ஜீப் வருவதைக் கண்டதும் அந்த வீட்டிலிருந்து 50 வயது முதியவர் ஒருவர் அவர்களிடம் வந்தார்.

வீட்டின் முன்னறையில் உட்கார்ந்ததும் ராஜாராம் அவர்களிடம் சில வினாக்களைக் கேட்கத் தொடங்கினார்.

நீங்கள் காணாமல் போனவருடைய தந்தையா?

ஆம். ரமேஷின் தந்தை நான்.

அவருக்குத் திருமணம் ஆகி விட்டதா?

ஆம். அதோ அந்தப் பெண் தான் என் மருமகள்.

அழுத கண்ணோடு மிகக் களைப்பாகக் காணப்பட்டாள் அவள்.

என்னம்மா? எப்போது ரமேஷ் இங்கிருந்து வெளியே போனார்.?

இரண்டு நாட்கள் முன் மாலை 5 மணி இருக்கும். போகும்போது அவசர அலுவலாகப் போகிறேன். 2 மணி நேரத்தில் வந்து விடுவேன் என்றார். இந்தக் குழந்தையின் கன்னத்தில் முத்தமிட்டு வேறு சென்றார்.

எப்போதும் அப்படி முத்தமிட்டுவிட்டுத் தான் செல்வாரா?

அப்படியில்லை. எனக்கும் அது அப்போது தோன்றவில்லை.

ஏன் சார் ரமேஷ் பற்றி ஏதும் தகவல் கிடைத்ததா என வேகமாகக் கேட்டார் மணவாளன்.

ஒரு பிணம் கிடைத்திருக்கிறது.

ஐயய்யோ என ஒரே சமயத்தில் ரமேஷின் தந்தையும், அவன் மனைவியும் கத்தினர். அவர்களின் கண்ணில் கண்ணீர் தடையில்லாமல் பெருகியது.

நீங்கள் அதைப் பார்த்து அடையாளம் சொல்ல வேண்டும்.

நான் வருகிறேன் சார். அவள் வேண்டாம். பயந்திருக்கிறாள் என முன் வந்தார் மணவாளன்

அவரையும் ஏற்றிக் கொண்டு ஜீப் ஈசிஆர் சாலையில் சென்றது.



## மழலையின் முத்தம்

குறும்பாய்க் கடித்த அரும்பு,
கன்னத்தில் சிந்திச் சென்றது,
தேன் துளிகளை!!

## இறகு

வாசல் வந்த ஈசல்,
மறந்து பறந்தது,
இறகை

## அந்தி வானம்

செந்தணலில் இட்ட நாணயம்
மெல்ல மூழ்குது
நீல ஓடையில்

– ரா. சவிதா ராஜேஷ்

சூட்கேசில் இருக்கும் பிணத்தைக் கண்டதும் அலறி அழுதார் மணவாளன். கொடுமைக்காரி அவள் கேட்டபடி நான் பணம் அனுப்பியும் கொன்று விட்டாளே பாவி எனக் கதறினார்.

என்ன சொல்கிறீர்கள்? விவரமாகச் சொல் லுங்கள்

2 மணி நேரத்தில் வருகிறேன் என்று சொன்ன ரமேஷ் வராததால் 8 மணி வாக்கில் நான் மருமகளை அவனுக்குப் போன் செய்யச் சொன்னேன். அவளும் செய்தாள். அப்போது அவன் இன்னும் சற்று நேரத்தில் வருகிறேன் என்றானாம்.

மீண்டும் ஒரு மணி நேரம் கழித்து போன் செய்யச் சொன்னேன். இப்போது பதற்றத்துடன் பேசிய அவன். இங்கே போலீஸ் என்னைப் பிடித்து வைத்துக் கொண்டார்கள். நான் எப்படியும் வந்து விடுகிறேன் என்றானாம்,

மீண்டும் வராததால் நானே போன் எடுத்துப் பேசினேன். அவன் போன் ஸ்விட்ச் ஆப் ஆகியிருந்தது. மனம் அமைதி இழந்தது

திடீரென அவன் போன் வந்ததும் நான் அதனை எடுத்தேன். அப்போது ஒரு பெண் பேசினாள். நாங்கள் உங்கள் மகனைப் பிடித்து வைத்துள்ளோம். 10 லட்ச ரூபாய் உடனடியாகக் கொடுக்க வேண்டும் இல்லையெனில் உங்கள் மகனைக் கொன்று விடுவோம்

அம்மா அவ்வளவு பணம் எங்களிடம் இல்லையம்மா? என்றேன்

அதெல்லாம் தெரியாது இருபது நிமிடத்தில் பணம் எனக்கு வந்தாகணும். எனச் சொல்லி விட்டு போன் காலை துண்டித்தாள்

என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்று கொண்டிருந்தேன். மீண்டும் போன் வந்தது. அம்மா நீ நினைப்பதைப் போல் நாங்கள் பணக்காரர்கள் இல்லை. என்னிடம் அதிகப் பட்சமாக 3 லட்சம் தான்

இருக்கிறது. அதுவும்கூட எப்.டியில் தான் இருக்கிறது என்றேன். மறுபடியும் போனை வைத்துவிட்டாள்.

என்ன செய்யலாம் என திகைத்து நின்ற போது அவளே மீண்டும் அழைத்தாள். சரி 3 லட்சத்தை உடனடியாக என் அக்கவுண்டுக்கு டிரான்ஸ்பர் பண்ணுங்கள். இருபது நிமிடம் தான் என்றாள் அந்த அரக்கி.

இதற்கிடையே மீண்டும் அவனுடைய போனில் இருந்து கால் வந்தது. அவள் தான் மிரட்டக் கூப்பிடுகிறாளோ என எடுத்தேன்.

இந்த முறை ரமேஷ் தான். அவன் பயத்தில் அழுது கொண்டே அப்பா எப்படியாவது பணத்தைக் கொடுத்து என்னை மீட்டு விடுங்கள். இல்லையென்றால் என்னைக் கொன்று விடுவார்கள் என்றவுடன் போன் கட் செய்யப்பட்டது.

நான் வேகவேகமாக எனது ஸ்டேட் பாங்க் கிளைக்குச் சென்று மேனேஜரிடம் விவரத்தையெல்லாம் கூறி உடனே எப்.டி பணம் வேண்டும் என்றேன். அவர் அதை என் வங்கிக் கணக்குக்கு மாற்றி அவளுடைய அக்கவுண்டிற்கு அவரே அனுப்பினார்.

நான் அனுப்பியதை அவளுக்குச் சொல்ல போன் போட்டேன். போன் ஸ்விட்ச்டு ஆப் செய்யப்பட்டிருந்தது.. பலமுறை முயன்றேன். பலனில்லை என்றவர் சண்டாளி என் மகனைக் கொன்று விட்டாளே என அழுகையோடு விவரங்கள் சொன்னவர் ஒரே அழுகையாக அழத் தொடங்கினார்.

உங்கள் காவல் நிலையத்தில் சொன்னீர்களா?

காணாமல் போன பிறகு என் கிராம இளைஞர்களிடமும் உறவினர்களிடமும் சொன்னதோடு காவல் நிலைய சப் இன்ஸ்பெக்டரிடமும் மனு கொடுத்தேன்.

சிறிது அழுகையை நிறுத்தியவர் மீண்டும் அழுதார். நான் இதை மருமகளிடம் எப்படிச் சொல்வேன் எனக் கூறி அழுதார்.

தடய இயல் வல்லுநர் குழு ஒன்று வந்ததும் தன் பணிகளைச் செய்யத் துவங்கினர்.

கொடூரமாக சிதைத்திருக்கிறார்களே பாவி கள். என் பையன் சித்திரவதை அனுபவித்து இறந்திருக்கிறானே. என மீண்டும் அழுதார் மணவாளன்.

மோப்ப நாய் வந்ததும் அதனுடன் வந்தி ருந்த காவலர் அதனை சூட்கேசுக்கு அருகில் கொண்டு சென்றார். அதை மோப்பம் பிடித்த அந்த நாயும் ஈசி ஆர் சாலையில் சிறிதுதூரம் ஓடி ஓஎம்ஆர் சாலைக்குச் சென்று பெரும்பாக்கம் வழியில் சென்றது. அங்கிருந்த குட்டை வரைச் சென்ற நாய் அதற்கு மேல் செல்ல இயலாமல் நின்றது.

தடய இயல் வல்லுநர்கள் பணிமுடிந்ததும். பிணத்தையும் சூட்கேசோடு பிரேத பரிசோ தனைக்கு அனுப்பிவிட்டு ராஜாராம் டீம் அங்கிருந்து புறப்பட்டது.

இப்போது எங்கே போகிறோம் சார் என்றார் சங்கரன்.

நாம் மீண்டும் மணவாளன் வீட்டிற்குச் செல்கிறோம். இன்னும் சில கேள்விகள் அவர் மருமகளிடம் கேட்க வேண்டும்.

மணவாளன் அழுத கண்ணீரோடு வரு வதைக் கண்ட ரமேஷின் மனைவி சங்கீதாஅழ முடியாத களைப்பிலும் ஓங்கி அழுதாள். அவள் பெண்ணும் அம்மா அழுவதைப் பார்த்து அழுதாள். அங்கே ஒரே அழுகை சத்தம் தான்.

சிறிது நேரம் காத்திருந்து அவர்களை அழவிட்டு பிறகே சங்கீதாவைக் கூப்பிட்டு ராஜாராம் கேள்விகள் கேட்டார்.

அம்மா உங்கள் துன்பம் அதிகம் தான். என்றாலும் உங்கள் கணவரின் இந்த நிலைமைக்குக் காரணமானவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தி தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டாமா? அதனால் மனம் கஷ்டப்பட்டாலும் நான் கேட்கும் கேள்விகளுக்கு சரியான பதில் கொடுங்கள்.

உங்கள் பதிலில் எனக்கு சில வெளிச்சங்கள் தெரியலாம். இப்போது நாங்கள் திக்கு தெரியாத காட்டில் தான் இருக்கிறோம்.

உங்கள் கணவர் உங்களிடம் சொல்லிச் சென்ற போது எத்தனை மணி இருக்கும்?

மாலை 5 மணி இருக்கும்

அவர் அந்த நேரத்திற்கு ஆபிஸ் போவாரா?

இல்லை. இதுவரை அப்படிப் போனதில்லை.

போகும் முன் அவர் பரபரப்பாய் இருந்தாரா?

இப்போது எனக்கும் அந்த சந்தேகம் வருகிறது சார். அப்போது தோன்றவில்லை. கொஞ்சம்பரபரப்பாகத்தான்காணப்பட்டார். ஏதோ ஆபிஸ் பிரச்சினைகள் போலும் என நினைத்தேன். அது மட்டுமல்லாமல் தன் மகளை முத்தமிட்டுச் சென்றார்.

போகுமுன் ஏதேனும் அழைப்பு வந்ததா அவருக்கு

ஆமாம் சார் அடிக்கடி போன் அடித்தது. அவர் பேசி வைக்கும் போதே மீண்டும் அடித்தது.

எத்தனை தடவை?

5, 6 தடவை இருக்கும். அவர் அவசர அவசரமாகப் புறப்பட்டார்.

அவருடைய போன் ஒன்று தான் இருக்கிறதா

ஒன்று தான். அதை அவர் வைத்திருந்தாரே

சார் தடயவியல் நிபுணர் ஒருவர் அவருடைய பேண்ட்டின் உள் பாக் கெட்டில் இருந்து ஒரு போனை எடுத்தார். அதை நான் பாதுகாப்பாகத் தொடாமல் அவரிடமிருந்து என்னுடைய புதிய கைக்குட்டையில் வைத்திருக்கிறேன். அவருடையதா எனப் பாருங்கள்.

போனைப் பார்த்ததும் இது அவருடையது தான் என்றளறினால் சங்கீதா

போனை எப்படி அவர்கள் விட்டிருப் பார்கள்? சார் என்றார் மற்றொரு காவலர்

அவர்கள் ரமேஷை அடித்த போது போன் எங்கேயாவது விழுந்திருக்கலாம் என்பதாலும் அது முன்பே சுவிட்ச் ஆப் செய்யப் பட்டிருப்பதாலும் அதை அவர்களால் கண்டு பிடிக்க முடியாமல் போயிருக்கலாம் என்றார் சங்கரன்

சங்கரன் உமது ஊகம் சரியானதுதான் எனப் பாராட்டிய ராஜாராம்...

சரி போனை துடைத்துக் கொடுங்கள் என்றவர் அதை வாங்கி ஸ்விட்ச் ஆபை நீக்கி அன்றைய நாளில் போன்கள் யாரிடமிருந்து வந்திருக்கிறது என்று பார்த்தார். மீண்டும் மீண்டும் ஒரே எண்ணிலிருந்து தான் அன்றைய தினம் போன் கால்கள் வந்திருக்கின்றன.

இந்தப் போனின் முகவரியைக் கண்டுபிடிக் கணும். இதற்கு உடனே ஏற்பாடு செய்யுங்கள். நாம் நாளை அந்த முகவரிக்குச் செல்கிறோம். நெருங்கிவிட்டோம் என்றே நினைக்கிறேன். என்றவர் வீட்டில் உள்ளவர்களிடம் மனம் வருந்தாதீர்கள். உங்களுக்கு என்னால் முடிந்த உதவிகள் அனைத்தையும் செய்வேன் .உங்கள் பணத்தையும் திரும்பப் பெற்றுத் தருகிறேன். அரசாங்கத்திடம் முறையிட்டு உங்கள் மருமகளுக்கும் பணிக்கு ஏற்பாடு செய்ய முயலுகிறேன். அமைதியாயிருங்கள். என்று சொல்லிவிட்டு புறப்பட்டார்.

மறுநாள் காலை 8 மணிக்கே ராஜாராம் காவல் நிலையம் வந்து விட்டார். அவருடைய குணம் தெரிந்த சங்கரனும் அதற்கு முன்பே அங்கே ரெடியாயிருந்தார்

முகவரி வாங்கி விட்டீர்களா சங்கரன்.

நேற்று இரவே வாங்கி விட்டேன் சார். நாம் எங்கோ வெகு தொலைவு செல்ல வேண்டும் என நினைத்திருந்தோமே. அப்படியில்லை.

பிறகு எங்கே...

இதே ஊரில் தான் இந்த முகவரியும் இருக்கிறது.

சரி வாருங்கள் போய்ப் பார்ப்போம்.

முகவரி ஒரு இரண்டடுக்கு வீட்டின் எண்ணாயிருந்தது. வீட்டின் முகப்பில் இருக்கும் அழைப்பு மணியை அடித்ததும் ஒரு வயதான பெண்மணி கதவைத் திறந்தார்.

இந்த முகவரி இதுதானேம்மா என்றார்.

ஆமாங்கய்யா, ஏன் கேட்கிறீர்கள்? யாரை யாவது தேடி வந்திருக்கிறீர்களா?

அது எப்படிம்மா யாரையோ நாங்கள் தேடி வந்திருக்கிறோம் என்று ஊகிக்கிறீர்கள்.

காவல் துறை என்பதால் தான். என்ன சார் நான் சொல்லணும்.

இந்த முகவரி இரண்டடுக்குக்கும் சேர்த்தா?

ஆம்.

நீங்கள் மட்டும்தான் இதில் இருக்கிறீர்களா?

இல்லை சார். நான் கீழே ஒரு போர்ஷனில் இருக்கிறேன். இன்னொரு கீழ்ப் போர்ஷனில் மற்றொரு வயதானவர் இருக்கிறார்.

மேல் மாடியில் யார் இருக்கிறார்கள்?

ஒரு நடுத்தர வயதுப் பெண்ணும் ஒரு 20 வயதுப் பையனும் சார்.

ஏன் சார் கேட்கிறீர்கள்.

அவர்கள் இருக்கிறார்களா?

இல்லை சார். அவர்கள் நேற்று தான் இங்கிருந்து ஏதோ ஒரு ஊருக்குப் போவதாகச் சொன்னார்கள்

# புனிதம்!

அன்பை வழங்கும் இதயம் புனிதம்
ஆறுதல் அளிக்கும் சொற்கள் புனிதம்
உதவி செய்யும் கைகள் புனிதம்
தீங்கு நினைக்காத எண்ணம் புனிதம்
கடமை தவறாத கவனம் புனிதம்
மடமை நீக்கும் ஞானம் புனிதம்
கபடம் இல்லாத புன்னகை புனிதம்
துரோகம் செய்யாத தோழமை புனிதம்
நலம் பேணும் உறவு புனிதம்
மானம் காக்கும் மனிதம் புனிதம்

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை, புத்தளம், இலங்கை

## படித்ததைப் பகர்கிறோம்

கடவுள் ஒருநாள் மனிதனின் மகிழ்ச்சியை நேரில் காண விரும்பி அவன் முன் தோன்றி 'என்ன வரம் வேண்டும்' எனக் கேட்டான். மனிதனும் பணம், நகை,, வைரம் என அடுக்கிக் கொண்டே போனான். கடவுள் தன் சுட்டு விரலை நீட்ட அறையிலிருந்த பீரோ தங்கமானது. மனிதனோ பேசாமல் இருந்தான். கடவுள் மீண்டும் விரலை நீட்ட அங்கிருந்த கட்டில் தங்கமானது. அப்போதும் மனிதன் பேசாமல் இருந்தான். கடவுள் அந்த அறையிலிருந்த எல்லாவற்றையும் தங்கமாக மாற்றினான். இப்போதும் மனிதனிடம் அதே மௌனம். கடவுள் சலிப்படைந்து 'வேறு என்னதான் ப்பா வேண்டும் உனக்கு' என்று கேட்டார். மனிதனும் கடவுளின் சுட்டுவிரலைக் காட்டி இதுதான் வேண்டுமென சொல்லவும் கடவுள் மயங்கி விழுந்தாராம்.

வீடு யாருடையது?

அவர்களுடையது தான். அவர்கள் ஊருக்குத் தானே சென்றிருக்கிறார்கள். திரும்பி வருவார்கள் சார். நாங்கள் வாடகை கொடுக்கிறோமே

அவர்களிடம் ஏதாவது விசேஷமான நடத்தைகளைப் பார்த்தீர்களா?

சார் என்னை வம்பில் மாட்டி விட்டு விடாதீர்கள் சார்.

இல்லையம்மா. நாங்கள் யாரிடமும் சொல்ல மாட்டோம். எங்களுக்கு துப்பு வேண்டும்.

அந்தப் பெண் அந்தப் பையனை வைத்திருக்கிறாள் போலும் என நாங்கள் நினைக்கிறோம். அது மட்டும் இல்லாமல் மேல் மாடியில் இருக்கும் இரண்டு அறைகளில் ஒன்றில் சில சத்தங்கள் கேட்கும்.

என்ன சத்தங்கள் என்று தெரியுமா?

சத்தங்கள் அவ்வளவு தெளிவாகக் கேட்காது. கதவுகள் விசேஷமானவை போலும்.

நீங்கள் மாடிக்குச் சென்றிருக்கிறீர்களா?

இல்லை சார். வாடகைக்கு விடும்போதே. நீங்கள் வயதானவர் என்பதால் தான் வாடகைக்கு விடுகிறேன். மேலேயெல்லாம் நீங்கள் வரக்கூடாது. அப்படியிருந்தால் தான் உங்களுக்கும் நல்லது என்று சொல்லி தான் அந்தப் பெண் எங்களுக்கு வாடகைக்கு விட்டாள்.

மாடிக்குப் போவதற்கு வழி எங்கே இருக்கிறது இங்கே காணவில்லையே.

பின்பக்கம் அது மறைவாய் இருக்கும். நாங்களே அதைப் பார்த்ததில்லை. என்ன ஏற்பாடு செய்திருக்கிறாளோ

ஏன் சார் இதையெல்லாம் கேட்கிறீர்கள்

ஒரு கொலை நடந்திருக்கிறது. அதில் இவர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம்.

சார் எனக்கு பயமாயிருக்கிறது.

பயப்படாதீர்கள். காவலர் துணை வரச் சொல்லியிருக்கிறேன். அவர் பார்த்துக் கொள்வார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு மனிதரின் சத்தம் கேட்டதா?

அலறல் சத்தம் மிக மெதுவாகத்தான் கேட்டது சார். அது வழக்கம் தானே என்று நினைத்தேன்.

சரி அவர்கள் எங்கே போனார்கள் என்று உங்களிடம் சொன்னார்களா?

இல்லை சார்.

உங்களுக்குத் தெரியாதா?

அவர்கள் வீட்டிற்கு வேலைக்கு வருவான் ஒரு விடலைப் பையன். அவனிடம் அவங்க ஊருக்குப் போகிறார்களே. உனக்கு வேலை போயிடுமா என்றேன்.

இல்லை பெரியம்மா, அவர்கள் ஒரு வாரத்தில் இங்கே வந்து விடுவேன். நீ எங்கேயும் போகாதே. நான் சம்பளம் தருகிறேன் என்று அந்தப் பெண் சொன்னாளாம்.

அவனுக்காவது தெரியுமா?

அவனுக்கு எங்களுக்குத் தெரிந்த அளவுகூட தெரியாது. பாவம்.

ஆனால் ஒன்னு சொன்னான் அந்தப் பையன்.

எங்கேடா போறாங்கன்னு கேட்டேன். ஜோலா ன்னு சொன்னான்.

ஜோலார்பேட்டையான்னு கேட்டேன்.

ஆமாம். அதே தான். எனக்கு வாயில்

வரமாட்டேங்குது பெரியம்மா என்றான்.

எப்படிடா தெரியும் என்றேன். அந்த ஆளுக்கிட்ட அவங்க சொல்லிகிட்டிருந்ததைக் கேட்டேன். ஆளுன்னு சொன்னது அந்த 20 வயது பையனை.

இவ்வளவு தகவல் கொடுத்ததுக்கு ரொம்ப நன்றிம்மா. நீங்க பயப்படாதீங்க

அங்கிருந்து புறப்பட்ட ராஜாராம் சங்கரனிடம் இப்பவும் நாம் திக்கு தெரியாத காட்டில் தான் இருக்கிறோம். என்றார்.

நீங்க வாங்க சார் நாம் ஜோலார்பேட்டை போவோம். அங்கே நமக்கு ஏதாவது ஒரு க்ளூ கிடைக்கும் என்று அழைத்தார். சரி என்று புறப்பட்டார் ராஜாராமும்.

திருப்பதிக்குப் போய் மொட்டைத் தலையனைத் தேடுவது போல் நான் ஜோலார்ப்பேட்டையில் கொலையாளிகளைத் தேடுவதா

ஜீப்பில் பயணம் செய்ததில் களைப்பான சங்கரன் சார் இங்கே எங்காவது வண்டியை நிறுத்தச் சொல்லுங்க. நாம் மூவரும் டீயும் ஸ்நேக்சும் சாப்பிட்டு கொஞ்சம் உட்கார்ந்திட்டுப் போகலாம். ஜோலாவுக்கு இன்னும் அரை மணி நேர பயணம் தான் இருக்கிறது சார்.

என்ன சங்கரன் நீங்களும் அந்தப் பையனைப் போல ஜோலான்னு சொல்றீங்க.

அது தான் ஈசியாருக்கு சார்.

சரி கணபதி வண்டிய நல்ல டீக்கடையில் நிறுத்துங்க.

இன்னும் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு கடை இருக்கு சார் டீ அருமையா இருக்கும். ஸ்னேக்சும் டேஸ்ட்டா இருக்கும்.

சரி சரி அங்கேயே நிறுத்து

வண்டி நின்றது. வண்டியை கொஞ்சம் பின்னாடி போய் நிறுத்திட்டு வா. நாங்களும் மப்டியில் தானே இருக்கிறோம்.

சரி சார் என்றவன் 50 மீட்டர் தள்ளி நிறுத்திட்டு நடந்து வந்தான்.

விஷயம் சங்கரனுக்குப் புரிந்தது. டிரைவருக்குப் புரியவில்லை.

சார் சொன்னா கேட்டுக்கணும் தம்பி என்றார் சங்கரன்.

மூவருக்கும் என்ன வேண்டும் என்று கேட்டபோது டிரைவர், சூடா உருளைக் கிழங்கு போண்டா மூணு செட் கொடுப்பா. சாப்பிட்டதும் டீ மூணு கொண்டு வந்து தந்திடு.

சர்வர் டிரைவர் கேட்டது போலவே மூன்று தட்டுகளில் ஆவி பறக்கும் போண்டாக்களை கொண்டு வந்து வைத்தான்.

ராஜாராம் அந்த டீக்கடையை நோட்டம் விட்டார். அது சிறியதாய் இருந்தாலும் சுத்தமாய் இருந்தது. ரோட்டோரம் இருந்ததால் ஓரமாய் கொட்டகை இட்டு மேசை நாற்காலிகள் இடப்பட்டு ஒரு சிறிய ஓட்டல் போலவே இருந்தது. டிரைவர் சொன்னது போலவே போண்டா நன்றாய் இருந்தது.

அப்போது காரில் இருந்து இறங்கிய இருவர் அந்தக் கடையைத் தேடி வந்தமர்ந்தனர். பார்ப்பதற்கு செழிப்பானவர்களாய் தோன்றினார்கள்

சங்கர் இந்தக் கடைக்கு வந்திருக்கிறீர்களே என்றார் ஒருவர்.

சுந்தர் சுத்தம் எங்கேயிருக்கிறதோ அங்கே நான் அமர்வேன். அது மட்டுமல்ல இங்கே எல்லாமே குவாலிட்டியாயிருக்கும். கடை சிறிது, கூரை என்றெல்லாம் பார்க்காதே. உருவத்தைப் பார்த்து யாரையும் எடை போடாதே. நீ அப்படி ஏமாந்த பிறகும் இதை உணர வில்லையா?

என்ன சங்கர் என்னை ஞாபகப்படுத்து கிறீர்களே...

பின்னே என்ன?

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ராஜாராமும் சங்கரனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். டீ கொண்டு வரவா என்று நின்ற சர்வரிடம் இன்னும் 5 நிமிடம் கழித்துக் கொண்டுவா என்றார் சங்கரன். டிரைவர் விழித்தார்.

உனக்கு அழகான மனைவி இருக்க ஏதோ ஒரு கழிசடை பேச்சைக் கேட்டு அவள் கேட்ட பணத்தைக் கொடுக்க வேண்டியிருந்ததே.

அவள் மிரட்டினாளே

மிரட்டுவதற்கு நீ தானே காரணம். இதிலெல்லாம் விழலாமா?

சரி சரி அதை விடுங்கள். அவளை ஜோலார் பேட்டையில் பார்த்ததா ஒருத்தன் சொன்னான் என்னிடம்.

நீ இன்னும் அவளை நினைத்துக் கொண்டா இருக்கிறாய்.

அதில்லை அவளை யாராவது பழி வாங்க மாட்டார்களா எனக் காத்திருக்கிறேன்.

அந்த வரை பரவாயில்லை. நீ பழி வாங்குவேன்னு சொல்லாமே இருந்தியே.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சங்கரன் சார் துப்பு கிடைத்து விட்டது பார்த்தீர்களா? என்றார்.

டீ வந்தது. அந்த இருவருக்கும்கூட டீ வந்தது.

அவர்கள் தங்கள் காரை நோக்கி நடந்தனர்.

சங்கரன் அவர்கள் பின்னால் சென்றார். சார் என்றார் சங்கரைப் பார்த்து.

என்ன? நீங்கள் யார்?

சொல்கிறேன் சார். உங்களிடம் ஒரு தகவல் வேண்டியிருக்கிறது. அதோ அங்கே நிற்கிறதே எங்கள் ஜீப். அதுவரை நீங்கள் வாருங்கள். 5 நிமிடத்தில் நீங்கள் கிளம்பி விடலாம்.

சார் என்ன சார் இது போலீஸ் அழைத்துப் போகிறது என்றால் எங்களைப் போன்றவர்களைப் பற்றி பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்.

அதெல்லாம் இல்லை. உங்களுக்கு ஆட்சே பனை இல்லை என்றால் உங்கள் காரில் உட்கார்ந்துகூட பேசலாம். எங்க டிரைவர் உங்கள் காரை ஓட்ட நான் அருகில் உட்கார்ந்து கொள்கிறேன். நீங்கள் இருவரும் எங்கள் சப்இன்ஸ்பெக்டர் அதோ இருக்கிறாரே அவரும் பின்னால் உட்காருங்கள் வண்டியை பின்னால் கொண்டு சென்று எங்கள் வண்டிக்குப் பின்னால் நிறுத்துங்கள். நம் பாதுகாப்புக்குத் தான்.

டிரைவரை வண்டியை பின்னால் விடச் சொல்லி சங்கரன் சொன்னது போலவே உட்கார்ந்து வண்டி போலீஸ் வண்டிக்கு பின்னால் 10 அடி தள்ளி நின்றது. அதிகக் கூட்டமில்லை. இவ்வளவு முன் யோசனை வேண்டாம் தான்.

உங்களை நாங்கள் கௌரவமாகத்தான் நடத்துவோம். அதைப் பற்றிய பயம் வேண் டாம். எங்களுக்கு நீங்கள் பேசிய விஷயத்தைப் பற்றிய விவரங்கள் வேண்டும்.

யாராவது பழி வாங்குவதைப் பார்க்க வேண்டும் என்றாரே சுந்தர்.

அந்த யாரோ நாங்களாயும் இருக்கலாம். ஆனால் நாங்கள் பழி வாங்க வேண்டியதில்லை. தண்டனை வாங்கிக் கொடுப்போம்.

சார் என்ன சொல்கிறீர்கள்.

நீங்கள் பேசிய பெண்ணைப் பற்றிய தகவல்கள் வேண்டும். அவள் ஒரு கொலை செய்து விட்டாள். சுந்தர் தப்பியது அதிசயம் தான்.

*சார் சுந்தர் சும்மா தப்பவில்லை. 1 லட்சம் பணம் கொடுத்துத்தான் தப்பினான். நாங்க பாதுகாப்பு செய்து போனதால் பணத்தை வாங்கிக் கொண்டு அவள் சுந்தரை விட்டு விட்டாள்.*

*சரி அவளைப் பார்த்ததாக சுந்தர் சொன்னாரே. நாங்களும் அவள் ஜோலார் பேட்டையில் இருக்கிறாள் என்றறிந்தே இங்கே வந்தோம். எங்களிடம் முகவரி இல்லை. அவள் எங்கே இருக்கிறாள் என்பதைச் சொல்லுங்கள்.*

*அவளைக் கடைத் தெருவில் வைத்துப் பார்த்ததாகத்தான் என் நண்பன் சொன்னான். முகவரி தெரியாது.*

*அந்த நண்பனைக் கேட்டால் தெரியுமா?*

*ஒரு வேளை தெரியுமோ என்னவோ?*

*நாம் தேடுவது தெரியக்கூடாது.*

*சரி சார் நாங்கள் என்ன செய்யணும்னு சொல்லுங்க என்றார் சங்கர்.*

*சுந்தர் அவர் நண்பனை போனில் அழைத்து இங்கே வரச் சொல்லுங்கள்.*

*சரி சார் இப்பவே சொல்கிறேன்.*

*அவன் பத்து நிமிடத்தில் வந்து விடுவான் சார்.*

*சுந்தர் சொன்னது போலவே ராஜேசும் வந்து சேர்ந்தான்.*

*அவனிடம் விசாரித்த போது அவனுக்கு சரியான முகவரி தெரியாதாம். ஆனால் அங்கே யுள்ள ஒரு லாட்ஜில் தான் அவள் ரூம் எடுத்துத் தங்கியிருப்பாள். ஏறக்குறைய சுந்தர் பேசி முடித்த லாட்ஜாகக் கூட அது இருக்கலாம் என்றான்.*

*அவர்களிடம் முகவரி பெற்றுக் கொண்டனர்*

*அவனுக்கு நன்றி கூறி அங்கிருந்து தங்கள் ஜிப்பில் புறப்பட்டனர் ராஜாராமும் சங்கரனும்.*

*ராஜேஷ் சொல்லிய ஓட்டலுக்குப் போன போது ரிசப்ஷனிலிருந்த ஆள் சார் அவர்கள் இப்போது தான் வெளியே போனார்கள் என்றான்.*

*அப்போது மாடியிலிருந்து வந்த ஒரு மனிதர் சார் அவர்கள் அறையில் தான் இருக்கிறார்கள் இப்போது நான் பார்த்தேன் என்றார்.*

*சங்கரன் ரிசப்ஷன் ஆளிடம் யாரிடம் விளையாடுகிறாய்? கம்பி எண்ண வேண்டுமா உனக்கு என்று அதிகாரத் தொனியில் கேட்டுக் கொண்டிருக்கும் போதே ராஜாராமும் மற்றொரு காவலரும் ராஜேசும் வந்த மனிதரிடம் ரும் நெம்பர் கேட்டுக் கொண்டு லிப்டில் சென்றனர்.*

*என்ன சார் மிரட்டிறீங்க, நீங்க யாரு என்றான் ரிசப்ஷனில் இருந்தவன்.*

*கொலைக் குற்றத்திற்காக உன்னை கைது செய்ய வந்திருக்கும் காவல்துறையடா நாங்கள். போதுமா?*

*சார் சார் நான் தெரியாமல் சொல்லி விட்டேன். அந்தப் பெண் தான் என்னை அப்படிச் சொல்லச் சொல்லி பணித்தாள்.*

*நீயும் அவளுக்கு உடந்தையா?*

*ஐயய்யோ இல்லை சார். அவள் சொன் னதைச் சொன்னேன். அவ்வளவு தான். என்னை விட்டுவிடுங்கள் சார். நான் உங்களுக்கு உதவி செய்கிறேன் என்றான் அவன். அந்தப் பெண்ணின் பெயர் புஷ்பா சார். அவளோடு ஒரு 20 வயது பையனும் கூட இருக்கிறான்*

*சங்கரன்மாடிக்குப்போனபோது ராஜாராம் கதவைத் தட்டிக் கொண்டிருந்தார். உள்ளே சப்தம் கேட்டது. கதவு திறக்கப்படவில்லை.*

சங்கரன் ரிசப்ஷன் ஆளுடன் அங்கே வந்தவர் அவனைப் பார்த்தார்.

அம்மா அவர்கள் துப்பாக்கிகளோடு வந்திருக்கிறார்கள். கதவை உடைக்கச் சொல்கிறார்கள். நீங்கள் கதவைத் திறங்கள்.

கதவு படாரென்று திறக்கப்பட்டது. அங்கே ஒரு 20 வயது பையன் நின்று கொண்டிருந்தான்.

யார் வேண்டும்? அதிகாரமாய் கேட்டான்.

சங்கரன் விலங்குடன் அவன் அருகில் சென்று அவன் கையில் வேகமாக அதை மாட்டினார்.

பயந்தவன், சார் என்ன செய்கிறீர்கள்.

டேய் புஷ்பாவை வெளியில் வரச் சொல். இல்லையென்றால் உன்னைச் சுட்டு விடுவேன்.

புஷ்பா உன்னை யாரோ பார்க்க வேண்டுமாம் என்று கத்தினான்

என்ன இங்கே கூட்டம்.? என்ன வேண்டும் உங்களுக்கு? யார் சார் வேண்டும்?

நீ தான் வேண்டும்.

ஒரே நேரத்தில் இவ்வளவு பேருக்குமா? என்றாள் தெனாவெட்டாக

சங்கரன் அவள் கையிலும் விலங்கை மாட்டுங்கள்

சங்கரன் விலங்குடன் அவள் அருகில் சென்றார்.

கேள்வி முறையில்லாமல் இப்படி அநியாயம் செய்கிறீர்களே.

பேசாதே. நீ ரொம்ப நியாயம் செய்திருக்கிறாய் என்று ராஜாராம் சொல்லும்போதே சங்கரன் அவள் கைகளில் விலங்கைப் பூட்டினார்.

எதற்கு என்னைக் கைது செய்கிறீர்கள்? என நான் தெரிந்து கொள்ளலாமா?

கொலை செய்த குற்றத்திற்காக. இன்னும் பல குற்றங்களும் செய்திருக்கிறாய்.

ஜீப்பில் அவர்களையும் ஏற்றிக் கொண்டார்கள்

ராஜேஷிடம் நன்றி சொல்லி அவன் நண்பன் சுந்தரை தங்கள் காவல் நிலையத்திற்கு அழைத்து வரச் சொல்லிவிட்டு அங்கிருந்து ஜிப் புறப்பட்டது.

தன் காவல் நிலையத்தில் வைத்து புஷ்பாவை விசாரிக்கத் தொடங்கினார் ராஜாராம்.

ரமேஷைக் கொன்ற குற்றத்தை ஒப்புக் கொள்கிறாயா?

ஆம். நான் தான் கொன்றேன் என்றாள் சற்றும் பயமின்றி

எதற்காக?

அவன் எங்களைக் காட்டிக் கொடுத்து விடுவான் என்பதால்.

ரமேஷை எப்படிப் பழக்கம் உனக்கு

நான் மெய்க்காவல் என்கிற ஸ்தாபனம் நடத்தி வந்தேன்.

என்ன அது?

அப்போது ராஜேசும் சுந்தரும் அங்கே வந்தனர்.

சார் அது விபச்சாரம் தான் சார். இவள் முதலில் தானே அதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். பேராசையில் தன்னோடு பலரைச் சேர்த்து பசையுள்ள ஆண்களை வளைத்துகிக் ஏற்றி. அவர்களிடம் பணம் பறித்துக் கொண்டு அவர்களை துரத்தி விடுவாள். சமூகத்திற்கு பயந்து அவர்களும் பேசாமல் இருந்து விடுவார்கள் என்றான் ராஜேஷ். அந்த ஸ்தாபனத்திற்கு வெப்சைட் எல்லாம் வைத்திருந்தாள். வாட்ஸ்அப் குழுவேறு இருந்தது

இதோ இங்கே என்னுடன் இருக்கும் நண்பன் சுந்தரும் அதில் சிக்கி சின்னா பின்ன மானவன் தான். சிறிது நேர ஆசையின் விளைவு

என்னம்மா இவர் சொல்வது எல்லாம் உண்மையா?

இனி எதற்கு உங்களிடம் மறைக்க வேண்டும். அதுதான் எவிடன்சோடு வந்து விட்டீர்களே.

ரமேஷ் பணக்காரர் இல்லையே அவரை எதற்குப் பிடித்தீர்கள்?

அங்கே தான் தவறு செய்து விட்டேன் நான். ரமேஷ் என்னிடம் நான் பிசினஸ்மேன். கோடிகளில் புழங்குகிறேன். என்றான்.

அவன் நடையுடை பாவனைகளும் அப்படி இருந்தன. நானும் அவனிடம் நான் மாடல் பெண் . மாடல்களில் பணம் சம்பாதிக்கிறேன். ஸ்தாபனம் இருக்கிறது என்றேன்.

ஒரே ஊரில் இருந்து கொண்டு எப்படி இந்தத் தவறு நடந்தது.

இங்கேயும் அவன் ஒரு பொய் சொன்னான். நான் மதுரையில் தொழில் செய்கிறேன் என்று அள்ளிவிட்டான். நானும் நம்பினேன்.

பின் எதற்காக அவரைக் கொன்றீர்கள்?

அவருடைய அப்பாவிடம் பணம் கேட்ட போது 3 லட்சம் தான் இருக்கிறது. நான் எடுத்துத் தருகிறேன் என்றார். பையனை விட்டு விடுங்கள் என்றார். எனக்கு சந்தேக மாயிற்று, அப்படியே பணம் கிடைத்தாலும் ரமேஷை விட்டால் என் குட்டு உடைந்து விடும் என்பதால் தான் அவனைத் தீர்த்துக் கட்டினேன்.

நீ மட்டுமா? அது எப்படி?

எப்படியாயிருந்தாலும் நான் மாட்டிக் கொள்வேன் இன்றில்லா விட்டாலும் என்றா வது ஒரு நாள் என்ற உறுதி எனக்கு உண்டு. அது இப்போதாகவே இருக்கட்டுமே. 20 வயது பையனைக் காட்டி இவன் என் பாய் பிரண்டு என்று சொன்னவள்,. நான் எது சொன்னாலும் இவன் செய்வான். இருந்தாலும் எனக்கு சந்தேகம். அதனால் என் முன்னாள் பாய் பிரண்டு ஒருத்தனையும் உதவிக்கு அழைத்தேன். அவனும் வந்தான்.

முன்னாள் பாய் பிரண்டு அவன் கழுத்தை நெறிக்க இவன் அவனை தடிகொண்டு அடிக்க நான் கத்தியை எடுத்துக் கொண்டு வந்து அவன் வயிற்றில் அதைப் பாய்ச்சினேன் என்று சாதாரணமாக கதை சொல்வது போல் சொன்னாள்.

மூன்று பேரும் குற்றம் புரிந்திருக்கிறீர்கள். முன்னாள் பாய் பிரண்டு எங்கே?

அவனை இவன் பொறாமையால் குண்டாந் தடியால் பின் மண்டையில் அடிக்க அவனும் உடனே இறந்து விட்டான். இந்த அறையில் தான் அவன் பிணம் இருக்கிறது. இன்று அதை டிஸ்போஸ் செய்யலாம் என்றிருந்தேன்.

பிணத்தைப் பார்வையிட்ட ராஜாராம் போஸ்ட்மார்ட்டம் செய்ய ஏற்பாடு செய் யுங்கள் என்று மற்றொரு காவலரிடம் சொன்னார்..

பிணத்திற்கு அவரை காவல் வைத்துவிட்டு திரும்பியவர் கைதிகள் இருவரையும் அழைத்து வாருங்கள் என்றார்.

ரமேஷின் மனைவியை விட புஷ்பா எந்த விதத்திலும் அழகி இல்லை. இதைத் தான் ரதி மாதிரி மனைவி இருந்தாலும் குரங்கு மாதிரி ஒரு வைப்பாட்டி என்று சொல்கிறார்களோ என நினைத்தவர் தன்னை அறியாமல் பெருமூச்சு விட்டார் ராஜாராம்.

பெரிய ஒரு கேங்கை இதன்மூலம் பிடிக்க அடித்தளமிட்ட மகிழ்ச்சியில் சங்கரனும் கைதி களுடன் ஜீப்பில் சென்றார்.

■

# நட்பெனும் நந்தவனம்!

**பா .சூர்யா** M.Sc.,M.Phil.,B.

எல்லா உயிர்களும் இந்த பிரபஞ்சத்தில் பிணைக்கப்பட்டு இருப்பது ஏதோ ஒரு உறவில் தான். அவற்றில் மிகவும் மகத்தான ஒரு உறவு 'நட்பு'. இந்த உறவை மட்டும் தான் நாமாக தேடிச் சென்று உறவாடி கொள்ள முடியும். நட்புக்கு எல்லையில்லை. சாதி மத வேறுபாடு இல்லை. பால் பாகுபாடு இல்லை. உயர்ந்தவன் தாழ்ந்தவன், பணக்காரன் ஏழை என்ற வித்தியாசமும் இல்லை. 'தோழமை' மட்டுமே நட்பிற்கான எழுதப்படாத இலக்கணம்.

நட்பு என்பது பகிர்ந்து கொள்வது - அன்பு செலுத்துவது - தோள் கொடுப்பது - துயர் துடைப்பது - உற்சாகம் தருவது - உயர்வில் மகிழ்வது. தன் சுதந்திரத்தை இழக்காமல் ஒன்றி தூய்மையான நட்பில் கரைந்து போவது தான் ஆகச்சிறந்த நட்பு.

*உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு .*
*(குறள் -788)*



இக்குறளின் பொருள், ஆடை விலகுகிற பொழுது கை எவ்வளவு விரைவாக சென்று அதை சரி செய்கிறதோ அதுபோல தன் நண்பனுக்கு துன்பம் ஏற்படும் பொழுது விரைந்து உதவுவதே சிறந்த நட்பாகும்.

இன்றைய நவீன உலகில் facebook - இல் ஆயிரம் பேர் இருந்தும் ஆபத்தில் உதவ ஒருவர்கூட வருவதில்லை. உதவ தேவை யில்லை ஆனாலும் செவி கொடுத்து கேட்க கூட எவருக்குமே நேரமில்லை. கூட்டம் சேர்ப்பதல்ல நட்பு. இன்றைய இளைய சமுதாயம் தெளிவு பெற வேண்டும். உயிர் கொடுக்கும் உற்ற நண்பன் ஒருவனை பெற்றால் கூட யானை பலம் பெறுவீர்கள்.

தேவைக்கேற்ப மட்டும் நட்பு வைத்துக் கொள்வது நாடகத்துக்கு ஒட்டு மீசை வைத்து கொள்வது போல நிரந்தரமற்றது. நாம் நட்பு என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்தி தேய்த்து விட்டோம். தெரிந்தவர்கள், பரிச்சய மானவர்கள், அறிமுகமானவர்கள் அனை வருமே நண்பர்கள் என்று முகவரி கொடுத்து விட்டோம். நட்பு என்பது உன்னதமானது. உனக்கான நட்பை நீயே வடிகட்டி தேடு. இந்த உலகம் தருகிற போலி கவுரவத்திற்காக ஒட்டிக்கொள்ளும் உறவை விட, உலகமே அணி திரண்டு உனக்கெதிராய் நின்றாலும் உன் உடனிருந்து தோள் கொடுப்பவனே உன் உண்மையான நண்பன்.

மூதுரையில் ''அற்ற குளத்தின் அருநீர் பறவை போல'' (பாடல் - 17) என்ற பாடலில் துன்பத்தில் நம்மை விட்டு விலகி போன உறவினர்களை ஔவையார் சாடியிருப்பார். ஆனால் நல்ல நண்பன் கடலில் வீழ்ந்தாலும் நம்மோடு மூழ்குவான் அல்லது நம்மோடு நீந்துவான். அப்படி ஒரு நட்பு கிடைப்பது வரம் .

மரணத்தை சிறு புல்லென காலனை மிதித்த மகாகவி, மதம் கொண்ட யானையால் தாக்கப் பட்டபோது மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்க, கூட்டத்தை கிழித்துக்கொண்டு சற்றும் தாமதிக்காமல் துணிவுடன் பாரதியை தோளில் கொண்டு சென்றவர் குவளைக்கண்ணன் என்ற நண்பனே.

நல்ல நண்பர்களால் நாம் ஆக்கப்படுகி றோம். தகப்பனை போன்ற அறிவுரையையும் ,தாயை போன்ற கனிவையும், சகோதரனை போன்ற பாசத்தையும் அள்ளி தரும் நண்பர் கள் நட்பை கண்ணாடியாக்கி நம்மையே பிரதிபலிப்பார்கள்.

எந்த எதிர்பார்ப்பும் இல்லாதது தான் ஆகச்சிறந்த நட்பின் அடையாளம். பிறந்தநாள் வாழ்த்து சொல்வதும் பரிசுகள் பரிமாறி கொள்வதும், சேர்ந்து சுற்றுலா செல்வதும், selfie எடுத்து status வைப்பது மட்டுமல்ல நட்பு. உண்மையான நட்பு என்பது வரம். அது தன்னை கரைத்து கொண்டவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் பொக்கிஷம்.

இன்று whatsapp - இல் எளிதாக குறுஞ் செய்திகளை forwar செய்துகொள்ளும் வசதி இருப்பதால்தானோ என்னவோ கடமைக் கென்று வாழ்த்துகள் குவிந்துவிடுகிறது நமது அலைபேசியில். குழுவில் நமது வாழ்த்து இல்லாவிட்டால் தவறாக எண்ணிவிடுவார்கள் என்ற அச்சத்தில் போலியாக பல வாழ்த்துகள் போட்டி போட்டுக் கொண்டு முந்தி கொள் கின்றன.

பள்ளி நட்பு பள்ளியோடும், கல்லூரி நட்பு கல்லூரியோடும், அலுவலக நட்பு பணி ஓய்வோடும் முற்று பெறுகிறது. சிலருக்கு சூழ்நிலை என்னும் வேலி நட்பை தொடர தடை போடுகிறது. பலருக்கு தொடர நேரமின்மையும் காரணமாகிறது. எஞ்சிய சிலருக்கு சூழ்நிலை, நேரம் இரண்டும் கிடைத்தும் பேச மனமில்லை. இப்படியாக இயந்திரமாய் ஓடிக்கொண்டிருக்கிறோம் வாழ்க்கை பயணத்தில்.

மலரின் வாசமாய்
மதியின் ஒளியாய்
உடலின் நிழலாய்
உறவாடும் நட்பே
துணை நமக்கு..!
நட்பு இறைவன்
கொடுத்த வரமல்ல..
இறைவனுக்கே
கிடைக்காத வரம்.!!!

நட்பை விலைகொடுத்து வாங்க முடியாது. நாமாக தான் பாடுபட்டு சம்பாதிக்க வேண்டும். நட்பு சுயநலமற்றது. எனவே கிடைக்கும் நேரங்களில் எல்லாம் நட்பை வலுப்படுத்துங்கள். கடந்த கால நினை வலைகளில் இளைப்பாருங்கள். நட்பு எப்பொழுதும் உண்மையான முகமாக இருக்க வேண்டுமே தவிர ஒருபோதும் முகமூடியாக இருக்க கூடாது.



**மையில் நனைந்த தூரிகையின்**
**பாதச் சுவடுகளை**
**கவிதை என்கிறாய் நீ**
**காதல் என்கிறேன் நான்.**



**ரீஸா ஹனி**

# மலம்

எஸ். மைக்கேல் ஜீவநேசன்
தேனி.

அம்மனை வழிபட அம்மா அழைத்தாள். செவ்வாய் தோறும் ஒன்பது வாரங்கள் விளக்கேற்றினால் அம்மன் அருள் பாலிப்பாள். கல்லூரி முடிந்து ஒரு வருடம் ஓடிவிட்டது. அவன் கடைக்குட்டி. அவனுக்கு முன் பிறந்தவர்கள் இரண்டு அக்காக்கள். சென்னை யில் கிடைத்த வேலைகளை மறுதலித்து விட்டவன், இப்போது கடுமை யான முயற்சிக்குப் பின் மீண்டும் சென்னை புறப்பட தயாரானான். கணவனை இழந்தவள் அத்தனை தூரம் அவனை அனுப்ப அம்மாவுக்கு மனமில்லை. அக்காக்கள் அம்மாவுக்கு தைரியம் கொடுத்தார் கள். வேறுவேறு ஊர்களில் வாழ்க்கைப் பட்டு போனவர்கள் அவர்கள். அவனுக்கு ஓர் அச்சம் இருந்தது. அம்மாவின் தனிமை பற்றி.

'சார், தாம்பரம் வந்தால் சொல்லுங்க' - வழி நடத்துனரிடம் ஞாபகப்படுத்திக் கொண்டான். புறவழிச்சாலையின் உணவு விடுதியில் நின்று பின் வேகமெடுத்தது பேருந்து. அதி காலை தூக்கம் அழுந்த சற்று நேரம் தூங்கிப் போனான். பேருந்து தாம்பரத்தை தாண்டிய தும் திடுக்கென விழித்துக் கொண்டான். சென்னைப் பட்டணத்தின் துர் நாற்றம்தான் அவனை எழுப்பிவிட்டது. தினசரி சென்னைக்கு அதிகம் பேர் வருவது போல் குப்பைகளும் வந்து விழுகிறது. எடுக்க எடுக்க குறைவதில்லை. ஒரு நாள் முழுவதும் குழந்தையை கவனிக்கவில்லையானால் அது பீயும் மூத்திரமுமாக ஆகிவிடுவது போல், சிங்காரச் சென்னையும் அப்படித்தான். ராஜ பாட்டைகளின் வீதியும் துர் நாற்றம் வீசுகிறது.

வடபழனி வந்ததும் இறங்கிக் கொண்டான். அவன் வேலையில் சேரப் போகும் நிறுவனம் அங்குதான் உள்ளது. ஒரு ஆட்டோகாரரிடம் முகவரி பற்றி விசாரித்த போது, தானே சென்று விட்டுவிடுவதாகவும் வெறும் ஐம்பது ரூபாய் தந்தால் போதும் என்று சொன்னவுடன் ஏறிக் கொண்டான். ஆட்டோ நேராக கோயம்பேடு செல்லும் திசையில் சென்று மேம்பாலத்தை கடந்தவுடன் ஒரு 'யூ' திருப்பம் திரும்பி மீண்டும் வந்த திசைக்கே சென்று மேம்பாலத்தின் அதி நீளத்தை கடந்தவுடன் வலது புறமாக திரும்பி கே.கே.நகருக்குள் புகுந்து வடபழனி நிறுவனத்தின் முன் வந்து நின்றது. குழம்பிப் போனான். நடந்து வந்திருந்தால் ஒரு தெருவை தாண்டினால் போதும் அங்குதான் அவனுடைய நிறுவனம். என்ன செய்வது ஆட்டோகாரரும் பிழைக்க வேண்டுமே. இப்படி ஒரு ஏமாற்று வேலை நடந்தது என்று பின்புதான் அறிந்து கொண்டான். அந்த நிறுவனத்தில் அவனுக்கு பணி ஊர் ஊராக சென்று வரும் விற்பனை பிரதிநிதி வேலைதான். அவனுக்கு ஒரு வாகனமும் தங்கிக் கொள்ள அலுவலகத்தின் மேல் மாடியில் அறையும் கொடுத்திருந்தார்கள். மூன்று நேர உணவும் தெருக் கடைகளில் எடுத்துக் கொண்டான். தன் முதல் மாத சம்பளத்திற்குப் பின் தனிவீடு எடுத்துவிடுவது என்ற நோக்கில் கே.கே.நகர் சாலைகளை சல்லடை போட்டு தேடினான். கிடைத்தது. முனுசாமி சாலையில் ஒரு பத்துக்கு பத்து அளவு கொண்ட வீடு. ஆனால், அது மூன்றாவது மாடியில் உள்ள சீட்டு போட்ட வீடுதான். காற்றுக்கு குறையில்லை. கதவை மூடினால் தானாகவே திறந்துவிடும். தாழ்ப்பாள் போட்டாலும் கதவை யாரோ தட்டுவது போல் சப்தம் வரும். ஒரு வேளை ஊர் ஆலமரத்து சங்கிலி கருப்பும் தன்னுடன் வந்துவிட்டதோ வேலை தேடி...! பின்புதான் தெரிந்து கொண்டான் இது காற்றின் வேலை யென்று.

எழுபது வயது மதிக்கத்தக்க பெரியவர்தான் அந்த வீட்டின் சொந்தக்காரர். மிகவும் கண்டிப்பானவர். 'நடைபாதை நடப்பதற்கே'- எனும் அறிவிப்பு பலகை சாலைகளில் வைக்கப் பட்டு உள்ளன. என்னதான் பெரிய வீடாக இருந்தாலும் வாகனத்தை மாநகராட்சிக்கு சொந்தமான சாலையில்தான் விடவேண்டும். அந்த வீட்டு பால்கனியில்தான் 'போன்சாய்'- மரங்கள் வளர்த்துக் கொண்டார்கள். அது என்ன 'போன்சாய்'. நன்றாக வளர வேண்டிய மரத்தின் கிளைகளை வெட்டி, அடி பெருக்க

மாற்றுத் திறனாளியாக மாற்றிவிடும் கலைதான் அது.

கே.கே.நகர் என்பதால் தண்ணீருக்கு பஞ்சம் இல்லைதான். இரண்டு நாளுக்கு ஒரு முறை மாநகராட்சி குழாயில் தண்ணீர் வருகிறது. நிலத்தடி நீரும் மேல் தொட்டியில் நிரம்பிவிடுகிறது. ஆனாலும் ஒரு காலத்தில் அரிசிக்கும், தங்கத்திற்கும் கட்டுப்பாடு இருந்தது போல் தண்ணீர் சிக்கனம் பற்றி அவ்வப்போது எச்சரிக்கை செய்வார் வீட்டிற்கு சொந்தக்காரர். அரசு சொல்லும் கட்டணத்தைவிட அதிக கட்டணம் தந்துதான் மின்சாரம் பயன்படுத்த வேண்டும்.

கிராமத்தின் நிதானங்களையும் மென்மை யையும் பழகியிருந்தவனுக்கு நகரத்தின் அவசரமும் கடினமும் எளிதில் உள்வாங்கிக் கொள்ள முடியவில்லை. பரபரப்பான சாலை யில் அதிக விலைக்கு வாங்கப்பட்ட கிராமத் தின் ஆற்று மணல்கள் கால்கள் பட்டு சீரழிகிறது.

அந்த குடியிருப்பில் கீழ் தளத்தில் தாத்தாவும் பாட்டியும் பத்து வருடங்களாக வாடகைதாரர்களாக இருக்கிறார்கள். அவன் பணியிலிருந்து தாமதித்து வரும் போதெல்லாம் பாட்டி இரவுணவாக தோசை வார்த்து தருவாள். தபால் மாஸ்டராக பணி செய்து ஓய்வு பெற்ற தாத்தாவுக்கு உடல் நலம் குன்றி மருத்துவ மனையிலே உயிர் பிரிந்ததும் அவர் பூத உடலுக்கு இறுதி சடங்கு செய்ய வீட்டிற்குள் அனுமதிக்க மறுத்துவிட்டார் வீட்டுக்காரர். அக்கம்பக்கம் உள்ளவர்கள் கூட சாவு வீடு என்ற பிரக்ஞை இல்லாமல் அவரவர் பணியை செய்ய வழக்கம் போல் போய்விடுகிறார்கள். பட்டணத்திலே யார் வேண்டுமானாலும் வந்து பிழைத்துக் கொள்ளலாம். ஆனால், அதன் குரூரத்தை சகித்துக் கொள்ள மனம் பழகிக் கொள்ள வேண்டும்.

ஐப்பசியில் நல்ல மழைக் காலத்தில் வந்தவன் ஆறு மாதங்கள் ஓடிவிட்டது. வெயிலும் வறட்சியும் வெளுத்து வாங்குகிறது. தெருக் கடைகளில் உண்பது ஒருநாள் போல் ஒரு நாள் இராது. மூன்று நாட்கள் அவன் அறையிலே தங்கிவிட்டான். வேலைக்கு செல்லவில்லை. அதற்கு யார் அப்படி பெயர் வைத்தார்களோ தெரியவில்லை - 'லூஸ்மோசன்'. அந்த மூன்று நாட்களில் குடிக்க நீரும், கழுவ நீரும் வழக்கத்தைவிட அதிகமாகவே தேவைப் பட்டது. தினசரி தண்ணீரின் பயன்பாட்டை அளவிடும் ஓனர், ஒரு குற்றவாளியை கண்டு பிடித்துவிட்டது போல் அவன் வாசல் முன் வந்து இரைந்தார். அவன் உடல் நலத்தைப் பற்றி சிறிதும் விசாரிக்காமல் உடனே வீட்டை காலி செய்துவிடும்படி உத்தரவு போட்டார். ஏற்கனவே உடல் அளவில் துவண்டு போய் இருந்த அவனுக்கு மனதும் நொறுங்கிப் போனது. 'என்ன ஊர் இது பட்டணத்தைவிட கிராமமே மேல்'-என்று நொந்து கொண்டான்.

அம்மாவிடமிருந்து அழைப்பு எதுவும் இல்லை. அவன் அழைத்தாலும் அவள் கையில் சில்லறை இல்லை. ஊருக்கு செல்வது என்ற முடிவுடன் மறுநாள் மாலைதனது பைகளை எடுத்துக் கொண்டு வீட்டுக்காரர் கதவை தட்டினான். புரிந்து கொண்டார். வாடகையை கழித்துவிட்டு மீதியை தந்துவிடும்படி கேட்டான். அவனை மேலும் கீழும் பார்த்துவிட்டு அடுத்து வரும் நபரிடம் வாங்கி உனக்கு அனுப்புகிறேன் முகவரி தந்து செல் என்று சொன்னதும் அவனுக்கு பாதி உயிர் போய்விட்டது. 'ஊரே தேவலாம். சென்னை ரொம்ப மோசம்'-என்று மருகிக் கொண்டே அவரிடம் விடை பெற்றான்.

மறுநாள் காலை அவன் ஊரை கடக்கும் முன் பேருந்துகள் எல்லாம் இரு பக்கமும் நின்றிருந்தது. போராட்டக்காரர்கள் சப்தமாக முழங்கிக் கொண்டிருக்கிறார்கள். பஸ்ஸை விட்டு இறங்கி நடந்தான். சிறிது தூர நடை பயணத்திற்கு பிறகு அவன் தெருவுக்கு பிரியும் முடுக்கில் இருந்த ஊர் பொது மேல் நிலை நீர் தேக்க தொட்டி முழுவதுமாக உடைத்துப் போடப்பட்டிருந்தது. அது மாவட்ட ஆட்சி யரின் உத்தரவுப்படிதான் நடந்தது என்று தெரிந்து கொண்ட பின்தான் பதறினான். அவன் வீட்டு வாசலில் அமர்ந்திருந்த அக்கா விடம், 'அம்மாவுக்கு என்ன ஆச்சு!?'-என்று கேட்டான். 'அம்மாவுக்கு மட்டும்மா. ஊரில் இருக்கிற எல்லோருக்கும வாந்தி பேதி...ஹாஸ்பிடலுல இருக்காக!'-என்றாள்.

ஏன்?'- என்று கேட்ட தம்பியிடம்,

'அத எப்படி என் வாயால சொல்ல..!'- என்றாள் அக்கா.

வேலையின் நிமித்தமாக பட்டணத்தின் பரபரப்பில் மூழ்கி இருந்தவனுக்கு தினசரி செய்திகள் அவனை பாதித்திருக்கவில்லை. குடி நீரில் மலமா? தன் கிராமத்திலா!

'கிராமத்தைவிட பட்டணமே மேல்'- என்று அனிச்சையாக வந்துவிட்ட வார்த்தை எனினும் மனம் நொந்துச் சொல்லும் போது துக்கம் தொண்டையை அடைத்தது!

# இளநீர் புடிங்



## தேவையானவை

பதமான இளநீர் 2
பால் 1 லிட்டர் (விரும்பினால் டின் பால் 200 மி.லி யும் சேர்க்கலாம்)
சீனி சுவைக்கேற்ப
நொறுக்கிய கஜு சிறிதளவு
நீல சங்குப்பூக்கள் 10-15 ( அல்லது நீல ஃபுட் கலரிங் சில துளிகள்)
சஞ்சா (அகர் அகர்) 25 கிராம்
ப்ளூ பெரி கோடியல் 2 மே.க
ஊற வைத்த சப்ஜா விதை Basil seeds அல்லது ஷியா விதை 2 மே.க ( விரும்பினால்)

## செய்முறை

சங்குப்பூக்களை கழுவி ஒரு டம்ளரில் போட்டு சுடுநீர் சேர்த்து மூடி வைக்கவும். கலர் தண்ணீரில் இறங்கியதும் வடிகட்டிக் கொள்ளவும்.

இளநீர் 1 டம்ளர் வேறாக எடுத்து வைக்கவும்.மிகுதி இளநீரை உள்ளிருக்கும் சதைப் பகுதியுடன் மிக்ஸியில் அரைத்தெடுக்கவும். ஒரு டம்ளர் நீரில் சஞ்சா 20 கிராம் சீனி சேர்த்து கொதிக்க விடவும். நன்கு கரைந்ததும் பால், அரைத்த இளநீர் கலவையை சேர்த்து நன்கு கலக்கி, அதில் பாதியளவை ஒரு கண்ணாடி கோப்பையில் ஊற்றி நீல சங்குப்பூ நீர் அல்லது நீல கலரிங் சேர்த்துக் கலக்கவும்.

ஆறியதும் ஃப்ரிஜ்ஜில் வைக்கவும். 5 நிமிடங்களில் செட்டாகி விடும். மிகுதிக் கலவையை செட்டான கலவையின் மேல் ஊற்றி மீண்டும் செட்டாகும் வரை ஃப்ரிஜ்ஜில் வைக்கவும். (இதில் வெள்ளை அல்லது நீலக் கலவையில் ஊற வைத்த கசகசா அல்லது ஷியா விதைகளை சேர்க்கலாம்)

எடுத்து வைத்த இளநீர் ஒரு டம்ளருடன் ஒரு டம்ளர் நீர், 5 கிராம் சஞ்சா சேர்த்து, கொதித்துக் கரைந்ததும் ப்ளூ பெரி கோடியல் கலந்து மேல் லேயராக ஊற்றி விடவும். மேலாக நோறுக்கிய கஜுவைத் தூவியோ, whipped cream அல்லது வெள்ளை நிற வெனிலா ஐஸ்க்ரீம், ப்ளூ பெரியால் அலங்கரித்து பரிமாறலாம். இதை பல அடுக்குகளாக செய்து கொள்ளவும் முடியும்.

வஃபிரா வஃபி

# பூரித்திருடன்

**அ.முத்துவிஜயன்**



அவன் தன் மனைவி மகளோடு சென்னை சென்டரல் ரயில் நிலையத்தில் தமிழ்நாடு விரைவு வண்டியில் தில்லி போவதற்காக நின்று கொண்டிருந்தான். அது கிளம்பும் நேரம் 10 மணியானாலும் 8,00 மணிக்கே வந்திருந்தான். கோவையில் இருந்து சென்னை வந்து குழுவினருடன் சேர்ந்து தில்லி செல்வ தாகத்திட்டம். மற்ற நண்பர்களும் வந்து காத்திருந்தார்கள். சாப்பாட்டுக்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அங்கே காத்திருக்கும் அரங்கின் எதிரே A2B யும் இன்னும் பல உணவகங்களிலும் கூட்டம் வழிந்துகொண்டிருந்தது. அப்போது அவனது அலைபேசிக்கு ஓர் அழைப்பு வந்தது. அதை எடுத்துப்பேசியபோது, அதில் ஒருவர் பேசினார்.

“உங்களின் பெயர் இதுதானே” என்று அவன் பெயரைச்சொன்னார்.

“ஆமாம் என்ன விடயம்” எனக்கேட்க...

அவர்... SWIGGY உணவு சப்ளை செய்யும் முகவர் என்றும் சிவப்பு நிற உடை அணிந்து A2B அருகே நின்று கொண்டிருப்பதாகவும் அவரை அடையாளம் கண்டு அழைக்குமாறும் வேண்டினார்.

இவர் சுற்றும்முற்றும் பார்க்க A2B அருகே ஒருவர் சொன்ன அடையாளங்களுடன் நின்று கொண்டிருந்தார். அவர் அருகே சென்று தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ள அவர் தன் போனில் இருந்து இவர் எண்ணிற்கு அழைத்து இவர்தானா என்று உறுதிப்படுத்திக் கொண்ட பின் இவரிடம் ஒரு பெரிய பார்சலைக் கொடுத்தார்.

அதற்கு இவன் “நான் எதுவும் SWIGGY யில் ஆடர் செய்யவில்லையே“ எனச்சொல்ல,

அவர்... “நீங்கள் ஆடர் செய்யவில்லை. உங்களுக்காக உங்களின் நண்பர் ஆடர் செய்துள்ளார்“ எனக்கூறிவிட்டு ஒரு எண் கொடுத்து தொடர்பு கொள்ளச்சொன்னார்.

இவன் அந்த எண்ணில் தொடர்பு கொண்ட போது அதில் பேசியவர் “டே என்னத் தெரியுதா? நாம் பள்ளியில் ஒன்னாப் படிச்சோமே ஞாபகம் இருக்கா? என் பெயர் கணேசன்” என்றதும், இவர் எந்த கணேசன் எனக்கேட்க...

“பூரித்திருடன் கணேசன் னு சொன்னா உனக்கு ஞாபகம் வரும்” என்று சொல்ல,

இவன் “டே அந்தக் கணேசனா நல்லா இருக்கியாடா இப்ப என்ன பண்ணுற எங்க இருக்க” எனக் கேட்க,

அவன் “சென்னையில் ஒரு சாப்ட்வேர் கம்பெனியில் பணி. சென்னையில் மனைவி மகனுடன் அப்பார்ட்மெண்ட் குடித்தனம். நீ நல்லாருக்கியா” எனக்கேட்டவுடன் இவனுக்கு ஆச்சர்யமாகப்போய்விட்டது.

“அது சரி, நான் இங்கு இன்று இப்போது இங்கே இருப்பது எப்படித்தெரியும்” எனக்கேட்டவுடன்...

அவன் சொன்னான் ”நான் உன் பேஸ்புக் பதிவுகளைத் தொடர்ந்து பார்த்து வருகிறேன்.

உனக்கு நட்பு வேண்டுகோள் கொடுக்க இயல வில்லை. நீ 5000 நண்பர்கள் என்ற இலக்கைத் தொட்டுவிட்டதால், உன்னை ஃபாலோ செய்கிறேன். அதில் தான் பார்த்தேன். நீ இன்று உன் மனைவி மகளுடன் தில்லிக்கு தமிழ்நாடு விரைவு வண்டியில் பயணம் செய்ய விருப்பதையும். அதற்காக காலை கோவையில் கிளம்பி, மதியம் சென்னை வந்து சேர்ந்ததையும் அறிந்து கொண்டேன். உன்னை திகைக்க வைக்க முடிவு செய்து இதை அனுப்பிவைத்தேன். 9.00 மணிக்கு அங்கு வருவேன். அதற்குள் நீ சாப்பிட்டு விட்டுத் தயாராக இரு. இப்போது கிளம்பி வந்து கொண்டிருக்கிறேன். நேரில் பேசுகிறேன்'' என்று அழைப்பைத் துண்டித்தான்.

இவனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. பார்சலை வாங்கிப் பிரித்துப் பார்த்தால்... அதில் மூன்று மட்டன் பிரியாணியும், ஃப்ரைடு கோழியும் இருந்தது. அத்துடன் ஒரு பூரிசெட்டும் தனியாக இருந்தது.

அந்தப்பூரிசெட்டைப் பார்த்தவுடன் இவன் நினைப்பு பள்ளிக்காலத்துக்கு பயணித்தது.

அது கோவை அருகே உள்ள ஒரு சிறிய கிராமம். அங்கு ஓர் அரசுப்பள்ளியில் தான் இவன் படித்தது எல்லாம். அப்போது ஏழாவது படித்துக்கொண்டிருந்தான் இவன். அந்தப் பள்ளியில் வீட்டில் இருந்து கொண்டு வரும் சாப்பாடெல்லாம் ஓர் இடத்தில் வைத்து விடவேண்டும் அது தனி அறை.

மதியம் உணவு இடைவேளையில் அங்கு சென்று எடுத்துவந்து மரத்தடியில் சாப்பிடு வார்கள். இவனுடைய வீட்டில் எப்போதும் அம்மா பூரிதான் கொடுத்துவிடுவார்கள். மற்ற பையன்கள் எல்லாம் தயிர்சாதம், எலுமிச்சை சாதம், இட்லி, தோசை என்று கொண்டு வருவார்கள்.

எல்லாப் பள்ளிகளிலும் நடப்பது போல எல்லோரும், கலந்து கொடுத்து வாங்கிச் சாப்பிடுவார்கள். அங்கு சாதி மதம், இனபேதம் எதுவும் கிடையாது.

ஆனால், தினம் இவன் கொண்டு வரும் பூரிகள் மட்டும் காணாமல் போய்விடும். யாரோ எடுத்துத் தின்று விடுவார்கள். பிறகு என்ன மற்றவர்கள் கொண்டுவரும் உணவை வாங்கிச் சாப்பிட்டு வயிற்றை நிரப்ப வேண்டியதாகிவிடும்.

இது ஒரு நாள், இரண்டு நாள் என்றால் பரவாயில்லை. தினமும் இதே கூத்து நடக்கும்.

அதனால், இவன் தன்னுடைய வகுப்பு ஆசிரியரிடம் தனியாக புகார் செய்தான். இது போலத் தினமும் பூரி களவு போகின்றது என்று...

வகுப்பு ஆசிரியரும், அவனைக் கண்டு பிடிப்பதாக உறுதி செய்தார். அதற்காகப் பள்ளி அலுவலர் ஒருவரையும் மறைந்திருந்து பார்க்க ஏற்பாடு செய்திருந்தார். பார்த்து வகுப்பாசிரியரிடம் சொல்லவேண்டும் யாருக் கும் சந்தேகம் வரக்கூடாது தெரியவும் கூடாது என்பது கட்டளை.

அந்த அலுவலர் கண்காணித்து யார் என்று சொல்லிவிட்டார். அவன் 11 மணி அளவில் வந்து அந்த அறையின் உள்ளே சென்று, அந்த குறிப்பிட்ட டப்பாவைத் திறந்து, உள்ளிருக்கும் பூரிகளை எடுத்துத் தின்றுவிட்டு, காலி டப்பாவை மூடிவைத்துவிட்டு, ஒன்றும் நடக்காததுபோல வந்துவிடுகிறான் என்று தகவல் கிடைத்தது.

மறுநாள் அவனைக் கையும் களவுமாகப் பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 11.00 மணி அளவில் அவன் வகுப்பு ஆசிரியரிடம், அவசரம் என்று ஒரு விரல் காட்ட... அவனை அனுப்பிவிட்டு அவனறியாமல் பின் தொடர்ந்தார் ஆசிரியர்.

அவன் நேராக உணவு டப்பாக்கள் இருக்கும் அறைக்குள் சென்று, அந்த பூரி இருக்கும் டப்பாவை எடுத்துத்திறந்து, பூரியை வாயில் வைக்கும்போது கையும் பூரியுமாகப் பிடித்துவிட்டார். பின் அவனை அழைத்து வந்து விசாரித்தபோது ஒத்துக்கொண்டதால் அதற்குத்தண்டனையாக சாப்பாடு நேரம்

வரை வெய்யிலில் நிற்க வைத்தார்.

அவன் வெய்யிலில் நிற்க எல்லோரும் வேடிக்கை பார்த்தார்கள். அவன் கொஞ்ச நேரத்தில் அழுக ஆரம்பித்தான். பின் திடீரென்று மயங்கி விழுந்தான். அதைப் பார்த்து எல்லோரும் கத்த, அவனை பள்ளிப் பியூன் முகத்தில் தண்ணீர் அடித்து எழுப்ப முயல முடியவில்லை.

உடனே விசயம் தலைமைஆசிரியருக்குச் செல்ல, அவர் அருகில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கொண்டு சென்றார்கள். அங்கு அவனைச் சோதித்த டாக்டர் உடனே குளுக்கோஸ் ஏற்ற வேண்டும் எனச்சொல்லி ஏற்றினார்கள். அப்போது டாக்டர் சொன்னார்... அவன் உடம்பு ரொம்ப வீக்காக இருப்பதாகவும், சரியான சாப்பாடு இல்லாததாலே மிகவும் மோசமாக இருப்பதாகச்சொன்னார்.

ஒரு வழியாக அவனைச் சரிசெய்து மீண்டும் பள்ளிக்கு அழைத்து வந்து விசாரித்தபோது சொன்னான்... அவன் குடும்பம் மிகவும் ஏழ்மையில் இருப்பதாகவும் சாப்பாட்டுக்கே மிகவும் சிரமம் என்றும், பள்ளிக்கு வந்ததும் பசி தாங்க முடியாமல் தான் திருடிச் சாப்பிடுவதாகவும் சொன்னான்.

அப்போது ஆசிரியர் கேட்டார் “அது சரி... ஏன் அந்த குறிப்பிட்ட பூரி மட்டும் எடுத்துச்சாப்பிடுகிறாய்'' என்று கேட்க... அவன் சொன்னான் “மற்றவர்களும் என்னைப் போலத்தான். ஏதோ ஒரு வேளை யாவது கிடைக்கிறது. அதையும் தான் சாப்பிட்டு விட்டால் அவர்கள் நிலைமை மோசமாகிவிடும். ஆனால் அந்த பூரி கொண்டு வரும் மாணவன் பெரிய வசதியான வீட்டுப் பிள்ளை. அவன் எப்படியாவது சமாளித்துக் கொள்வான்'' என்று...

இது தெரிந்தவுடன் இவனுக்கே பாவமாகப் போய்விட்டது. அவன் நன்றாகப்படிப்பான். வகுப்பில் முதல் மார்க் அவன் தான் வாங்குவான். ஆனால் பசி அவனை அப்படிச் செய்ய வைத்துவிட்டது என்று அறிந்து வருந்தினான். அப்போது அவனிடம் சொன்னான் “இன்றுமுதல் உனக்கும் சேர்த்தே நான் பூரிகொண்டு வருகிறேன் இருவரும் சேர்ந்தே சாப்பிடலாம்” என்று...

அன்றுமுதல் இருவரும் நல்ல நண்பர்கள் ஆகிவிட்டனர். ஆனால் 10 வது முடிந்த வருடமே அவன் வேறு ஊருக்குசெல்வதாகவும் பள்ளி மாறப்போவதாகவும் சொல்லி வேறு ஊருக்குச் சென்றுவிட்டான். அதற்குப்பிறகு இப்போதுதான் சந்திக்கப்போகிறான்.

அந்தப் பார்சலை பிரித்துச் சாப்பிட்டு முடிக்கவும், அவன் வரவும் சரியாக இருந்தது. வந்தவுடன் இவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

அப்போது சொன்னான்... “நன்றாக சாப்பிட்டாயா இந்தச்சாப்பாடும் பூரியும் தான் நம்மை இணைத்து வைத்தது. நான் வாழ்க்கையில் எதை மறந்தாலும் மறப்பேன் உன்னையும், நீ கொடுத்த பூரிகளையும் மறக்க முடியாது. உண்டி கொடுத்தோன் உயிர் கொடுத்தோன் நீ...” என்று கண்ணீர்கசியச் சொன்னான்.

இவனும் கண்களைத் துடைத்துக் கொண்டான். பழைய நினைவுகள் நெஞ்சில் வழிந்தோட.

---



**ஒரு எலுமிச்சம் பழம் எடுத்து பிழிந்து (சாறை வேறெதற்கும் பயன் படுத்தலாம்) தோலை பொடியாக நறுக்கி, அதனுடன் மிகச் சிறிய துண்டு இஞ்சியைத் தோல் நீக்கி துருவிச் சேர்த்து, ஒன்றரை டம்ளர் நீர் சேர்த்துக் கொதிக்க விடுங்கள்! பிறகு வடிகட்டி இளம் சூட்டோடு வெறும் வயிற்றில் 30 நாட்கள் குடித்து வர இதயத்தில் இருக்கும் அடைப்புகள் சரியாகும். சிறுநீரகம்,ஈரல் என்பவை சீராக வேலை செய்யும்.**

# உயிரில் கலந்த உறவுகள்

உலகில் காணும்
உன்னத உயிர்களின்
வாழ்க்கைப் பயணம்

அன்னைத் தந்தை
அண்ணன் தங்கை
ஆரம்ப தருணம்

கல்விக் குருவும்
தோழமை வரவும்
ஆனந்த மகுடம்

இணையும் மங்கை
மடியில் மழலை
அடுத்த கிரீடம்

பணியில் வெளியில்
உற்றோர் மற்றோர்
தொடரும் மனிதம்

உயிரில் கலந்த
உறவுகள் காட்டும்
தைரியம் முழுதும்

இதயம் சிறக்க
வானில் பறக்க
என்றும் உதவும்

தனியே வசிக்கும்
மனிதனின் நிலமை
மண்ணில் சிதையும்

- லீ.லியாகத்அலி

# புன்னகைக்க வேண்டும் உலகில்...

புன்னகைக்கத் தெரியாதவன் பூவுலகில் யாரும் இல்லை
புன்னகைக்கும் இனம் மனிதனன்றி வேறு இல்லை
மொழியில்லா புன்னகையை மழலை கூட புரிந்துகொள்ளும்.
படித்தவன்... பாமரன்... படித்தரம் இல்லாமல் புன்னகைக்க
மனிதரில் பல தரம் உண்டு...!

பூக்களின் விலா எலும்பு தேடும் வைபோகம் போல...
புன்னகையிலும் பல தரம் உண்டு.

ஏழையின் சிரிப்பு... ஏளனச்சிறப்பு... அழகுச் சிரிப்பு...
ஆணவச் சிரிப்பு... வறட்டுச் சிரிப்பு... வக்கிர சிரிப்பென
வரைமுறை காண வேண்டி இருக்கிறது புன்னகையிலும்...
கலப்படம் மனங்களில் கலந்துவிட்டதால்...
இதழ் புன்னகையிலும் விஷமம் விளையாடுகிறது...

அடுத்தவர் சிரிப்பில் வாழ்வை தொலைத்தவர் அதிகம்...
குடும்ப புன்னகைக்காக வாழ்வை தொலைத்தவரும் உண்டு.
புன்னகையா... அதுவே பொன் நகையாம்?
அதுவும் வாழும் சூழலாம்...
புன்னகைக்கான இடம் பூலோகம் தான்...
வாழும் முறையாலும்... நம் வாழ்க்கை முறையாலும்
புன்னகையை தொலைத்து வாழ்வதும் பூலோகத்தில்தான்...

உயரிய எண்ணம் கொண்டு பிறர் இதழில் புன்னகை மலர
பிணமாய் பாடையில் செல்லும்வரை
புன்னகைக்கும் பஞ்சம் ஏற்படும்...
புரிந்து கொள்ள வேண்டும் யாவரும்...
புன்னகை இதழ்களில் உருவாக எண்ணங்கள்மட்டுமே
உயர்வாய் உருவெடுக்க வேண்டும்...!

இலட்சிய புன்னகை உன் இதழ்களில் மலர்ந்தால்...
நாளை உன் வாழ்வில் வெற்றிதான்...
அதுவே நமக்கு அழியாச் சிறப்பு...!
சந்தோஷம் கண்டு புன்னகைப்பதை விட
புன்னகையே... சந்தோஷமாகும் பாதையில் பயணிப்போம்...!

ஏழையின் சிரிப்பில் இறைவன் உண்டு...!
கோழையின் சிரிப்பில்... அடிமை விலங்குண்டு...

உயர்ந்தே சென்ற மாணவனை மகிழ்வுடன் வாழ்த்தும்
ஆசிரியரின் புன்னகை... அற்புதமானது...!
பிரசவ வலி தந்த குழந்தை முகம் கண்டதும்...
புன்னகைக்கும் தாயின் புன்னகை புனிதமானது...!
புரிதல்களில்லா விடலைப் பருவம் புன்னகை... விபத்துக்குரியது.

அற்ப வார்த்தைக்கும் பெரியதோர் கூட்டம் புன்னகைக்கின்றதா
அதில் அரசியல் கலந்திருக்கும்...!
அங்கே நிச்சயமாக ஏழ்மை வதைபடும்...!

சாதிக்கத் துடித்து பிறந்தவனைப் பார்த்தும்
புன்னகைக்கும் இவ்வுலகம்
மெய்க்கும்... உளத்தூய்மைக்கும்...
மருந்தாகும் புன்னகையில்... பல சாதிகள் உண்டு
புரிந்துக்கொள்வோம் இன்றே... நன்றாய்!

- அஸ்மியா நிஜாம்

தொடர் - 1

# தளராத தன்னம்பிக்கை

உங்களை நீங்கள் எந்தளவு நேசிக்கிறீர்களோ அந்தளவுக்கு உங்களைப் பற்றிய பலங்களையும், பலவீனங்களைகளையும் கண்டறிந்து கொள்ளலாம். உங்களுக்குள் இருக்கும் ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் ஒரு வடிவம்தான் தன்னைப் பற்றிய தன்னம்பிக்கையாகும். 'தன்னால் முடியும்' என்ற அசராத நம்பிக்கையின் விளைவாக சாதனைகள் படைக்கப்படுகின்றன. தனக்குள் குடிகொண்டிருக்கும் திறன்கள் மூலமாக ஒருவன் தனக்கு வேண்டிய யாவற்றையும் அடைந்துகொள்கிறான். தன்னை உணரும் மனிதனே உண்மையில் தன்னம்பிக்கையான மனிதனாக மாறுகிறான். எது முடியும்? என்பது தெளிவானால் அது முடியுமே.

தன்னம்பிக்கையை தொலைத்துவிட்டு ஒருவனால் அரும் பெருஞ்செயல்களை செய்யத் துணிய முடியாது. ஒரு விடயத்தில் முழுமையான ஈடுபாட்டோடும் தளராத நம்பிக்கையோடும் பயணித்தால் அதில் வெற்றி பெறுவது நிச்சயமே. வாழ்வின் எல்லா நிலைகளிலும் தன்னம்பிக்கை மிக்க மனிதனாக இருப்பது ஒருவனை நிதானமான மனிதனாக மாற்றுகிறது. நிதானம் ஒருவனுக்குள் குடியமர அவன் தன்னை ஒரு தன்னம்பிக்கையாளனாக உருவாக்கிக்கொள்ள வேண்டும். துளியும் தளராத மனநிலையை எவ்வாறு உருவாக்க முடியுமென்றால் அவனின் சற்றும் தளராத தன்னம்பிக்கையின் மூலமாகவேதான்.

தன்னம்பிக்கையை தளர விடாமல் பார்த்துக் கொள்ள அடிக்கடி கீழ்வரும் விடயங்களை செய்து பாருங்கள்:

1. 'உங்களை நீங்கள் நேசிக்கிறீர்களா?' என்று ஒவ்வொரு நாளும் உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். அதன் விளைவாக உங்களை கடினப்போக்கோடு நடத்தாமல் உங்களது சுயத்தை இரக்கத்தோடு கையாளுங்கள்.

2. நேசிப்பதின் விளைவாக நீங்கள் உங்களை எவ்வாறு உணர்கிறீர்கள் என்று பரீட்சித்துப் பாருங்கள். கடந்துபோன விடயங்களை நினைத்து வருந்தாமல் அவற்றை மறந்து விட்டு எதிர்வரும் விடயங்களை அவதானத்தோடு எதிர்கொள்ளுங்கள்.

3. ஒரு செயலை குறிக்கோளாக வைத்து அதனை அடைவது குறித்த உங்களது தன்னம்பிக்கையின் அளவை தீர்மானிங்கள். உங்களால் அந்த குறிக்கோளை அடைய முடியுமா? என்பது பற்றி கற்பனை செய்யுங்கள். உங்களது பலங்கள், பலவீனங்களை பட்டியற்படுத்துங்கள்.

4. தன்னம்பிக்கைக்கான பொறிமுறைகளை உங்களது வாழ்வோடு இணைத்துப் பாருங்கள். ஏற்கனவே, நீங்கள் கடந்து வந்த பல்வேறு சவால்களை எதிர்கொண்ட விதங்களையும் அவற்றில் கற்றுக்கொண்ட பாடங்களையும் நினைத்துப்பார்த்தாலே உங்களுக்குள் தன்னம்பிக்கை கிணற்று நீராக ஊற்றெடுக்கும்.

முஷ்தாக் அஹ்மத்

ஊக்குவிப்பு பயிற்றுவிப்பாளர்
நிறுவனர், சேப்பிங் லைவ்ஸ்



# இன்றைய சமூகமும் நுரையீரல் புற்றுநோயும்

கிண்ணியா சபீனா

இன்று எம்மை வேகமாகத் துரத்தித் தாக்கிக் கொண்டிருக்கும் தொற்றா நோய்களில் புற்றுநோய் மிகக் கொடூரமானதாகும்! உடற் கலங்கள் அபரிமிதமாகப் பெருகிப் பின்னர் கட்டிகளாகஉருவெடுப்பதனையேபுற்றுநோய் என்பர்! இன்று இந்தியாவில் பொதுவாகப் புற்றுநோய்க்கு ஆண்டு தோறும் பத்துலட்சம் பேர் ஆளாகின்றனர்! இரண்டு லட்சம்பேர் பலியாகின்றனர் என அறியக் கிடைக்கின்றது! புற்று நோயினை ஆரம்பநிலையில் கண்டு பிடித்துச் சிகிச்சையளித்தால் சுகமாக்கி விடலாம் எனக் கூறப்படுகின்றது!

தேகத்தில் வருத்தங்கள் உறுத்துவதைக் கருத்திற் கொள்ளாமல் வேகமாக வேலைகளில் ஈடுபடுவதால் புற்று நோயின் தாக்கம் அதிகரித்து விடுகின்றது!

அந்த வகையிற், பலவிதப் புற்று நோய்க ளில் முதலிடம் பிடிப்பது நுரையீரல் புற்றுநோயாகும்! உயிர்கொல்லி நோயான இது எவ்வாறு ஏற்படுகிறது, இதனை எவ்வாறு தடுத்துக் கொள்ளலாம் என அறிந்து கொள்வது அவசியமாகும்!

உண்மையில் புகை பிடிப்பதன் மூலமும், புகை பிடிப்பவரின் புகை அருகில் இருப்பவரின் சுவாசத்துடன் புகை சேர்ந்து விடுவதன் மூலமும் இந்நோய் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகும்! அத்தோடு பெற்றோலிய மாசுக்கள் மற்றும், சீமெந்துத்தூசிகள் கல்நார்தூசி (அஸ்பெஸ்டார்தூசி) தொழிற்சாலைப் புகை போன்றவற்றால் மாச டைந்த வளியினைச் சுவாசிப்பதாலும் இந் நோய் ஏற்பட வாய்ப்புண்டாகின்றது! அது மட்டுமல்லாமல், பரம்பரையில் இந்நோய் இருப்பதும் ஒரு காரணமாகலாம்!பெரும்பாலும் புகைத்தலினாலேயே நுரையீரல் புற்றுநோய் ஏற்படுகின்றது! ஒருவர் தொடர்ச்சியாகப் பதி னைந்து வருடங்கள் புகை பிடிப்பவராயின் 90% இந்நோய் ஏற்பட வாய்ப்புண்டு என அறியக் கிடக்கின்றது!

நுரையீரல் புற்று நோயின் அறிகுறிகளாக, வறட்டு இருமல், மூச்சு விடுவதில் சிரமம், இலேசான காய்ச்சல், நெஞ்சுவலி, முதுகுவலி, உடல்நிறை குறைதல், தொண்டைக் கரகரப்பு, பசியின்மை போன்றவை உணரப் படும்!

ஆரம்பநிலையில் இந்நோய் கண்டுபிடிக்கப் பட்டால் சுகமாக்கலாம்! ஆனால் இதனைக் கண்டு பிடிப்பது கடினமானது! CT scan, MRI Nuclear scan, Bone scan, Tissue tests போன்ற முறைகள் மூலமே கண்டு பிடிக்கப் படுகின்றது! முதல் ஸ்டேஜ் நிலையில் அறுவைச் சிகிச்சையளிப்பின் 80-90% சுகம் காணலாம் எனக் கூறப்படுகின்றது!

உடற்கலங்களில் பரவினால், ரேடியோத் தெரபி, கீமோதெரபி, டார்கட் தெரபி, இமினோதெரபி எனச் சிகிச்சை அளிக்கப் படுகின்றது! மூன்றாம் ஸ்டேஜ் நான்காம் ஸ்டேஜ் நிலையில், டார்கட் தரபி, இமினோ தரபி எனும் சிகிச்சைகள் அளிக்கப் படுகின்றன!. இந்நிலையில் நோயாளியைச் சுகமாக்க முடியாது, ஆனால் உயிர் வாழும் காலத்தை நீடிக்கச் செய்யலாம் எனக் கூறப் படுகின்றது!

உயிர் கொல்லி நோயான நுரையீரல் புற்று நோயிலிருந்து நமது மானிட இனத்தைப் பாதுகாக்க; புகை நமக்குப் பகை ×என்பதை உணர்த்த வேண்டும்! மேலும் இரசாயனக் கழிவுளால் மாசு படுத்தப் பட்ட காற்றைச் சுவாசிப்பதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்! அத்தோடு கதிரியக்கச் சூழலில் இருந்தும் விலகிட வேண்டும்! முக்கியமாக மக்களிடையே இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்!

கொடிய நுரையீரல் புற்று நோயிலிருந்து எம் மானிடரைப் பாதுகாப்போம்! அதற்கான வழிமுறைகளைப் பின்பற்றிட விழிப்புணர்வினை ஏற்படுத்துவோம்!

# இன்னுமென்ன உறக்கம்!
(கவிதைகள்)

*ஆசிரியர் : கவிஞர் எல்.இரவி*
*பக்கங்கள் : 72*
*விலை : ரூபாய் 80*
*வெளியீடு : 'தமிழகம்',*
*அலைபேசி எண் : 99521 13194*




நண்பர், ஓய்வு பெற்ற தமிழாசிரியர், கவிஞர் எல். இரவி அவர்கள் எழுதிய 'இன்னுமென்ன உறக்கம்!' கவிதைத் தொகுப்பு நூலை வாசித்தேன்.

மிகவும் குட்டி குட்டியான கவிதைகள். 72 பக்கங்களில் சுமார் 95 கவிதைகள். அனைத்துமே கடுகு போல அளவில் சிறுசு; ஆனால் அவை தரும் பொருள் காரம் பெரிசு!

ஜாதிய வன்முறைகள், மதக்கலவரங்கள், அரசியல் தந்திரங்கள், வறுமை, காதல், தன்னம்பிக்கை, பாசம், உழைப்பு, தத்துவம் என அனைத்து பொருள்கள் பற்றியும் அர்த்தத்துடன் பொருள் செறிவுடன் கவிதைகள் புனைந்துள்ளார்.

அரசாங்கத்தின் திட்டங்கள் சாமானியன் வரைக்கும் சென்று சேர்வதில்லை என்பதை 'எங்கள் நம்பிக்கை!' என்ற தலைப்பின் கீழ்,

'எங்களுக்காக இயற்றப்படும் திட்டங்கள் எல்லாம்
எங்களைப் போலவே
திசைமாறிப் போய்விடுகின்றன'
என்று கவிதையாய் பாடுகிறார்.

தொலைக்காட்சித் தொடர்களில் அடிமையாகிக் கிடக்கும் பெண்களைப் பற்றி,

'கணவனின் வருகைக்குக் காத்திருப்பதை விட
தொலைக்காட்சித் தொடர்களுக்காக காத்திருக்கும்
குடும்ப குத்துவிளக்குகள்'
- எனக் குறிப்பிட்டு சாடியுள்ளார்.

மீனவர்கள் என்ற தலைப்பில்

'இவர்கள் - கடல் மூழ்கி
முத்து எடுப்பார்கள் சொத்து சேர்க்க அல்ல!
வயிற்று சோத்துக்காக...' என வரும் வரிகள் -

'ஆடி முடித்து இறங்கி வந்தா அப்புறம்தான்டா சோறு'
என்ற பாடல் வரிகளை ஞாபகப்படுத்துகின்றன.

அதே கவிதையின் அடுத்த பத்தியில்,

'அசைக்க முடியாத நம்பிக்கையில் இவர்களின் பயணம்
தொடர்ந்து கொண்டே இருக்கும்
கடல் அலை மேல்' என்று குறிப்பிடுகிறார்.

கடலில் மூழ்கி முத்தெடுப்பதையும் அதேபோல் 'கடல் அலை மேலே' பயணம் போவதையும் இங்கு குறிப்பிடுகிறார்.
அந்த கடைசி வரியை, 'கடல் அலை போல்' என்று முடித்திருக்கலாம்.

'இழந்ததை நினைத்து கன்னத்தில்
கை வைக்கும் இளைஞனே! இருப்பதை வைத்து -
உன் எண்ணத்தில் நம்பிக்கை வை வானம் உன்
வசமாகும்!'

- இது மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் தன்னம்பிக்கை ஊட்டும் கவிதை. 'நம்பிக்கை' என்ற தலைப்பில்.

இப்படியாக படிக்க, படித்து ரசிக்க, ரசித்து படித்த கவிதையைப் பற்றி யோசிக்க என பரவசம் உண்டாக்குகின்ற கவிதைகளைத் தொகுப்பாகக் கொண்டுள்ளது இந்நூல்!

படிக்கலாம்! ரசிக்கலாம்!!



*நூல் விமர்சனம் :*

**அ.முஹம்மது நிஜாமுத்தீன்**




# வேள்வித்தீயில்...

## மதிப்புரை

எழுத்துத்துறையில் எல்லோராலும் கோலோச்சிட முடியாது. அதுவும் ஒரு பெண்கவிஞர் எனும்போது போற்றப்பட வேண்டும். அப்படி மரபுக்கவிஞர்களில் ஒருவரான இலங்கை உடுவிலூர் கலா பெண்ணிய மரபுக்கவிஞராக பல ஏடுகளிலும், இணையத்திலும் வலம் வருகிறார்.

கவிதைகளோடு நின்றுவிடாமல் கதைகளும், கட்டுரைகளுமாக தின, வார, மாத இதழ்களில் தொடர்ந்து காணமுடிகிறது.

அத்தோடு நின்றுவிடாமல் மற்ற ஏனைய கவிஞர்களின் கவிதைகளையும் தொகுத்து நூலாக தந்திருப்பதுடன் யாழிசை குழுமத்தின் நிறுவனராகவும், மற்ற குழுமங்களில் நடுவராகவுமிருந்து செயலாற்றி முகநூலில் தனித்துவமாக பணிசெய்து சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறார்.

இன்று நமது கையில் கிடைத்திருப்பது உடுவிலூர் கலாவின் 7வது நூலான வேள்வித்தீயில்... கவிதை நூல். அதன் வாசம் நுகர வாய்ப்பு கிடைத்தமைக்காக மகிழ்ச்சி கொள்கிறேன்.

பெண்கள் தமது வாழ்வில் எதிர்நோக்கும் அவலங்கள், அச்சுறுத்தல்கள், சவால்கள், ஏக்கங்கள், ஏளனங்கள், ஏமாற்றங்கள், வேதனைகள் என்பனவற்றை வரிசைப்படுத்தி, கருப்பொருளாக கொண்டு பெண்ணிய சிந்தனைகளுடன் 60 கவிதைகளை அழகாகத் தந்திருக்கிறார்.

“மணக்கும் முல்லையாய்த்
துய்ய னென்தந்தைக்கு
தாழ் பணிந்து
சமர்ப்பணம்” செய்து துவங்குகிறார்.

“வாழமுடியாச் சோகங்கள்
அணைந்திட மாளாமல்
மாய்கிறேன் மனதின்
வலிகளோடு” என்ற வரிகள் நம்மை துயரக் கடலில் ஆழ்த்திச் செல்கிறது.

“முத்தமிட்டு வாழ்ந்து
கெடுப்போர், அழிப்போர்
கேடுசெய்வோர் நடுவே
துணிந்து நின்று
தூணாய் பலம் கொள்”

என பெண்ணின் வாழ்வை ஒளிமயமாக்க தைரிய விதையை மகளிரின் மனதில் விதைத்துச் செல்கிறார்.

“எழுதாத விதிகளை
எழுத்தெண்ணிப் படிக்கும் பெண்”களை விழிப்படையச் செய்வது தனது கடமையென எண்ணி பெண்களின் கண்ணீர் துடைக்கப் புறப்பட்டிருக்கிறார்.

“உணர்வின் ஆர்ப்பரிப்பில்
உலகம் சிறகடிக்க
உண்மை அறிந்தும்
ஊமை யாகிறேன்
விடியாத பொழுதொன்றில்
விடியலை நான்காண”

அவளெவ்வளவு துன்பங்களைக்
கடந்திருக்கவேண்டும். இவ்வரிகள்
நெஞ்சைப்பிழிகிறது.

"சுயமிழந்து சுதந்திரமிழந்து
சுகமே கொடுத்து
தொய்வின்றித் தொடர்கிறாள்
வேள்வித் தீயவள்"

தன்னையே மறந்து மற்றவர்களுக்காகவே
வாழும் தியாகிகளல்லவா பெண்ணினம்.

"தீயில்லா தீபமாய்
தீண்டியவர்களுக்கொளியாய்
எரிகிறேன் நானும்
… …
வாழ்வா சாவாவென
வாய்மொழி யுதிர
தாழ்நிலை நோக்கி"

இப்படி எண்ணற்ற கவிதைகள் இந்நூலில்
நிறைந்துள்ளன.

பாரதத்தில் பன்மொழி இசைக்குயிலாய்
பாடிப்பறந்த இசைக்குயிலின்
பிரிவாற்றாமையால்

"வானம்பாடியின் குரலோடு,
வையமும் விழிநீர்சிந்தி
விடைகொடுத்து அஞ்சலி" செய்திருக்கிறார்
கவிதைப் பூச்செண்டுகளால்.

"வந்தவழி மறந்து
வண்ண திரையிட்டு
செல்லுமிட மெங்கும்
செல்பேசித் துணையோடு"

இன்றைய காலமிப்படித்தானே கழிகிறது.
ஆடம்பரத்தை பற்றிக்கொண்டு
அலைகிறார்களே... குமுறுகிறார் நூலாசிரியர்.

"காலப்பெரு வெளியில் காமப் பேருணர்வு
சாலச் சிறந்ததென சான்றாய் இனவிருத்தி
… …
கவனமாய்த் தப்பிக்கும் கண்ணியவான்கள்"

எனக் கயவர்களைச் சாடுகிறார்.

"அப்பாவி அரும்புகளின் அற்ப சுகமதை
அனுபவித்து சாகடிக்கும் துயரம் முடிவுறுமா ?"

இப்படி மற்றொரு கவிதையில்
முன்வைக்கிறார்.

"அமிழ்தென அனைவருக்கும்
அன்பினை ஊட்டி
பெண்கல்விக்கு வித்திட்டு
பெருவிருட்ச நிழலாக
பண்பாடு பாரம்பரியங்களை
பக்குவமாய் விதைத்த
சிவத்தமிழ்ச் செல்வியைத்
தொழுது வணங்குகிறார்"

பெண்ணியம் காக்க, பெண்ணிய அடிமை
நீங்க, பெண்ணியச் சுதந்திரம் பேண.
தட்டிக்கேட்கிறார் நூலெங்கும் உடுவிலூர்
கலா. இவர்போன்ற பெண்ணியக்
காப்பாளர்கள் இருக்கும்வரை பெண்களின்
நிலை உயரும்.

"நெஞ்சத்தில் துஞ்சி நெருக்கத்திற் றிளைத்து
மஞ்சத்தில் மலரட்டும் மாண்பான காதல்"

மாண்பாக வாழ பச்சைகொடி காட்டி
காதலை வரவேற்கிறார்.

ஆர்ப்பாட்டமின்றித் தமிழ் இலக்கியவானில்
சிறகடித்துப்பறக்கும் கவிஞர் உடுவிலூர் கலா
இன்னும் பல நூல்களைத்தந்து தமிழுலகிற்குத்
தந்து மகுடம் சூடி உயர்ந்து சிறக்க
வாழ்த்துகிறேன்.

*400 இலங்கை ரூபாய் விலைகொண்ட
இந்நூலினைப்பெற +94 07707 24900
எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.*

**தமிழுமின்**



# புகழுக்கு நான்மயங்கேன்!

உள்ளத்தில் அழுக்கிருக்கும் உன்மத்தப் பேயிருக்கும்
ஊருக்கே உழைப்பதுபோல் ஒய்யாரப் பேச்சிருக்கும்
கள்ளத்தில் வாழ்விருக்கும் கசடெல்லாம் ஊற்றெடுக்கும்
காட்டாற்று வெள்ளம்போல் தற்பெருமை குடியிருக்கும்
பள்ளத்தில் வீழ்வோரைக் காப்பவராய் நடிப்பிருக்கும்
பண்பில்லா வாக்கிருக்கும் பரிகாசச் சிரிப்பிருக்கும்
முள்ளெடுத்து வீசுகின்ற முதிர்ச்சியிலா உரையிருக்கும்
முட்டாளாய் மற்றவரை நினைப்பதிலா உயர்விருக்கும்?

காற்றடித்தால் கருமைநிறக் காகிதமும் காக்கையாகும்
கண்மணிக்குள் புரையெழுந்தால் ஒளிமறைத்தே இருளாக்கும்
தூற்றுதலே தொழிலானால் தொல்லைகளே விளைந்தெழுமாம்
தொல்லுலகில் துரோகமெலாம் உடன்பிறந்தே தோன்றிடுமாம்
நாற்றமுடை ஊனுடம்பு நாம்மறைந்தால் பிணமாகும்
நல்லவர்போல் நடிப்பதெலாம் பின்னொருநாள் வெளியாகும்
போற்றுதலே தொழிலன்று பொறுப்புணர்வே நற்குணமாம்
புரையோடிப் போய்விட்ட பொய்யுணர்வே பொற்குணமா?

பிழையின்றி எழுதுதற்கு வழிவகையோ அறிந்திலராம்
பெரும்புலவர் அவைதனிலே மன்னவர்போல் நடைபயில்வார்
இழையோடும் நன்னட்பை நசுக்கிவிட்டுப் புன்னகைப்பார்
எழுகதிரை மினுக்கிவிழும் மின்மினிக்கே ஒப்பிடுவார்
பழையாற்றுப் பெருஞ்சோழன் திறனையெலாம் மதியாமல்
பசியெடுத்தால் கொடிபிடிக்கும் சிறுமதியின் நட்பாவார்
அழையாமற் போனாலும் அலைகடல்தான் ஓய்ந்திடுமா?
அருந்தமிழின் பிள்ளைக்கா அணிற்பிள்ளை கற்பிக்கும்?

தடம்பதித்து நடைபயில்வேன் தன்மானச் செருக்கினிலே
தமிழ்த்தாயின் கரம்பிடித்து தலையெழுத்தை எழுதிடுவேன்
அடம்பிடித்துப் பாசமைப்பேன் அதையெடுத்துப் பரிமாற
அறிவூற்றாய்ப் புறப்படுவேன் அவையோரின் மனம்புகுவேன்
வடம்பிடித்து நானிழுப்பேன் வண்ணமகள் தமிழ்த்தேரை
வாய்கிழியப் பேசாமல் செயல்வழியே நான்தெரிவேன்
புடம்போட்டுச் சுட்டாலும் பொன்னெனவே நானொளிர்வேன்
பொறுப்பான தமிழ்க்குழந்தை புகழுக்கா மயங்கிவிடும்?

**இராம வேல்முருகன்**
வலங்கைமான்

# வறுமையில் தென்றல்

உமா ஸ்வாமிநாதன்

வள்ளி... அந்த ஊரில் எட்டாம் வகுப்பு முடித்து விட்டு அவள் அம்மாவுக்கு உதவியாக வேலை செய்கிறாள். அந்த ஊரில் எட்டாம் வகுப்பு வரைதான் இருக்கு. அதற்கு மேல படிக்கணும் என்றால் பக்கத்து ஊருக்கு போகணும்.

வள்ளிக்கு படிப்பு நன்றாக வந்தும் மேல படிக்க வசதி இல்லை.

கை வேலைகள் ஓவியம் வரைவது அருமையா செய்வா. அக்கம் பக்கத்தில் எல்லார்க்கும் உதவியா இருப்பாள். மேலே படிக்க ரொம்ப ஆசைதான்.

எதிர் வீட்டில் இருக்கும் கோமதி பக்கத்து ஊரில் பத்தாவது படிக்கிறாள். அவளும் அவன் அண்ணன் ரவியும் சேர்ந்து போவதால் பள்ளிக்கு செல்ல கவலை இல்லை.

வள்ளி வள்ளி... என்று கூப்பிட்டுக் கொண்டே கோமதி, கையில் ஒரு பேப்பர் விளம்பரத்தைக் காட்டியபடி வள்ளியிடம் வந்தாள்.

வள்ளி,.. இங்க பார், 'பக்கத்து ஊரின் மிராசுதார்' அவருடைய பிறந்தநாளில் ஒரு ஓவிய போட்டி வைத்திருக்கார்!.

இதை படித்து பார்..

முதல் பரிசு ஐந்தாயிரம்<br>
இரண்டாம் பரிசு மூவாயிரம்<br>
மூன்றாம் பரிசு இரண்டாயிரம்<br>
என்று போட்டிருந்தது.

கோமதி, வள்ளியிடம் நீயும் இதில் கலந்துக்கோ பணம் கிடைத்தால் மேலே படிக்கலாம் அல்லவா என்றாள்.

மறுநாள் ஓவிய போட்டி.

சரி, நானும் வரேன்... அம்மாவிடம் கேட்கணும் என்றாள்.

'நீ என்ன வரையணும்னு யோசி'

நான் உங்க அம்மாவிடம் பேசறேன். நானும் அண்ணனும் கூட கலந்துக்கப்போறோம் என்றாள்.

கோமதி, நேரே போய் வள்ளியின் அம்மாவிடம் பேசி நான் போகும்போது அழைத்து போய், வரும்போது திரும்ப அழைத்து வந்து விடுவேன் கவலை வேண்டாம் என் அண்ணனும் கூட வருவான் என்றாள்.

வள்ளி ராத்திரி பூரா யோசித்தாள்.

அந்த ஊரில் தண்ணி கிடையாது! எல்லாரும் கொஞ்சம் தூரம் போய்தான் தண்ணீர்



உமா ஸ்வாமிநாதன்

கொண்டு வரணும். குடிக்க, குளிக்க எதற்கும் அங்கிருந்து தான் கொண்டு வரணும்.

ஒவ்வொருவரும் நான்கைந்து பானைகளில் நிறப்பி, தலையில் இரண்டு, இடுப்பில் இரண்டு, கையில் ஒன்றுமாக கொண்டுவருவார்கள். இது தினம் தினம் நடப்பது தான்.

தண்ணி எடுக்க போகும்போது எல்லாரும் சேர்ந்து போய் வருவார்கள்.

இந்த ஊரில் மட்டும் ஒரு பெரிய கிணறு இருந்தால் எல்லார்க்கும் சுமை குறையும் என மனதில் நினைத்துக்கொண்டாள்.

மறுநாள் ஓவியம் போட்டிக்கு, வள்ளி, கோமதி, ரவி மூவரும் சென்றனர். அங்கே இன்னும் நிறைய பேர் போட்டிக்கு வந்திருந்தனர்.

அவர்களே பேப்பர், பென்சில், கலர் எல்லாம் கொடுத்தார்கள். கோமதி ஒரு அழகான மயிலும், அவள் அண்ணன் ரவி இயற்கை காட்சிகளும் ரொம்ப அழகா வரைந் திருந்தார்கள்.

வள்ளி, நான்கு பெண்கள் தலையிலும், இடுப்பிலும், கையிலும் பானைகளோடு தண்ணிக்காக வெயிலில் நடந்து போவது போல் ஓவியம் வரைந்தாள்.

ஓவியம் அத்தனை தத்ரூபமாக இருந்தது.

எல்லாரும் அதையே திரும்ப திரும்ப பார்த்து கொண்டிருந்தார்கள். மிராசுதார்க்கும் அந்த ஓவியம் மிகவும் பிடித்தது.

எல்லா ஓவியங்களும் பார்த்து மார்க் போட்டு பரிசு அறிவிக்கப்பட்டது...

வள்ளிக்கு 'முதல் பரிசு' ஐந்தாயிரமும், கோமதிக்கு 'இரண்டாம் பரிசாக' மூவாயிரம் கிடைத்தது.

மிராசுதார் வள்ளியை கூப்பிட்டு மிகவும் பாராட்டினார்.

மிராசுதார், நான் உனக்கு உதவி செய்கி றேன் நீ மேற்கொண்டுப் படி என்றார்.

உடனே வள்ளி, இந்த பரிசு பணம் வைத்து நான் படிக்க முடியும். நீங்க உதவி செய்ய நினைத்தால், எங்க ஊருக்கு ஒரு பொது கிணறு கட்டித்தாங்க என்றாள். எல்லாரும் தண்ணிக்கு ரொம்ப தூரம் போகணும். அதனால் மிகவும் சிரமப்படுகிறோம். படிப்பைத் தொடர முடியாததற்கு இதுவும் காரணமாகும் என்றாள்.

மிராசுதாரருக்கு வள்ளியை பார்த்து ரொம்ப பெருமையாக இருந்தது. சீக்கிரமே அதற்கு ஏற்பாடு பண்றேன் என்றார்.

கோமதி மறுநாள் தன் ஸ்கூல் ஹெட் மாஸ்டரிடம் வள்ளியை பற்றி சொல்லி ரொம்ப நல்லா படிப்பா எனக்கும் அவள் தான் பாடம், கணக்கு சொல்லிகுடுப்பா அவளை ஸ்கூல்ல பத்தாவது சேர்த்துக்கணும் என்று கேட்டுக்கொண்டாள்.

ஒரு வருடம் வீட்ல இருந்ததால் பத்தாவது வகுப்பில் சேர்க்க முடியாது என்றார்.

அதற்கு நீங்க வேணா டெஸ்ட் வைங்க சார் நம்ம ஸ்கூலுக்கே முதல் மாணவியா வருவா என்றாள் கோமதி.

மறுநாள் டெஸ்ட்டில் வள்ளி சிறப்பாக செய்திருந்தைப் பார்த்து சந்தோஷப்பட்டு வீட்டில் பத்தாம்வகுப்பு பாடம் பாதிக்குமேல் நன்றாக படித்திருக்கிறாள் என்பதை உணர்ந்த ஹெட்மாஸ்டர் ரொம்ப சந்தோசமாக ஸ்கூல்ல சேர்த்து நன்றாக படித்து ஸ்கூலுக்குநல்ல பேர் வாங்கி தரணும் என்றார்.

ரொம்ப நன்றி சார். நான் நன்றாக படித்து இந்த பள்ளிக்கு பெருமை தேடி தருவேன் என்றாள் வள்ளி. ஆசிரியர்களுக்கும் இந்த வருடம் தங்கள் பள்ளி தான் முதலிடம் பிடிக்கும் என்ற நல்லதோர் நம்பிக்கை வந்தது.

இனி வள்ளியின் வாழ்வில் வறுமை நீங்கி தென்றல் வீசும்.

## தேனீக்கள்சேகரித்த சென்ரியு – நூல் விமர்சனம்

### தேனீக்கள் சேகரித்த சென்ரியு

*(21 பெண் கவிஞர்களின் தொகுப்பு நூல்)*

**தொகுப்பாசிரியர் - அன்புச்செல்வி சுப்புராஜு**
**விலை - ரூ.130 /-**
**பதிப்பகம் - நண்பர்கள் பதிப்பகம், குடியாத்தம்,வேலூர்.**
**தொடர்புக்கு -**
**அன்புச்செல்வி சுப்புராஜு 9841978029 /anuchelvi15@gmail.com**




*பதவி ஆசையில் திரியும் மனிதர்களுக்கு உலக நிலையாமையின் தத்துவத்தினை நகைச்சுவையுடன் வேடிக்கையாகச் சொல்லும் சென்ரியு,*

*“எப்பதவியும் / கிடைக்காதவருக்குக் கிடைத்தது /சிவலோகப் பதவி”*

*இக்கவிதையில் சிவலோகப் பதவி என்னும் வார்த்தையைப் பயன்படுத்திய விதம் இக்கவிதையினை நகைப்பண்பும் வேடிக்கைத் தன்மையையும் அதி சிறப்பாக அமைய காரணமாக திகழ்கின்றது.*

*மனித நடத்தைகளை நகைதோன்ற வெளிப்படுத்துவது சென்ரியு. இக்கவிதை வடிவம் தமிழில் 'நகைப்பா' எனும் பெயரில் வழங்கப் பெறுகின்றது. சென்ரியு கவிதைகள் மனித வாழ்வை அங்கதப் படுத்துவதுடன் மானுடப் புலனுணர்வையும் மிகுதியாக சார்ந்திருக்கின்றன. சென்ரியு கவிதைகள் பொருண்மை நிலையில் அறிவுரை, பொதுத்தன்மை, முரண், பொன்மொழி, அங்கதம், வேடிக்கை, விடுகதை, நகைச்சுவை ஆகிய பல நிலைகளில் விரிந்து வெளிப்படுகின்றன.*

***- முனைவர் .வே.மணிகண்டன்***

*21 தேனீக்கள்... சென்ரியு கூடு... அற்புதமான உழைப்பு... மலைத்தேன்... திகட்டாமல் கவிதைகள்.மாபெரும் ஆளுமைகளின் வார்த்தைகளை விடவா, நான் சொல்லிவிடப் போகிறேன்...*

*“பெண்கள் எல்லாம் ஒன்றாக சேர மாட்டார்கள் என்கிற ஆணாளுமையின் தவறான கருத்தியலை மாற்றியிருக்கிறது அன்புச்செல்வி அம்மாவின் பேருழைப்பில் வெளிவந்திருக்கும் இத்தொகுப்பு. படிக்கப் படிக்க மலைத்தேன். குடிக்க குடிக்கச் சுவைத்தேன், சுவை தேன்.”*

***- தேசிய குழந்தை விருதாளர் கு.அ.தமிழ்மொழி.***

*‘கவிஞர்கள் இன்னும் இன்னும் சென்ரியு கவிதைகளின் பாடுபொருளை விரித்து, தனித்தனி சென்ரியு தொகுப்பினை அளிப்பார்கள் என்ற நம்பிக்கை இவர்கள் படைத்தளித்துள்ள இந்தத் தேனீக்கள் சேகரித்த சென்ரியு கவிதைத் தொகுப்பு நம்பிக்கை அளிக்கிறது. வாழ்த்துகள்!‘*

***- முனைவர்.ம.ரமேஷ்.***

*“இந்நூலில் இடம் பெற்றுள்ள 21 பெண் கவிஞர்களின் சென்ரியுக்களைப் படிக்கும் போது, பல்வேறு நிலையில் மானுட அவலத்தை நாம் அறிந்து கொள்கிறோம்.இந்நூல் அனைவரிடத்திலும் இருக்கவேண்டிய நூல். இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள பெண் கவிஞர்களுக்கும், தொகுத்த கவிஞர்.அன்புச்செல்வி சுப்புராஜு மற்றும் வெளியீட்டாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.”*

*- கவிச்சுடர்.கா. ந . கல்யாணசுந்தரம்.*

*மரபு முக்கியம்தான்... ஆனால் மக்கள் கவிதைகளே மண்ணுக்கும், மொழிக்குமான பெருமைகள்... மூவரி வடிவில் ஒத்தவை என்றாலும் ஹைக்கூவும், சென்ரியுவும் வேறு வேறானவை... மக்களின் அன்றாட வாழ்வியலைச் சொல்லும் சென்ரியு வகைமைக் கவிதைகள்... இந்நூல் முழுவதும் படிப்போரை ஜப்பான் டீக்கடைகளுக்கு கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை. (ஜப்பானிய மதுக்கடைகளிலும் தேனீர் கடைகளிலும் சப்பானிய நடுத்தட்டு மற்றும் வணிகர்களால் வார்த்தை விளையாட்டாகத் தொடக்க காலத்தில் சென்ரியு கவிதைகள் எழுதப்பட்டு வந்தன.)*

விளைந்த வயல்
ஆங்காங்கே மேய்கின்றன
வணிகரின் கண்கள்

Ripen crop field
Grazing here and there
Eyes of the brocker

மக்கியும் மக்காமல் தொடரும்
தூய்மைப் பணியாளர்
வாழ்க்கை

Decomposed and undecomposed
It is continuing
Sanitation worker’s life

***- அன்புச்செல்வி சுப்புராஜு***



சமுதாய முன்னேற்றம்
மிகச் சிறப்பாக இருக்கிறது
சாதி அரசியல்

Social progress
It is being very good only
Caste politics

தியான அறையில்
ஊடுருவிச் செல்கிறது
ஆன்மீகப் பயணம்

Penetrates deeply
In the meditation room
A spiritual journey

- **கவிஞர்.பிரிதிவிராஜ் லோஜி**

ஆற்றங்கரை நாகரீகத்தின்
உச்சம் தொட்டுப் படிகின்றன
குப்பைக்கூள மேடுகள்

Of the riverine civilization
Reaching the peak and settling down
Garbage mounds

பத்திரப் படுத்திய புத்தகம்
புத்தம் புதிதாய்க் கிடைத்தது
பேரிச்சம்பழம்

Well preserved book
Got brand new from it
Dates

- கவிஞர்.அருள் சகோதரி.
ம.லூர்து அமல ஜெயந்தி Fsj

அழுக்குத் துணி
அலசுகையில் கரைந்து போனது
ஆட்சியராகும் கனவு

Dirty clothes
Dissolved on washing
Dream of becoming a ruler

தண்ணீரைத் தேடி
கோடிகள் செலவழித்துப் பயணம்
செவ்வாய் கிரகத்தில்

In search of water
Travel by spending crores
In Mars

- **ஜனனி குமார்**

மழை வேண்டி
ஊரெங்கும் யாகம்
கலக்கத்தில் நடைபாதை வாசிகள்

Praying for rain
Yagam everywhere
Pavement dwellers in chaos

ஊரைக் காக்கும்
அய்யனாரைச் சுற்றிலும்
இரும்பு வேலி

Ayyanar statue
All around it which protects the town
Iron fence

- லக்ஷ்மி கார்த்திகேயன்

வேலைக்கார அம்மா
கழுவிக் கழுவி ஊற்றுகிறார்
பக்கத்து வீட்டுக் கதையை

Servant mother
She washes out all the ins and outs
The story of the neighbor

மகளின் ஊதியம்
தள்ளிப் போடப்படுகிறது
திருமணம்

Daughter's salary
Postponed every time
Her wedding

- **சிவகாமசுந்தரி நாகமணி**

வரவேற்கும் அம்மா
தள்ளாமையை காட்டிக் கொடுக்கிறது
கிழிபடா நாட்காட்டி

Welcoming mother
Betrays the infirmity
Un teared calendar

வீட்டுக்குச் சென்று
ஆரோக்கிய உணவு உண்கிறார்
துரித உணவு கடைக்காரர்

Eats healthy food
After returning home
Fast food shopper

- **கவிதா**

மகளின் கோட்டோவியம்
நிறைய மீன்கள் இருக்கிறது
மீனவர் வலையில்

Daughter's line drawing
In the fisherman's net,
Plenty of fish

- **ஜலீலா முஸம்மில்**

சிறந்த சமூக சேவகி
பட்டம் வாங்கிய மாமியார்
முதியோர் இல்லத்தில்

A great social worker
The crowned mother-in-law
In an old-age home

மரம் நடுவிழா
மந்திரியின் வானூர்தி நிற்க
மூடப்படும் குளம்

The tree planting ceremony
To land minister's plane
Closed pool

- ஜோதி சரண்

"கற்பனையை விற்பனை செய்வதல்ல துளிப்பா. நிகழ்வியலை, அதாவது கண்டதை கண்டபடியே சொல்வதுதான் துளிப்பா. அதில் கூட்டல், கழித்தல், வகுத்தல், பெருக்கல் எதுவும் இருக்கக் கூடாது. எல்லாவற்றையும் சொல்வதல்ல துளிப்பா. கொஞ்சம் சொல்லி அதிகம் சிந்திக்க வைப்பதே துளிப்பா."

- தேசிய குழந்தை விருதாளர்
**கு.அ.தமிழ்மொழி.**

மென்மையான நகைச்சுவை உணர்வோடு சமுதாயத்தில் பல் வேறு துறைகளில் புரையோடிப் போயிருக்கும் அவலங்களை சுட்டி காட்டும் சென்ரியு கவிதைகள் நூல் முழுவதும் அலங்கரிக்கின்றன. ஒரு சில கவிதைகளை மட்டுமே எடுத்துக்காட்டப்பட... இன்னும் ஏராளம்... இந்த அற்புத முயற்சி யில், பல புதுமைகளை ஹைக்கூ வகைமைகளில் சோதித்து பெண் கவிகளை இணைத்து அருமையான நூல் தொகுத்தமைக்கு கவிஞர். அன்புச்செல்வி சுப்புராஜு அவர் களுக்கு தென் சுவைத்து திகட்டாமல் வணக்கங்கள்... மற்றும் அனைத்துக் கவிஞர்களுக்கும் வாழ்த்துகள்!

- **ராஜு ஆரோக்கியசாமி**



# நீதானா ...

இதயமெலாம் காத்திருப்பில்
இளைக்குதடி உன்னால் - நீ
எழுப்பிவிடு கண்ணால் - நான்
இசைகின்றேன் முன்னால் - உன்
கனவுகளைக் கைகளிலே
தரமுடியும் என்னால்
|
தனிச்சுவையே உனையுண்ணத்
தவிக்குதடீ கட்டில் - அதன்
தணலெல்லாம் மட்டில் - தரும்
தகுவொளியை விட்டில் - இனி
என்பசியை ஆற்றிடவும்
கனிகளுமேன் தட்டில்
|
சலசலக்கும் உன்சிரிப்பில்
சாட்சியடி வெட்கம் - மடி
சாய்ந்துவிடென் பக்கம் - அது
சந்தனத்தை யொக்கும் - கணை
இரவுபகல் பாராமல்
இடையிடையே புக்கும்
|
அல்லெல்லாம் நானணைக்க
இல்லையடி எல்லை - அட
கொல்லுதடி முல்லை - உடன்
சொல்லிவிடு சொல்லை - கரம்
தவங்கிடக்க வரமீந்தால்
தவழும்மடி பிள்ளை
|

ஏடி வரதராசன்



# தமிழால் நிறைந்தேன்

.

காதலை அகநா னூறும்
கனிவினைக் குறளும் மக்கட்
பேதமை இல்லா வாழ்வைப்
பிழையறு ஔவை யாரும்
மோதவோர் வீரந் தன்னை
முகிழ்கிற பரணி யோடும்
பூதலந் தன்னிற் கண்டே
பொழுதினைக் கழிக்கின் றேனே

.

கலைகளை அறிய வோர்நூல்
காமமும் விளங்க வோர்நூல்
நிலையுடல் நோய்வந் தாலும்
நிறைவுடன் விலக்க வோர்நூல்
குலைத்திடும் கிரகம் நீங்கக்
குறிப்புகள் அடங்கு மோர்நூல்
மலையெனக் குவித்து வாழ்வின்
மடைதனை விலக்கு திங்கே

.

அத்தனை இடர்க ளுக்கும்
அழகுடன் எழுதி வைத்தப்
புத்தகக் குன்றில் நானோர்
புல்லென வாழ்ந்து வாழ்ந்து
முத்தினை நூல்கள் தன்னில்
மூழ்கியே எடுத்தெ டுத்து
நித்தமும் நிறைவ தெல்லாம்
நீள்பெரும் தமிழின் ஊடே

**தமிழ்நெஞ்சம் அமின்**

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஆகஸ்ட் 2023

## விரைவில் வெளியீடு...

